## உள்ளே...

1. வசந்தத்தில் ஓர் நாள் 5

2. காதல் எந்தன் மீதிலென்றால்... 114

# வசந்தத்தில் ஓர் நாள்

## 1

கடல் அலைகளை ரசித்தபடியே, உப்புக் காற்று முகத்தில் மோதிட, கலைந்த ஒற்றைக் குழலை லாவகமாய் ஒதுக்கியபடியே எதிரே அமர்ந்திருந்த தன் காதலன் விஜய்யின் மேல் ஆசை ததும்பும் விழிகளைப் பாய்ச்சினாள் மதுரா.

''என்ன விஜய் இது? வந்து ரெண்டு மணி நேரமாச்சு. இன்னும் எத்தனை நேரம் தான் என் முகத்தையே பார்த்துக்கிட்டு இருப்பீங்க?''

''என்ன மது! அடுத்த ஒரு மாதம் நீ ஷோவுக்காக மும்பை போறே அதுவரை தாங்க வேண்டாமா?''

சர்வர் தட்டுகளை கையில் ஏந்தியபடி வந்து கொண்டு இருந்தான் இவர்களை நோக்கி!

"என்னைப் பார்த்தது போதும் வேற ஏதாவது ஆர்டர் பண்ணுங்க! ஏற்கனவே நாலு தடவை சர்வர் வந்திட்டு போயாச்சு!"

"மதும்மா! சிட்டியில் காதலர்களுக்குப் புகலிடம் தர்றதே பீச்சும், ரெஸ்டாரெண்டும்தான். ஒரு ஜூஸை ஆர்டர் செய்திட்டு மணிக்கணக்கா பேசலாம். யாரும் தடை சொல்லப் போறதில்லை!"

"யுவர் ஆர்டர் ப்ளீஸ்"?! அவர்களின் பேச்சை இடை வெட்டியது அந்த குரல்.

ஆரஞ்சு நிற சீருடையணிந்த அவன் கையில் இருந்த சிறிய பேடில் பென்சில் மூலம் சிக்கன் ஃப்ரைடு ரைஸ், கோபி மன்சூரியன் என்று குறித்துக் கொண்டு அளவான புன்னகையுடன் நகர்ந்தான்.

"மது..." விஜய்யின் குரலுக்கு டிஷ்ஷுவில் உதட்டை அழுந்த துடைத்தபடி இருந்த மதுரா "ம்..." என்றாள்.

"இந்தப் பயணம் அவசியம் தானா?"

"வாட் இஸ் திஸ் விஜய்? இது நம்ம எதிர்காலம் பற்றிய விஷயம் இல்லையா! எனக்கு மட்டும் உங்களை விட்டுப் பிரிஞ்சி போக ஆசையாயென்ன? இது நல்ல ஆப்பர் சூனிடி, யு நோ, நான் படிச்ச டெக்ஸ்டைல் டிசைனிங் கோர்ஸ்ஸை ப்ராக்டிக்கலா தொடரப்போறேன். எண்ணி ஒரு மாதம் தானே! மாடலிங் ஷோ முடிந்ததும் மறு நொடியே உன் கண் முன்னால் இருப்பேன் சரியா? கொஞ்சம் சிரிப்பா ப்ளீஸ்!"



"நீ சுலபமா சொல்லிட்டே, இத்தனை நாள் படிப்பு படிப்புன்னு அலைஞ்சே இப்போ ட்ரைனிங்! நீ என்னை காதலிச்சிருக்கவே வேண்டாம் மதுரா...!"

அவன் சொல்லவும் மலர்ந்த அவளின் முகம் வெய்யில் பட்ட மலராய் வாடியது.

"ஸாரி விஜய், யோசிச்சுப் பாரு! எங்கம்மா, அப்பாவுக்கு 2வது மனைவிதான். ஆனா நீலாம்மா ஆதிராவை எப்படி பார்த்துக்கிறாங்களோ அப்படித்தான் என்னையும் கவனிச்சிக்கிறாங்க. எந்த பொண்ணும் தன்னோட கணவனைப் பங்கு போட முன்வரமாட்டா? ஆனா நீலாம்மா எங்களை ரொம்ப அன்போட நடத்தறாங்க? இந்த உறவுகள் கிடைக்க நான் எத்தனை புண்ணியம் செய்திருக்கணும். அவங்க ஆசைப்படி நான் முன்னேற வேண்டாமா? அதுக்கு இது முதற்படி. ஏய்! ஏன் தலையில் கை வைச்சு உக்காந்திட்டே விஜய்."

"பின்னேயென்ன? மது நானே உன் கூடப் பேச இன்னும் கொஞ்ச நேரம் கிடைக்காதான்னு பாக்குறேன். நீ என்னடான்னா...?"

"சரி கோவிச்சிக்காதே! நேரமாயிடுச்சு. நான் கிளம்பவா? நாளை விடியல் நேரத்தில் டிரைன்?"

"ஏன்? கோடீஸ்வரரின் மகள் விமானத்தில் செல்லலாமே!"

"கிண்டலா" அவன் விலாவில் இடித்தாள். "அப்பா ஏற்பாடு பண்றேன்னுதான் சொன்னார். நான் தான் வேண்டான்னுட்டேன். ஏன் தெரியுமா? திருமதி. விஜய் ஆகப் போகிறேன். எல்லாத்தையும் பழகிக்க வேண்டாமா?"

"சாரி கண்ணம்மா என்னை மன்னிச்சிடும்மா" கெஞ்சலுடன் கூறிவிட்டு "நைட் போன் பண்ணும்மா" என்றான் கிண்டலான தொனியில்.

''நிச்சயமா'' அவன் தலையில் அடித்தாள். இருவரும் புன்னகையுடன் வெளியேறி பைக்கில் ஒன்றாய் அமர்ந்து சென்ற அந்தக் காட்சியைக் கண்ட இரண்டு கண்கள் கோபத்தில் அகண்டு விரிந்தன.

* * *

சந்தானபாரதி, ஆதிரா சில்க்ஸின் அதிபதி. சமூகத்தில் ஒரு முக்கியமான அந்தஸ்த்தில் இருப்பவர். சிறு வயதில் தன் சொந்த ஊரான மதுரைக்குச் சென்ற போது பார்வதியை காதலித்து மணந்தார். 2 வருட இனிய இல்லறம் ஒவ்வொரு நாளும் இன்பமே ஆறாய் பெருக்கெடுத்து ஓட, நாட்கள் நகர்ந்தன. ஆனால் அவர்களின் அன்பின் அடையாளமாய் ஒரு குழந்தையில்லாமல் போனது.

கோபக்காரரான தந்தைக்குப் பயந்து தன் திருமணத்தை மறைத்து வைக்க அதுவே எதிர் விளைவை தோற்றுவித்தது. சந்தானபாரதிக்கு அவருடைய மாமா மகள் நீலாவைத் திருமணம் செய்ய ஏற்பாடு நடக்க மெல்லவும் முடியாமல் முழுங்கவும் முடியாமல் தவித்தார் அவர். பார்வதி தான் அந்த இக்கட்டான நேரத்தில் கூட, கணவரை சமாதானப்படுத்தினாள்.

''என்னங்க நமக்கும் கல்யாணம் ஆகி இரண்டு வருடம் ஆச்சு! இன்னும் குழந்தையில்லை. இப்போ இருக்கிற சூழ்நிலையிலே உங்க பெத்தவர்களிடம் நம்ம விஷயத்தையும் சொல்ல முடியாது. பேசாம இந்த கல்யாணத்துக்கு ஒப்புக்கோங்க!''

பார்வதியின் பேச்சு அவருக்கு வியப்பளித்தது. ''என்ன பேசறே பார்வதி உன் மனசில ஆசையை விதைச்சி இத்தனை காலம் குடும்பமும் நடத்திட்டு இப்ப போயி இன்னொருத்தியை நான் எப்படி மனசால நினைச்சுப் பார்க்க முடியும். இது உனக்கு செய்யுற துரோகம் ஆகாதா?''



''எல்லாமே நம்ம நினைப்பிலே தாங்க இருக்கு. எத்தனை பெரிய குடும்பத்து பிள்ளை நீங்க! இந்த ஏழையை விரும்பித் திருமணமும் செய்து இப்போ எனக்காக உங்க சுகங்களைக் கூட இழக்கத் தயாரா இருக்கீங்க. அந்தவொரு நல்ல மனசில நான் குடியிருக்கேன்னு நினைச்சா அதை விட வேறுயென்ன பெருமை இருக்க முடியும்?''

''எல்லா உறவுகளையும் எதிர்பார்த்துப் பெறலாம் ஒரு ஆண்மகன் தனக்கு வரப்போகும் மனைவியை, தோழமையை, ஒரு பெண் தன் உறவுகளை, துணையை, உடன் பிறப்புகளை எல்லாம் இப்படித் தான் இருக்கணுமின்னு நினைக்கலாம். ஆனா எந்த குழந்தையும் தன்னோட பெற்றவர்கள் இவர்களாகத்தான் இருக்கணுமின்னு எதிர்பார்ப்பது இல்லை.''

''பெத்தவங்கதான் வாழும் தெய்வங்கள்; அவங்களை காயப்படுத்த வேண்டாம்! நம்ம விருப்பத்தை தெரிவிக்கும் சமயம் இதுயில்லை.''

''ஆனால் உன் நிலைமை?''

''இப்போ நீங்க ஒண்ணும் என்னைக் கைவிடலையே. இதே மாதிரி அன்போட நீங்க எப்பவும் இருந்தா அதுவே எனக்குப் போதும். வேற எதையும் நான் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கலைங்க.''

சந்தானபாரதி அரைகுறை மனதோடு ரயிலேறினார். பார்வதியின் தூரத்து உறவான ஒரு பெரியவரின் தயவில் அவளுக்கு டீச்சர் வேலை கிடைக்க ஏதோ வண்டி ஓடிக் கொண்டு இருந்தது. சந்தானபாரதியும் அவ்வப்போது வந்து போவதுண்டு. அக்கம் பக்கத்தினரின் துளைக்கும் விழிகளுக்கு அவர் வெளியூரில் பணிபுரிவதாயும் விடுமுறைக்கு மட்டும் வந்து செல்வதாயும் கூறப்பட்டது.

சொல்லி வைத்தாற்போல் முதல் வருடமே ஆதிரா பிறந்து விட, காட்டன் மில்ஸ் தொழிலோடு ஆதிரா சில்க்ஸ் என்ற ஜவுளிக்கடையை நிறுவினார். எல்லாம் சீராய் ஓடிக் கொண்டிருந்த நேரம் பார்வதி தான் கருவுற்று இருப்பதாக தகவல் தெரிவித்தாள். நீலாவின் காதுக்கு விஷயம் எட்டாமல் தன் முதல் மனைவியைச் சந்தித்து வந்தார்.

வருடங்கள் உருண்டோடின. சந்தானபாரதியின் பெற்றோர்களும் ஒன்றன் பின் ஒன்றாய் காலமாகி விட, நீலாவிடம் எப்படியாவது பார்வதியைப் பற்றி தெரிவித்து விட வேண்டுமென்று எண்ணி முயன்று தோற்றுப் போனார். காரணம் நீலாவின் பிடிவாத குணம் அவள் நல்லவள் தான்; ஆனால் தான் நினைப்பது செய்வது மட்டுமே சரியென்பாள்.

கணவன், மனைவி இருவருக்குள்ளும் அநேக கருத்து வேறுபாடுகள் உண்டு. ஆனால் அது மகள் ஆதிராவுக்குத் தெரியாமல் பார்த்துக் கொள்வார்கள்.

உண்மையை நீண்ட நாள் ஒளித்து வைக்க முடியாது. பார்வதிக்குத் துணையாய் இருந்த அந்த வயதானவர் இறந்த பின், பார்வதியை ஊருக்கு அழைத்து வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது சந்தானபாரதிக்கு! தவிரவும், மதுராவும் தன் மகள், அவளும் சுகங்களைப் பெற்று சமூகத்தில் அந்தஸ்துடன் வாழ வேண்டும் என்ற நினைவில் நீலாவிடம் திக்கித் திணறி அத்தனையையும் கூறிவிட்டார் அவர்!

மிக நீண்ட மௌனத்திற்குப் பின், ''நான் அவங்களைப் பார்க்கணும்'' என்றாள் நீலா.

மறுநாளே அவர்களை அழைத்து வந்து விட்டார் சந்தானபாரதி; மிகுந்த மனபாரத்துடன் தான் இருவரும் அந்த



மாளிகையின் படியேறினார்கள். நீலாவிற்குப் பின்னால் ஒளிந்திருந்த ஆதிராவைக் கண்டதும் ஒரு பயபந்து உருண்டது அவருக்கு. பனிரெண்டு வயதான அந்தச் சிறு பெண்ணிடம் தான் கூனிக்குறுகி நிற்கும்படி நீலா கத்தி ஆர்ப்பாட்டம் செய்து விடுவாளோ என்று தான் பயந்தார்.

ஹாலில் சோபாவில் அமர்ந்தனர் அனைவரும், இறுக்கமான சூழ்நிலை. யார் பேசுவது என்ற தயக்கம் ஒவ்வொருவருக்கும். ஆனால் பெரியவரின் தயக்கம் குழந்தைகளுக்கு எதுக்கு? வந்த 10 நிமிடங்களில் ஆதிராவும், மதுராவும் நல்ல தோழிகளாயினர்.

இருவரும் அவரவர் தாயின் முன் நின்று கொண்டு, ''அம்மா இந்த மதுவை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கும்மா!''

மதுராவோ பார்வதியிடம் ''என்னம்மா! நாம நீலாம்மா, அக்கா கூட இந்த வீட்டுலேயே இருப்போம்மா. அங்கே போனா நம்ம மட்டும்தானே தனியா இருக்கணும்...!''

''இங்கேன்னா அப்பாவும் நம்ம கூடவே இருப்பாங்க. இல்லை ப்ளீஸ்ம்மா சரின்னு சொல்லும்மா!'' குழந்தை மதுவின் கெஞ்சலும், பார்வதி அதற்கு பதில் கூறத் தெரியாமல் நீலாவின் முகத்தையும், கணவரின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்த தவிப்பும் நீலாவை மனமிரங்கச் செய்திருக்க வேண்டும்.

தானாகவே முன் வந்து, ''இனிமே நீயும் உங்கம்மாவும் இங்கே தான் இருக்கப் போறீங்க.''

''அப்ப உங்களையும் நான்...''

''அம்மான்னே கூப்பிடலாம் நான் உங்க அம்மாவிற்கு அக்கா முறை புரியுதா?'' மதுவின் இளங்கன்னத்தில் தட்டினாள்.

"ஆதி உன் தங்கையை கூட்டிக்கிட்டு விளையாடப் போ" பிள்ளைகளை அனுப்பி விட்டு பார்வதியிடம் வந்தாள்.

"பார்வதி! அவர் என்னிடம் இப்போதான் எல்லா விஷயமும் சொன்னார். இதை முன்னாடியே சொல்லி இருந்திருந்தா நாம இத்தனை நாள் பிரிஞ்சிருக்க வேண்டிய அவசியம் இல்லை."

"அக்கா உங்களுக்கு எம்மேல எதுவும் கோபமில்லையே...?"

"ச்சே அவருடைய வாழ்க்கையில் எனக்கு முன்னாடியே வந்தவள் நீ. பிள்ளைங்க வந்திடப் போறாங்க. வந்து குளிச்சிட்டு சாப்பிடு. இது உன் வீடுதான் இயல்பா இரு!" சொல்லிவிட்டு நகர்ந்து விட்டாள் நீலா.

பார்வதியும், சந்தானபாரதியும், வியப்பை முகத்தில் கொண்டு வந்தனர். அன்றிலிருந்து இன்று வரை அதே சுமூகமான நிலை நீடித்து வருகிறது.

## 2

சந்தானபாரதி மனைவிகள் விஷயத்தில் மட்டுமல்ல மகள்கள் விஷயத்திலும் கொடுத்து வைத்தவர் தான். ஆதிரா, சுண்டினால் ரத்தம் வரும் அளவுக்கு நிறம், சுடர் வீசும் பேரழகு எம்.பி.ஏ. பட்டதாரி படிப்பு முடிந்தவுடன் தானே முன்வந்து ஆதிரா சில்க்ஸ்ஸின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றாள்.

மதுராவும் அழகுதான்; ஆதிரா ஆளை அடித்துப் போடும் அழகு என்றால் மதுவின் அழகோ குத்து விளக்கை ஒத்தது. தன் இறுதியாண்டுப் படிப்பான டெக்ஸ்டைல் டிசைனிங் கோர்ஸ்ஸை முடித்துவிட்டு அடுத்து செய்ய வேண்டிய விஷயத்தை ஊகிக்கும் போதுதான் இந்த ட்ரைனிங்கிற்கான வாய்ப்பு வந்தது. வருடந்தோறும் நடைபெறும் மாடலிங் ஷோ இந்த வருடம் கணேஷ் சில்க்ஸ் ஸ்பான்ஸர் செய்திட மும்பையில் நடக்கிறது.



சந்தானபாரதியும், கணேஷ் சில்க்ஸ்ஸின் உரிமையாளரும் நெருங்கிய நண்பர்கள். ஒரு விழாவில் நண்பரை சந்திக்க நேர்ந்த போது தன் மகன் வாசுதேவன் மும்பையில் மாடலிங் ஷோ ஒன்றை நடத்தப் போவதாகவும், மதுராவும் அதே துறையைச் சேர்ந்த படிப்பைப் படித்திருப்பதால் அங்கு ட்ரைனிங் போகச் சொன்னார். இது அவளின் திறமையை வளர்க்கும் என்றும் கூறவே அந்த யோசனை சரியென்றே சந்தானபாரதிக்கும் தோன்றியது.

இப்படியாக உருவான நிகழ்விற்குத் தான் தன் அருமை காதலை விட்டுப் பிரிந்து செல்கிறாள் மதுரா.

"என்ன மதும்மா எதுவுமே சாப்பிடலையாம்?" கட்டிலில் அமர்ந்து தன் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்த மகளிடம் கேட்டார் சந்தானபாரதி.

"பசியில்லைப்பா, முதன் முறையாக உங்க எல்லாரையும் பிரிந்து ஒரு மாசம்... ரொம்ப நெர்வர்ஸா இருக்கு."

"நல்லாயிருக்கு! நாளைக்கு உன்னைத் தேடி பெரிய பொறுப்புகள் எல்லாம் வரும் மதும்மா, அதற்கு நீ உன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டாமா? தவிரவும் மும்பையில் நீ தனியாக இருக்க வேண்டியதில்லை. என் நண்பனின் மகன் வாசுதேவன் வீட்டிலேயே இருக்கலாம்."

''யாரு கணேஷ் சில்க்ஸ் உரிமையாளரின் மகன் வாசுவா?'' கேட்டபடியே உள்ளே நுழைந்தனர் பார்வதியும், நீலாவும்.

''ஆமாம் இந்த ஷோவை நடத்தப்போறதே அவன் தான். மதுவுக்கு நல்ல துணையாக இருப்பான்'' அந்த ''துணையாக'' என்ற வார்த்தைக்கு அப்பா அதிக அழுத்தம் தந்ததாய் தோன்றியது மதுவிற்கு.

''அக்கா எங்கே?'' பேச்சை மாற்றினாள்.

''இன்று ஷோருமில் சம்பள நாள் இல்லையா. வரத் தாமதமாகும் என்று போன் செய்திருக்கிறாள்.''

''சரி மதும்மா, அம்மாவை பால் தரச் சொல்றேன். நீ தூங்கு காலையில் நாலு மணிக்கு அலாரம் செட் பண்ணி யிருக்கேன்.''

மகளின் தலையை வாஞ்சையோடு வருடிவிட்டு சென்றார் தந்தை. ''எல்லாம் எடுத்துகிட்டியா மதுரா?''

''ஆச்சம்மா.''

''போயிட்டு போன் பண்ணு! ஒரு மாதம் உன்னைப் பார்க்காம எப்படியிருக்கப் போறேன்னு தெரியலை.''

''கவலைப்படாதிங்க அம்மா! நான் நல்ல விதமா இருப் பேன்.''

நீலா பீங்கான் கோப்பையில் பாலை நிரப்பியபடி வந் தாள் ''இந்தா மது இந்த பாலைக் குடிச்சிட்டு தூங்கு எல் லாம் பேக் பண்ணிட்டியா?''

''ம்...''

''ஆல் தி பெஸ்ட் மதுரா டெபனட்லீ யூ ஹேவ் எ பிரைட் ப்யூச்சர்.''

''தேங்க்யூ நீலாம்மா.''



பெரியவர்கள் நகர்ந்ததும் மதுரா தன் செல்போனை எடுத்து விஜய்யின் எண்களை ஒற்றியெடுக்க மறுமுனை யில், ''பார்த்த முதல் நாளே'' பாடல் கேட்டது.

வெண்மையான பனி மலர்களை தூவிய படியே புலரும் அதிகாலை விடியல். ஜன்னலின் வெளியே இலை களின் பனித்துளி முத்தமிட்டுக் கொண்டிருக்க மலர்ந்த பூக்களில் வண்டுகளின் ரீங்காரம், குளிர்ந்த காற்று உடலைத் தழுவ அலங்காரமான அந்த அறையின் நடுவில் இருந்த கடிகாரத்தை நோக்கினாள் ஆதிரா.

நேரம் ஐந்து முப்பதைக் காட்டியது. இரவு வீடு திரும் பும் நேரம் நள்ளிரவு ஒரு மணி. எத்தனை நேரங்கழித்து உறங்கினாலும் அதிகாலையிலேயே எழுந்து விடும் பழக்கம் அவளிற்கு. படிக்கும் போது ஒட்டிக் கொண்டது.

சோம்பல் முறிப்பதற்காக கண்ணாடி முன் நின்று கைகளை மேலே உயர்த்தினாள். ஸ்லீவ்லெஸ் நைட்டி யில் அவள் செழுமை பளிச்சிட்டது.

''ஆதிரா.''

சரேலெனத் திரும்பினாள் ''என்ன சித்தி?''

''பால் எடுத்திட்டு வந்தேன், நீ சாப்பிடக் கூடயில்லை யேம்மா.''

''கொஞ்சம் வேலை அதிகம் தீபாவளி நெருங்கு தில்லையா அதனால ஸ்டாக் எடுத்து வைச்சிருந்தோம். அதனால தான் லேட்டாயிடுச்சு.'' பார்வதி கொடுத்த பாலை உறிஞ்சியபடியே கூறியவள் ஏதோ நினைவு வந்தவளாய், ''மதுரா போயாச்சா?'' என்றாள்.

''உன்கிட்ட சொல்லிட்டுப் போக காத்திருந்தா நீ வர தாமதமாயிடுச்சில்லை, அதனால தான். சரிம்மா நீ கொஞ்ச நேரம் தூங்க வேண்டியதுதானே.''

தூங்கணும். கோப்பையை திரும்பித் தந்து விட்டு நகர்ந்தாள்.

ஆதிரா எப்பவுமே இப்படித்தான் மதுராவைப் போல் கலகலப்பான சுபாவம் கொண்டவள் இல்லை. நறுக்குத் தெறித்தாற்போல் தான் வார்த்தைகள் வந்து விழும். அந்த கண்டிப்பும் கறாரும் தான் இத்தனை பெரிய துணிக் கடையை நிர்வகிக்கும் திறன் அவளிற்கு வந்தது போலும் என்று பார்வதி அவ்வப்போது நினைப்பதுண்டு.

சிறுமியாக இருந்த ஆதிராவுக்கும் குமரியான இவளுக் கும்தான் எத்தனை வேறுபாடு. அவள் எந்நேரமும் பார்வதி யம்மா என்று கழுத்தைக் கட்டிக் கொள்வாள். பெரியவ ளான சில நாளிலேயே அவள் பழக்கும் மெல்ல, மெல்ல மாறத் தொடங்கியது. முன்பு போல் அதிகம் பேசுவ தில்லை. அளந்துதான் பேசுகிறாள். பார்வதியை அம்மா வென்று அழைத்தவள் சித்தி என்று கூப்பிட்டாள். சில நேரம் அவள் முகத்தில் குழப்ப ரேகைகள் படருவதுண்டு. ஆனால், குழந்தை மனம் கொண்ட பார்வதியால் அதை யெல்லாம் புரிந்து கொள்ள முடியவில்லை.

பார்வதி வெளியே வந்ததும் அறைக்கதவு மூடிக் கொண்டது. எதிர்பட்ட "கணவரிடம் எங்கே போறீங்க?" என்றாள்.

"ஆதிராவைப் பார்க்க! பேசணும்."

"ஆமா! நீங்க என்ன பேசப் போறீங்கன்னு தெரியாது. இரவெல்லாம் கண்முழிச்சிட்டு இப்பதான் படுக்க போறா எது பேசணுன்னாலும் காலையில பத்து மணிக்கு பேசுங்க" என்று கணவரை அழைத்துக் கொண்டு போனார் பார்வதி.

"ஆதிரா சில்க்ஸ்" பிரம்மாண்டமான பெயர் பலகை யுடன் தியாகராய நகரின் முன்னணியில் கம்பீரமாய்



நிமிர்ந்து நிற்கும் ஐந்து மாடி கட்டிடம். புடவைகள், ஆண்களின் உடைகள், குழந்தையுடைகள் என்று அனைத்து ப்ளோர்களிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

சேல்ஸ்மேன்கள் இயந்திரத்தனமாய் இயங்கிக் கொண்டு இருக்க, தன் குளிர்சாதன அறையில் அமர்ந்து கொண்டு, அன்றைய தினம் பர்சேஸ் பில்களை சரிபார்த்தபடியே, டி.வி.யையும் கவனித்துக் கொண்டு இருந்தாள். திடீரென ஒரு கட்டத்தில் அவள் கண்கள் நிலைத்து நின்றன.

சிகப்பு சட்டையணிந்து பளீரென்ற பல் வரிசையுடன் யாரோ ஒரு வயதான பெண்மணியுடன் சிரிப்பது இவன்... இவன் மதுராவுடன் பீச்சில் பார்த்தவன் ஆயிற்றே. அவள் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே அடுத்த ப்ளோர் திரையில் விழுந்தது.

அது அனைத்து ப்ளோர்களில் அமைக்கப்பட்ட அட்டாச்சுடு வீடியோ கேமிரா மூலம் தோன்றும் காட்சி களை படமாக்கும் டி.வி. இரண்டாவது ப்ளோரில் ஸாரீஸ் கலெக்ஷன்ஸ் அங்குதான் அவன் இருந்தான். அடுத்த செகண்ட் கவுண்டர் வர ஐந்து நிமிடங்கள் பிடிக்கும். அது வரை காத்திருக்கத் தோன்றாமல் அறையை விட்டு வெளியேறி செகண்ட் ப்ளோருக்கு விரைந்தாள்.

பட்டுப்புடவை ஷெக்ஷனுக்கு வந்தாள். முதலாளி வரவும் அவ்விடம் மேலும் விறைப்பானது. கண்களை நாலாபுறமும் சுழற்றினாள். அவன் இல்லை. மறுபடியும் விஷ்வல் பார்த்தாள்.

அவன் கிரவுண்ட் ப்ளோரில் பில் பே பண்ணிக் கொண் டிருந்தான். அருகில் இருந்த இண்டர்காம் மூலம் கேஷ் கவுண்டருக்கு பேசினாள்.

"இப்ப எத்தனாவது பில் ஓடிக்கிட்டு இருக்கு?" என்றாள்.

"307 மேடம்."

"ஓ.கே. கேரி ஆன்."

பெரிய கடைகளில் இதுபோல கேஷ் கவுண்டருக்கு பேசி எத்தனை மணிக்கு எவ்வளவு பில் போயிருக்கு என்று கேட்பது வழக்கம்.

இறங்கி டெலிவரி கவுண்டருக்கு வந்தாள். வாங்கிய பொருட்களை சரி பார்த்தபடியே அங்கிருந்து நகர்ந்தனர் விஜய்யும் அந்த பெண்மணியும்.

"லாஸ்ட் பில் நம்பர் என்ன?"

"307 மேடம்."

"அமவுண்ட்?"

"ரூ.7,500/- மேடம்."

"சரி கேசவன் கம் டூ மை ரூம்."

"யெஸ் மேடம்" அந்த டை கட்டியவன் அவள் பின்னாலேயே சென்றான்.

"கேசவன் பில் நெம்பர் 307னோட அட்ரஸ் எனக்கு வேணும்."

"அட்ரஸ் நாம எழுதி வாங்குவதில்லையே?"

"அந்த பில்லோட காப்பி தாங்க! அதில் அமவுண்ட் ஏழாயிரத்திற்கும் மேல், நார்மலா 5000க்கு மேல எடுத்தாலே நாம குலுக்கல் முறையில் பிரைஸ் தர்றோமில்லையா? அதுக்கு அட்ரஸ் வாங்கி வைச்சிருப்பீங்களே அதையும் எடுத்துட்டு வாங்க."

அவன் விரைந்து அடுத்த ஐந்து நிமிடத்திற்குப் பின் வந்தான். கையில் ரோஸும் வெள்ளையும் கலந்த



கம்ப்யூட்டர் பில்லை கவனித்தாள். அந்த பில்லிற்கான ரசீதைப் பிரித்தாள். அவள் பிரித்த வேகம் கேசவனை வியக்கச் செய்தது.

"மிஸ்டர், விஜயகுமார்,

த/பெ.சந்திரசேகர்,

எண்: 31/2, பாந்தியன் சாலை,

சென்னை-600 008" என்றிருந்தது.

தொலைபேசி எண்: 25952210 என்றிருந்ததை தன் செல்போனில் குறித்துக் கொண்டு திருப்பித் தரவும் வெகு பவ்யமாய் அதைப் பெற்றுக் கொண்டு வெளியேறினான் கேசவன்.

# 3

பரப்பி வைத்திருக்கும் உணவு வகைகள் ஒன்றுமே பிடிக்கவில்லை. ஆதிராவுக்கு ஏதோ சாப்பிட்டதாய் பேர் செய்து விட்டு எழுந்து விட்டாள்.

பாவம் வேலை வேலை என்று ஓடி பிள்ளை ஒழுங்கா சாப்பிடுறது கூட இல்லை. பெரியவர்கள் அங்கலாய்த்தனர். ஆதிராவின் மனதில் மாபெரும் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

அன்றைய காட்சி மனதில் நிழலாடியது. அன்று ஓட்டலில் விஜய்யின் அருகில் மதுராவின் முகத்தில் தான் எத்தனை சந்தோஷம், எத்தனை திருப்தி. இதை வளர விடக்கூடாது. யோசித்தபடியே நடந்தவளின் கால்கள், அறை வாயிலில் நின்றன.

உள்ளே நுழைந்தால் இருட்டு குழுமி இருந்த இடத்தில் விளக்கொளியை வழிய விட்டால், தன் அறைக்கு சளைக்காமல் மதுராவின் அறையும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆதிராவின் மனம் குமைந்தது.

என்னை போலவே சுகம் அனைத்தும் கிடைப்பதற்கு அவளுக்கு என்ன தகுதி இருக்கிறது. ஆத்திரம் அவள் கண்களை மறைக்க, மேஜையின் மேல் இருந்த மதுராவின் புகைப்படத்தை எடுத்து தூர வீசினாள்.

ஆரம்பத்தில் அதாவது, தன் 12வது வயதில் முதன் முதலில் மதுராவை கண்ட போது, தனக்கு நல்ல துணை என்று தான் ஆதிரா எண்ணினாள். ஆனால், விவரம் புரியப் புரியவும் சக தோழிகளின் கிண்டல் பேச்சுகளும், அவளுக்கு மதுராவின் மேல் கோபம் கோபமாக வந்தது.

ஆனால், தாயும் தந்தையும் மதுராவிடமும், பார்வதியிடமும் காட்டும் அன்பு அவளை ஒரு முறை யோசிக்க வைத்தது. இருந்தாலும் மனம் வெறுப்பில் புகைந்தது. குழந்தைகளுக்கு தன் பெற்றவர்கள் தான் ரோல் மாடல்களாக விளங்குவார்கள்.

ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு தாயின் மேல் உள்ள ஈர்ப்பு, தந்தையின் மேல் மாறும் பிள்ளைகள், மனதில் அவர் ஒரு ஹீரோ போல் தோன்றுவார்.

சக தோழிகளிடம் என் அப்பா தான், அப்படி, இப்படி என்று பெருமை பேசும் பழக்கம் குழந்தைகளுக்கு உண்டு. அப்படிப்பட்ட பேச்சுகளில் நண்பர்களின் நடுவில் பெரும் காயப்பட்டாள் ஆதிரா. காரணம் தன் தந்தைக்கு 2 மனைவிகள் கொண்டதால் தான் என்பது அவள் மனதில் ஆழப்பதிந்துவிட்டது. அவள் தனக்குள்ளேயே புழுங்கினாள். யாரிடமும் பேசாமல் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று நத்தையாய் கூட்டுக்குள் சுருங்கினாள்.



சில நேரங்களில் தாய் தனிமையில் கண்ணீரில் கரைவதை கண்டு இருக்கிறாள். மகள் தவித்து காரணம் கேட்டால், மழுப்பி விடுவாள். ஒரு முறை தன்னையும் மீறி மனம் நொந்த சொற்களை வெளியேற்றினாள்.

அன்றைய தினம் வேலைக்காரி கனகம் அழுது வடிந்த முகத்தோடு வந்து நின்றாள். என்னவென்று விசாரிக்க, ''தாயீ, என் புருஷன் என்னை விட்டுட்டு ஒரு சின்ன பொண்ணை இழுத்துக்கிட்டு ஓடிட்டான்.'' வாய் விட்டு அழுத அவளை நீலா தான் சமாதானப்படுத்தினாள்.

''அழாதே கனகம். உனக்கு நடந்த துரோகம் மன்னிக்க முடியாததுதான். பெண்கள் கணவனை கைக்குள் வைச்சிருக்க தெரிஞ்சிருக்கணும். இல்லேன்னா எல்லா ஏமாளிப் பெண்களையும் போல சங்கடப்பட வேண்டியது தான்.''

கனகம் அழுகையுடன் நகரவும்,''என்னம்மா நீ அவளுக்கு ஆதரவா ஏதாவது பேசுவேன்னு பார்த்தா கூட கொஞ்சம் அழ வைச்சிட்டியே?''

''இல்லேடா ஆதி, ஒரு பெண்ணுக்கு ஏற்படுற பெரிய கேவலம் என்ன தெரியுமா? அவள் தன் கணவனால் மறுக்கப்படுவதுதான். அதை உணர்வுபூர்வமாக அனுபவிச்சவ நான்.அந்த வேதனை எனக்குத்தான் புரியும்.'' சொல்லிவிட்டு நீலா செல்லவும், திக் பிரமையில் நின்றுவிட்டாள் ஆதிரா எனும் 18 வயது பெண். அன்று நெஞ்சில் விழுந்த அடி என் தாயின் மன வேதனைக்கு காரணம் இந்த பார்வதியும், மதுராவும் தானே.

இவர்களின் நிம்மதியை எப்படி குலைப்பது? என்ற நினைப்பில் அப்போதே விழுந்து விட்டாள் ஆதிரா. அன்று நீரு பூத்த நெருப்பாய் புகைந்த விஷயம் இன்று காட்டுத்தீ என கொழுந்துவிட்டு எரிகிறது.

ஆதிரா ஆயிரம் முறை யோசித்தாள். என்னுடைய இந்த செய்கையால் நிச்சயம் மதுராவின் மனதில் ரத்தம் வழியும். ஆம்! இதுதான் சரி. என் தாய் அடைந்த வேதனையை அவள் அடைய வேண்டும்.

மகளின் வாழ்வு பறி போனதை எண்ணி பார்வதி தினம் தினம் கண்ணீர் விட்டு அழ வேண்டும். அதற்கு இது தான் சிறந்த வழி. ஆதிரா முடிவு செய்து விட்டாள். இனி அந்த மதுராவின் வாழ்வில் இன்பமே இல்லை. விஜய் யின் முகம் மனதில் ஒரு முறை வந்து போனது.

மதுரா மும்பைக்கு வந்து இன்றோடு 3 நாட்கள் ஆகிறது. அம்மா, அப்பாவிடம் பேசியாயிற்று. விஜய்க்கு முயன் றாள். ஆனால் அவன் தாயின் குரலே கேட்டது. கட் பண்ணி விட்டாள்.

நேரம் காலை ஒன்பதை நெருங்கிக் கொண்டிருந்தது. அது நெரிச்சலில் இருந்தது போல் இன்றி சற்று தள்ளி இருந்த மினி பங்களா, வாசுவின் பங்களாவான அதில் தான் இந்த 3 நாட்களாக வாசம்.

சுவர் முழுவதும் ஓவியங்கள், மார்பிள் பதிக்கப்பட்ட தரை கண்ணாடி கதவுகளை மறைக்கும் அழகான திரைச் சீலைகள், சுற்றிலும் மயக்கும் பல வண்ண மலர் செடிகள், பவுண்டேன், சாண்ட்லியர் விளக்குகள் என குறை சொல்ல முடியாத பங்களா அது.

அத்தனை பெரிய வீட்டில் வாசுவும், சமையல்கார மாதவனும் தான். வழக்கமாக காலை 8 மணிக்கே



காபியுடன் மாதவன் வந்து விடுவான். ஆனால் ஏனோ இன்று ஒரு மணி நேரம் மேலாகியும் காணவில்லை.

யோசனைகள் பின்னலிட எழுந்து சமையல் கட்டுக்கு வந்தாள். வாசு இரவு உடையில் தோளில் துண்டுடன் பார்க்கவே வேடிக்கையாய் இருந்தது. "என்ன வாசு இது வேஷம்?" கலகலவென சிரித்தாள்.

"ஏன் சிரிக்கமாட்டே மது? மாதவனோட அம்மாவிற்கு உடல் நலம் இல்லையாம்மா. நைட் போன் வந்தது. பறந்துட்டான். எனக்கு காலையில் காபி சாப்பிட்டே ஆகணும். அதான் கிடந்து அல்லாடுறேன்."

"நகருங்க. நான் கொண்டு வரேன். காபி போடுற அழகை பாரு."

"தாங்க்யூ."

அவன் விலக, இருவருக்குமாய் அளவாய் சர்க்கரை, புருவை கலந்து காபி தயாரித்து டிரேயில் எடுத்துச் சென் றாள்.

"காபி எப்படி வாசு?"

"ஃபைன், ஏன் மது, மல்ட்டி மில்லியனர், சந்தானபாரதி யோட டாட்டர், உனக்கு காபி கூட போடத் தெரியுமா?"

"கடவுளே நான் நல்லா சமைப்பேன். வாசு! எங்கம்மா எனக்கு எல்லாம் சொல்லித் தந்து இருக்காங்க."

சரி, காபியை குடி. ஆறிட போகுது. இருவரும் காபியை பருகினார்கள்.

வாசு, சந்தானபாரதியின் நண்பரின் மகன் மும்பையில் மாடலிங் ஷோ நடத்தி வருகிறான். இப்போது கூட நவ நாகரீக உடைகளுக்கான ஷோவிற்காகத்தான் மதுவும், தன் டிசைன்களை தரவும் டிரெயினிங்கிற்காகவும் வந்தாள்.

வந்த நாளிலேயே முதல் பார்வையிலேயே வாசுவை அவளுக்கு ரொம்பவும் பிடித்துப் போனது. ஆண்களில் கூட அத்தனை அழகு உண்டா? என வியந்தாள் மதுரா. உதாரணமாய் அவன் கண்கள் அன்பும், கருணையும் வழியும் கண்கள். அந்த கண்களின் வசீகரம் எவரையும் கவர்ந்திழுக்கும். அத்தனை வசீகரம், சிவந்த நிறம் அவன் கம்பீரத்திற்கு மேலும் அழகு சேர்த்தது.

''வாசு ஷோ எப்போ நடக்கப் போகுது?''

''10-ந் தேதி அதாவது இன்னும் 12 நாட்கள், அதுவரையில் டிரெயினிங் தான். நம்மிடம் மொத்தம் 8 கம்பெனிகள் இருக்கு. ஒவ்வொரு கம்பெனி சார்பாகவும் 6 அல்லது 7 மாடல்கள் வருவார்கள். அவர்களுக்கு நடப்பது, உடை அணிவது இதெல்லாம் கற்றுத்தரணும்.

''நம்ம ஷோ மெரிடியன் ஹாலில் நடக்குது. ஸ்டேஜில் ஒய்யாரமாய், மெடுக்காய், நளினமும் அழகும் சேர நடக்க பயிற்சி தரணும். 8 கம்பெனிகளும் பேன்சி துணிகளை ஷோவிற்கு முதல் நாள் கொண்டு வருவார்கள்.''

''ஏன்? மாடல் ஷோ நடத்துவதால் என்ன லாபம்?''

''என்ன அப்படி கேட்டுட்ட மது? சவுத் இந்தியன் மாடல் ஷோவில் துணி உற்பத்தி கம்பெனிகள் பங்கேற்று தங்களுடைய டிசைன்களை மாடல்களின் மூலம் அறிமுகப்படுத்துவார்கள். இந்த மாடல் ஷோ டி.வி.யில் ஒளிபரப்பப்படும். அதன் பிறகு விளம்பர கம்பெனிகள் மூலம் அவர்களுக்கும் லாபம், உற்பத்தியாளர்களுக்கும் லாபம். இப்ப புரியுதா?''

''யா, நல்லா புரியுது. சரி வந்து 3 நாள் வீட்டிலேயே இருந்தாச்சு. எப்ப வேலையை ஆரம்பிக்கிறது?''



''இன்னும் 2 நாள் நல்லா ரெஸ்ட் எடு. மும்பையில் முக்கியமான இடங்களை பார்ப்போம். அதைவிட இன்னும் ஒரு ஆப்ளிகேஷன்.''

''என்னது?''

''காபி பிரமாதம். அதேபோல் இன்று மதியம் மட்டும் சமைத்துடு. மாதவனுடைய சமையலில் உப்பு, உரப்புன்னு எதுவுமே இருக்காது. அம்மாவோட சாப்பாடு சாப்பிட்டே எத்தனையோ நாளாச்சு?''

''இப்படித்தான் வாசு வேலை, பணமும்னு சொல்லிட்டு சொந்த பந்தங்களை விட்டுட்டு வெளியூர் வந்துடுறாங்க. ஆனால் அவங்க இதனால எத்தனை இன்பங்களை இழக்கறாங்க தெரியுமா?''

''சரியாச் சொன்னே. நான் கூட ஊருக்கு வந்துடலாம்னு இருக்கேன். சரி, மார்க்கெட் போவோமா? லிஸ்ட் போட்டு தர்றியா?''

அவள் எழுதி தந்ததை பெற்றுக் கொண்டு கிளம்பினான் வாசு. புன்னகையுடன் கிச்சனில் நுழைந்தாள் மதுரா.

வீடு மணத்தது. வாசு தேவையில்லாமல் அடிக்கொரு தரம் கிச்சனுக்குள் எட்டிப்பார்த்துக் கொண்டான். நேரம் ஒரு மணி அடிக்கவும், மதுரா தயாரித்த உணவு வகைகளை அடுக்கவும் சரியாய் இருந்தது.

''வாசு இன்னைக்கு சைவ சாப்பாடு தான்.. நாளைக்கு மட்டன் சிக்கன் ஏதாவது செய்வோம்.''

''சீக்கிரம் மது, வாசனையே ஆளைக் கொல்லுது.'' அவன் தட்டை கையில் எடுத்துக் கொண்டு தயார் ஆனான்.

சாம்பார், கிழங்கு அவியல், சிப்ஸ், சுட்ட அப்பளம் இதை தவிர வெஜிடேபிள் ரைசும் செய்து இருந்தாள். கொசுறாய் கட்லெட் வேறு.

மிகவும் சிலாகித்து பாராட்டினான். அவனின் ஆர்வமும் இவளினுள்ளும் உற்சாகத்தை தோற்றுவித்தது. உணவு உண்ட பின் தோட்டத்தில் சிறிது நேரம் நடந்தார்கள்.

பின்னர் காரை எடுத்துக் கொண்டு சில முக்கியமான இடங்கள், தராவீர், மந்திர், கேட் ஆப் இந்தியா பஜார் என்று சுற்றினார்கள். கைக்கொள்ளாமல் பொருட்களை வாங்கினார்கள்.

இறுதியில் தொல் பொருள் ஆய்வகம் ஒன்றில் நுழைந்தனர். மிக அழகான கண்ணாடி மணிகள் பதித்த காக்ரா செட் ராஜஸ்தானி பெண்களின் உடை. விலை மட்டும் மூவாயிரத்தை தொட்டது. மதுராவால் அவ்வுடையின் மேல் இருந்து கண்ணை அகற்ற முடியவில்லை.

''என்ன மதுரா உனக்கு இந்த டிரஸ் பிடிச்சிருக்கா?''

''ஆமா, வாசு ரொம்ப நல்லாயிருக்கு. இது என்ன உடை?'' ''ராஜஸ்தானி பெண்களின் திருமண உடை இது. அவர்கள் உடன்கட்டை ஏறும்போது கூட இதை தான் அணிவார்கள். அந்த கடை சிப்பந்தி கூறினான்.''

''மதுரா நீ இந்த டிரசை ரொம்ப லைக் பண்றே. உனக்கு என்னோட கிப்டா இது வைச்சுக்கோ.''

''தாங்க்யூ வாசு.'' வீட்டில் அனைவருக்கும் ஒவ்வொரு பொருளை வாங்கி காரில் அடுக்கி விட்டு வெளியிலேயே டின்னரை முடித்து விட்டு வீட்டுக்கு வந்தார்கள்.

அணிந்திருந்த கார்ட்டன் சுடிதாரை பார்த்தால் கசங்கி இருந்தது. மெல்ல உடலை ஒரு முறை வளைத்து சோம்பல் முறித்தாள். சோர்ந்திருந்த முகத்தை குளிர்ந்த தண்ணீரில் கழுவி டிஸ்யூவை கொண்டு ஒற்றி எடுத்தாள்.



அணிந்திருந்த சுடிதாரை உருவி வெளிர் மஞ்சள் நிற இரவு உடையை அணிந்தாள். சற்று நேரம் காலாற நடந்தால் தேவலாம் போல் இருந்தது. கதவை திறந்து இறங்கி கால் பதித்தாள். குளிர்ந்த காற்று மெல்ல உடலை தழுவ சிலிர்த்தது. முன்புற பவுண்டேஷனில் இருந்து தண்ணீர் வழிந்தோடியது. ஆங்காங்கே மஞ்சள் விளக்கொளியில் பூக்கள் கண்ணை பறித்தன. மரங்கள் ஜோடியாக நில்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் பிரிந்து நிற்க அந்த மரங்களின் பின்னணியில் படர்ந்து நின்ற இலைகள் என்னிடம் குசலம் விசாரிப்பது போல் இருந்தது.

கம்பி கூடுகளின் உள்ளே பல வண்ணக் குருவிகள் ரீங்காரம் எழுப்பிட புன்னகையுடன் அதனிடம் நகர்ந்தாள். சிறிய அலகு திறந்து உண்பதும், குரல் எழுப்புவதும் ரசிப்போடு பாட வேண்டும் போல் இருந்தது.

மெல்லிய குரலுக்கு லவ் பேர்ட்ஸ், லவ் பேர்ட்ஸ் என்று பாடினாள். சிறிது நேரத்திலேயே கை தட்டல் ஒலி கேட்க சட்டென திரும்பியவள், வாசு எதிரில் நிற்கவும் வெட்கத்தில் சிவந்தாள்.

''என்ன மது? வாயில்லாத குருவிகளிடம் உன் காதலை பாடிணாய். என்னைப் பார்த்ததும் ஏன் நிறுத்துற? கமான் மது.''

''போங்க வாசு கிண்டலா?'' இருவரும் இணைந்து நடந்தார்கள்.

''நிஜமாவே நீ நல்லா பாடுற மதுரா. ஆமா தூங்கலையா?''

''நீங்க...''

''உன் பாட்டு காற்றில் மிதந்து என்னை இழுத்துக்கிட்டு வந்தது.'' புன்னகையிட்ட படியே சிறிது நேரம் இரவில்

தனிமையை சுவைத்தபடி நடந்தார்கள். வாசுவின் முகம் கண்ணில் தோன்றியது. சிவந்த நிறம், கண்கள் இரண்டும் பெண்களின் கண்களை போல் மிக வசீகரமானவை. மதுரா கூட முதன் முறையாக அவனைக் கண்ட நொடி அசந்து தான் போனாள். ஆண்களில் கூட இத்தனை அழகா என்று வியந்து தான் போனாள்.

பிரவுன் நிற பேண்ட், அதே கலரில் வெளிர் நிற சர்ட்டும் அணிந்திருந்தான். ஒவ்வொரு அணுவிலும் கம்பீரம் நிறைந்திருந்த முழுமையான ஆண் மகன்.

நீல நிறத்தில் சிறிய கடலாய் இருந்த ஸ்விம்மிங் பூலில் அவர்களின் நடை நின்றது. அருகில் இருந்த இருக் கையில் எதிர் எதிராய் அமர்ந்தார்கள்.

''மது, நான் உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்.'' இந்த 4 நாட்களில் அவளிடம் அவன் இத்தனை குழைவாய் பேசியதேயில்லை. சில வினாடிகளைத் தனக்காக எடுத்துக் கொண்ட வாசு நேரடியாக மதுராவைப் பார்த்து கூறினான்.

''மது ஐ லவ் யூ'' என்றான்.

விழிகள் விரிய, திகைப்பு வழிய அவனைக் கண்டாள். அவளின் வியப்பு மிகுந்த விழிகள் வாசுவைக் கலவரப் படுத்தியிருக்க வேண்டும். ''என்ன மதுரா? நான் ஏதும் தவறாகக் கேட்டு விட்டேனா?''

''வாசு உங்ககிட்ட என்ன பதில் சொல்றதுனு எனக்குப் புரியல.''

''என்னிடம் உனக்கு எந்தத் தயக்கமும் வேண்டாம். நல்லதோ, கெட்டதோ இரண்டையும் சரி சமமாய் எடுத் துக் கொள்ள நான் என்னை பழக்கி வைத்திருக்கிறேன்.''

''வாசு நான் ஏற்கனவே, விஜய்னு ஒருத்தரை விரும்பு றேன்.'' மதுரா நிறையத் தயக்கத்துடன் சொன்னாள். ஆனால்



அவள் எதிர்பார்த்த அளவிற்கு வாசுவின் முகத்தில் கவலை ரேகைகள் படரவில்லை. மெலிதான புன்னகையை மட்டும் படர விட்டான். ஆனாலும் அவன் கண்கள் ஏமாற்றத்தினை எளிதாய் காட்டிக் கொடுத்தது.

''ஐ ஆம் சாரி வாசு.''

''ஏய்? வாட் இட் திஸ். சாரி, கீரின்னு ஸ்கூல் பொண்ணு மாதிரி. நான் என் விருப்பத்தை உன்கிட்ட வெளிப் படுத்தினேன். நீ உன் சூழ்நிலையை என்னிடம் சொன்னே. பரவாயில்லை மது.''

''ரியலி ஐ ஆம் சாரி வாசு. ஆக்சுவலி, ஐ நோ யுவர் பீலிங்ஸ் இன் யுவர் ஐஸ்.''

''இட்ஸ் ஓ கே மது.''

''இது வேதனையில்லை. மது ரொம்ப எதிர்பார்ப்போட இருந்து ஏமாந்தால் மனதில் மெல்லிய திரையில் கவலை வருமே? அதேபோல் தான் இதுவும். தவிரவும் நான் நினைச்சதையே நீயும் சொல்லணும்னு எதிர்பார்க்கும் அளவிற்கு நான் முட்டாள் இல்லை.''

''யுவர் வெரி ஸ்போட்டிவ் வாசு.''

''எனக்குக் கூட உங்களை மாதிரி இருக்கணும்ன்னு தான் எனக்கும் ஆசை. ஆனா முடியல.''

''கரெக்ட். இது ரொம்ப ஈஸி மதுரா. சின்ன வயசிலேயே தாய் இல்லாததால் ஆதரவு தர, ஆறுதல் தர ஆள் இல்லை. அதனால எனக்கு நானே ஆறுதல் சொல்லிப் பேன். எனக்குள்ளே இருந்து என் அம்மா என்னை வழி நடத்துவதுபோல இருக்கும்.'' அவனின் வெளுத்த முகம் மேலும் வெளுத்திருந்தது.

"தவிரவும் எனக்கும் என் மேல் ஓவர் கான்பிடன்ஸ். நான் ரொம்பவும் அழகு. என்னிடம் பேச எத்தனையோ பெண்கள் தவம் இருப்பது போல் அடிமனதில் ஒரு நினைப்பு."

"ஏன் உங்களுக்கு என்ன குறை வாசு?" "உன்னைப் போல சுமாரான பெண்ணிற்கே என்னைப் பிடிக்கலை. சூப்பரான பெண்ணை அடியேன் நினைக்கலாமா?" சோகமான பாவனையுடன் அவன் கூறவும், மதுரா தன்னையும் மீறிச் சிரித்து விட்டாள்.

என்னவோ சீக்கிரம் பேச்சை முடித்துக் கொண்டு திரும்பி விட்டாள். வாசுவை எண்ணி மனம் கலங்கித் தான் போனாள். ஆயிரம் சமாதானம் கூறினாலும் அந்த கண்கள் அதில் தழும்பிய அந்த கண்ணீர், வாசுவின் மன வருத்தத்தை புகைப்படம் போல தெளிவாய் காட்டியது.

எத்தனை மிருதுவானவன் வாசு. அவன் மனம் நோக நான் காரணமாகிவிட்டேனே என்ற நினைப்பே மதுராவை அலைக்கழித்தது. விஜய்யிடம் பேசினால் மனது இலேசாகும் போலிருக்க முயன்று தோற்றாள்.

அந்த தொலைபேசி என் உபயோகத்தில் இல்லையென்று தகவல் வந்தது.

# 4

சிறிய மல்லிகைத் தோட்டம் அதற்கு 25 அடி தள்ளி ஓடுகளால் வேயப்பட்டு இருந்த வீடு சைக்கிளில் தள்ளிக் கொண்டு தோளில் லெதர் பேக் சகிதம் பெல்லை அழுத்தினான் அந்த கூரியர் பையன். "அம்மா கூரியர்."



கதவை திறந்து வெளியே வந்த அந்த அம்மாவிற்கு 55வயதுக்குள் வெள்ளி நரைகள் முகத்திற்கு அழகு கூட்டியது.

"யார் பேருக்கு?"

"மிஸ்டர் விஜயகுமார்."

"விஜய் உனக்கு கூரியர் வந்திருக்கு பார்."

சட்டையை பேண்ட்டினுள் இன் செய்த படியே வெளியே வந்த விஜய் அந்த கடிதத்தை கையெழுத்திட்டு வாங்கிப் பிரித்துப் படித்தான். குதூகலித்தான்.

"அம்மா ஆதிரா சில்ஸ்க்ஸில் புடவை எடுத்தோமே. அதற்கு முதல் பரிசாக பத்தாயிரம் விலையில் இரண்டு பட்டுப் புடவைகள் விழுந்திருக்கு."

அம்மா மனம் பூரிக்கும் போதே வீட்டுவாசலில் யாரோ ஒருவன் நின்றான்.

"ஸார் இங்கே விஜய்ன்னு..."

"நான்தான்."

"நான் ஆதிரா சில்க்ஸ்ஸின் மேனேஜர். பரிசு விழுந்ததற்கு அறிவிப்பு வந்ததா?"

"இப்பதான் கூரியர் மேன் தந்திட்டுப் போனான்."

"சார் வெற்றி பெற்றவங்க கூட எங்க எம்.டி. இன்று இரவு விருந்து சாப்பிட ஏற்பாடு பண்ணியிருக்காங்களாம். உங்ககிட்டே இன்பார்ம் கால் பண்ணினோம்."

"ஸாரி சார் போன் டிஸ்கனெக்ட் ஆகியிருக்கு."

"மேட்டர் கன்வே பண்ணதான் வந்தேன். நைட் எட்டு மணிக்கு ரெடியாயிருங்க சார். கம்பெனி கார் வரும்."

அவன் செல்லவும் அம்மாவும், விஜய்யும் ஒருவரை யொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

உயர்தரமான ஓட்டல் நடுத்தர மனிதர்கள் நிமிர்ந்து பார்க்கவே தயங்கும் இடம். சொர்க்கலோகம் போல் இருந்தது. விளக்குகள் கண்களைக் கூசச் செய்தன. குடியிருக்க இடமின்றி ஆயிரம் பேர் தவிக்கும் நேரம் 130 கிரவுண்டு நிலத்தை வளைத்துப் போட்டிருந்தது அந்த இடம். மலை அருவி போல் லைட் செட்டிங்குடன் நீர் விழவும் அதன் நிறம் சில வண்ணங்களாய் மாறுவதை ரிஷப்சனில் இருந்து ரசித்தான் விஜய்.

''ஸார் எம்.டி. கூப்பிடுறாங்க வாங்க ஸார்.'' மிகவும் பணிவுடன் அவனை அழைத்துச் சென்றான் ஒருவன்.

மார்பிள் தரையில் முகம் பார்த்தபடியே நடந்த விஜய் யின் மனதில் இனம் புரியாத படபடப்பு. அறையின் முன் நின்றதும் கதவுகள் விரியத் திறந்தன. ''ப்ளீஸ் ஸார்'' என்றார்.

உள்ளே நுழைந்த விஜய் அந்த அறையின் வனப்பை சற்றும் கண் இமைக்காமல் பார்த்தான். அதைவிட பளீர் உடையில் தேவதையாய் அமர்ந்திருந்த அந்தப் பெண்ணைக் கண்டதும் அவன் விழிகள் நிஜமாகவே உயர்ந்தன. பெண்களில் இத்தனை அழகாகக்கூட இருப்பார்களா?

ரோஸ்வுட்டினால் செய்த தேகம். மீனாய் கண்கள் துள்ளின. குழைவான கன்னங்கள், தொட்டுவிடத் துடிக்கும் உதடுகள், எடுப்பான நாசி. கண்ணாடியாய் கழுத்து. அவன் பார்வை அந்தப் பெண்ணை அளவெடுத்துக் கொண்டிருந்த நேரம். ''மிஸ்டர் விஜய்'' என்றாள் அவள். அவள் குயில் குரலில் அவனுக்கு ஐஸ்கிரீம் சுவைத்தது போல் இனித்தது அக்குரல்.



''குட் ஈவனிங் விஜய் ப்ளீஸ் பீ சீட்டட்'' விஜய் பதிலுக்கு கூட விஷ் பண்ண முடியாமல் தவித்தான். ஆதிராவின் மேல் பதித்த விழிகளைப் பிரிக்க முடியாமல் திணறுவது கண்டு புன்னகைத்தாள் ஆதிரா.

பல ரகமான உணவுகள் கண் முன் இருக்க ''சாப்பிடுங் கள் விஜய்'' என்றாள் கனிவுடன்.

கண்களுக்கு விருந்தாய் இருக்கும் அவளை விடுத்து இந்த வாய்க்கு ருசியளிக்கும் விருந்து இனிக்குமா?

''என்ன செய்றீங்க விஜய்?''

''எம்.காம் முடிச்சிருக்கேன். இப்போ மீனா சூப்பர் மார்க் கெட்டிங் மானேஜரா இருக்கேன்.'' ''மாசம் எட்டாயிரம் ரூபாய் சம்பளம். ஒரு அக்கா கல்யாணமாகி மதுரையில் இருக்காங்க. அப்பா இல்லை. அம்மா மட்டும் தான். பேரு ஜானகி. வயது 52 சரியா.''

''வாவ் ஜஸ்ட் அமேஸிங் என்னைப்பற்றி உங்களுக்கு...''

''எனக்கு ஒண்ணு பிடிச்சியிருந்தா அதைப்பற்றி நான் முழுசா தெரிஞ்சுப்பேன். இதுக்கே சாக் ஆகி நின்னுட்டா எப்படி? இன்னும் உங்களுக்கு நிறைய அதிர்ச்சிகள் காத் திருக்கு.'' அவன் திகைத்து நிற்க, ''எல்லாமே இன்ப அதிர்ச்சிதான்.'' அவள் ஒயிலாய் சிரித்தாள்.

அந்த சிரிப்பில் மிகவும் லயித்துத்தான் போனான் விஜய்.

ஆதிராவின் சிரிப்பு தான் அவன் காதல் வாழ்வையே சூறையாடப் போகிறது என்று புரியாமல்.

மதுரா இனி சிரிக்கும் நிமிடங்களை விரல் விட்டு எண்ணி விடலாம். என் தாயின் வாழ்வில் இருள் படர வைத்த உன்னையும், உன்தாயையும் இனி அழ வைப்பது

தான் என் திட்டம். அதற்கு முதற்கட்டம் தான் இந்த விருந்து.

நீ ட்ரைனிங் வருவதற்குள் உன் வாழ்வு காதல் எல்லாம் கானல் நீராகிவிடும். இதோ இந்த விஜய் என் தகுதிக்கு கொஞ்சம் கூடப் பொருந்தாத இவனை என் வாழ்க்கைத் துணையாய் ஏற்கப் போகிறேன் உன்னை பழிவாங்குவதற் காகவே, வாய்விட்டு சிரித்தாள் அவள்.

நடப்பவை யாவும் நம் கையில் இல்லை. எல்லாம் இறைவன் போட்ட கணக்கு. வாழ்வைத் தீர்மானிக்கப் போகும் சமயங்களில் நாம் எடுக்கப் போகும் தவறான முடிவுகள் தான் சிலர் வாழ்வைப் புரட்டிப்போட்டு விடு கிறது.

இங்கும் ஆதிரா தன் மனதில் வஞ்சகத்தைத்தான் விதைத்திருக்கிறாள். இனி அறுவடையில் எத்தனை மனங்கள் நோகுமோ?

விருந்தை முடித்து விட்டு வீட்டுக்கு வந்த விஜய் தன் தாயிடம் ஆதிராவின் அழகு, குணம் இவற்றையெல்லாம் பற்றி வாய் கொள்ளாமல் பொறிந்து தள்ளிவிட்டான். மகன் என்ன ஒரு பெண்ணை இப்படிப் பாராட்டுகிறானே என்று மனதிற்குள் எண்ணினாள் ஜானகி.

பீனா சூப்பர் மார்க்கெட் ஸ்டாக் எடுத்த லிஸ்ட்டை வைத்துக் கொண்டு தேவையான பொருட்களுக்கு போன் மூலம் ஆர்டர் கொடுத்துக் கொண்டிருந்தான் விஜய்.

''சார் உங்களை எம்.டி வரச் சொன்னார்'' கடைப்பையன் சொல்ல, எழுந்தவன் சற்று தள்ளி எம்.டி. என்று எழுதப் பட்டிருந்த அறைக்குள் அனுமதி கேட்டு உள்ளே நுழைந் தான் விஜய்.



''குட் மார்னிங் சார்.''

அவர் பதிலுக்கு ஏதும் கேட்காமல் ஒரு வெள்ளை கவரை அவன் முன் நீட்டினார்.

இது என்ன? என்று மனதில் கேள்வி எழுப்பிக் கொண் டாலும் வெளியில் சொல்லாமல் வாங்கி பார்த்தவனின் முகம் வெளிறிப்போனது.

''ஸார் என்ன இது? நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு ஏன் டிஸ்மிஸ் ஆர்டர்?''

''ஸாரி மிஸ்டர் விஜய். எனக்கு இப்போது தான் விஷயம் தெரிந்தது.

ஆதிரா சில்க்ஸ்ஸின் மாப்பிள்ளையாகப் போகிறீர்கள். இங்கு வேலை செய்வது நன்றாக இருக்குமா?''

''ஸார் நீங்க சொல்றது ஒண்ணும் புரியல.''

''உண்மை. தி மல்டி மில்லியனர் மிஸ்டர் சந்தானபாரதி எனக்கு போன் செய்து விவரம் கூறினார். எத்தனை பெரிய இடம். என்னிடம் கூட மறைத்து விட்டீர்களே?''

விஜய் தலையும் புரியவில்லை. வாலும் புரியவில்லை. ஏதும் பேசத் தோன்றாமல் அசட்டுத்தனமாய் ஒரு சிரிப்பை உதிர்த்தபடியே வெளியேறினான்.

''ஸார் உங்களுக்கு போன்'' ரிஷப்சன் பெண் கொடுத் தாள்.

''அலோ!''

''என்ன விஜய் நல்லாயிருக்கீங்களா?''

''நீங்க?''

''அதுக்குள்ளே என்னை மறந்துட்டீங்களா? நான் தான் ஆதிரா.''

''ஓ ஐயம் ஸாரி. மேடம் நான் ஏதோ டென்ஷனில் இருந்தேன்.''

''உங்க ஆபீஸ் மானேஜர் எல்லாம் சொல்லிட்டாரா?''

''ஆமாம் ஆனா எனக்கு...''

''என்ன இன்னும் டென்ஷன்? நான் தான் எல்லாத் தையும் கண்டுபிடிச்சிட்டேன். அந்த விருந்து கூட உங் களுக்கு வச்ச இண்டர்வியூ மாதிரி தான். எங்க வீட்டு லயும் உங்களை எல்லோருக்கும் பிடிச்சிருக்கு. ஆனா வேலை தான் வேண்டாம்னு அப்பா பீல் பண்றாரு.''

''இருந்தாலும் வேலை இல்லாமல்...''

''என்ன விஜய் இத்தனை வருடமா ஆசையா வளர்த்த பெண்ணையே உங்களுக்குத் தர சம்மதிச்சி இருக்கார். அவருக்காக இந்த வேலையை விடக்கூடாதா என்ன?''

அவன் மவுனமானான்.

''என் தங்கை அதான் மதுரா கூட இன்னும் 10 நாளில் ஊரில் இருந்து வந்திடுவாள். அதுக்குள்ளே நிச்சயதார்த் தம் நடந்துடும். சந்தோஷமா விஜய்.''

''ஆனா நான் இதை எதிர்பார்க்கவேயில்லை.''

''எதிர்பார்க்காததை நடத்தறது தான் ஆதிராவோட ஸ்பெஷாலிட்டி. இதென்ன இன்னும் போகப் போக என்னைப் பற்றி நல்லாவே புரிஞ்சுப்பீங்க. வீட்டுக்கு போங்க இன்னொரு ஸ்வீட் நியூஸ் காத்திட்டு இருக்கு.''

நடப்பது எல்லாம் கனவு போல் இருந்தது விஜய்க்கு.

என் மதுரா என் கைக்கு கிடைக்கப் போகிறாள். உடனே அவளுடன் பேச வேண்டும் என்ற எண்ணம் மேலோங் கியது.



ஆனால் இத்தனை சஸ்பென்ஸாக எல்லா வேலையை யும் செய்திருக்கிறாய். இன்றிலிருந்து நீ ஊருக்கு வரும் நாள் வரை நான் உன்னுடன் பேசப் போவதில்லை. மணமேடையில் யார் காதிலும் விழாமல் உன்னிடம் ரகசியமாய் பேசுவேன் - உற்சாக மிகுதியோடு நடந்தான்.

காலம் இப்போது இரு கரம் நீட்டி அவனை வரவேற்று கம்பளம் விரித்தது. பாவம் தன் வாழ்வு தலைகீழாக புரட்டிப் போடப்படுவதை அறியாமல் புன்னகை முகமும் காதல் கனிந்த நெஞ்சமுமாய் வலம் வந்தான் விஜய்.

தெருமுனைக்கு வந்தபோது வீட்டின் முன் படகு போல் ஒரு கார் நின்றிருந்ததை கவனித்து விட்டான். பதற்றம் தொற்றிய முகத்தோடு உள்ளே நுழைந்தான்.

உள்ளே 55 வயது மதிக்கத்தக்க சற்றே பருத்த மனி தரும், அவர் அருகில் தலையில் சிறிதளவு நரையோடிய இரு பெண்களும் அமர்ந்திருந்தார்கள். அவர்களின் முன் காலியான காபி டம்ளர்கள்.

''வாங்க தம்பி. நான் தான் ஆதிராவின் அப்பா. ஆதிம்மா எல்லா விஷயத்தையும் சொன்னா. எங்களுக்குப் பூரண சம்மதம். உங்க அம்மாவிடமும் பேசி நிச்சயதார்த்தத் துக்கும் நாள் குறிச்சிட்டோம்.

நல்ல விஷயத்தை தள்ளிப்போடுவதில் என்ன பயன்? அதான் சீக்கிரம் நடத்திடலாமென்று முடிவு பண் ணிட்டோம். நீங்க என்ன சொல்றீங்க?''

விஜய்க்கு வியப்பாய் இருந்தது. எத்தனை பெரிய மனிதர் கொஞ்சங்கூட பந்தா இல்லாமல் பேசுகிறாரே என்று வியந்தான்.

''சும்மா இருங்க. இவர் எப்பவுமே இப்படித்தான். பேச ஆரம்பிச்சா படபடவென்று பேசுவார். நான் தான் பார்வதி.

என் பெண்ணைத்தான் நீங்க கல்யாணம் செய்யப் போறீங்க.''

பார்வதி பேசியவுடன் சந்தானபாரதியின் வலதுபுறம் அமர்ந்திருந்த அந்த பெண்மணி வாய் திறந்தாள். ''ஆதிரா சொன்னாள் உங்களைப் பற்றி. எங்களுக்கு காசு, பணம் முக்கியம் இல்லை. கடைசி வரைக்கும் எங்க பெண்ணை கண் கலங்காம பார்த்துக்க வேண்டியது உங்க பொறுப்பு.

என்ன தம்பி பதிலையே காணோம்?''

''நடக்குறது எதையும் என்னால் நம்பவே முடியலை. எங்க காதல் விஷயம் இத்தனை சுலபமாய் முடியுமுன்னு நான் நினைச்சுப்பாக்கலை. அதான் பிரமிச்சி போயிட்டேன்.''

''சரிம்மா, அப்ப நாங்க கிளம்பறோம். நிச்சய பத்திரிகையை நான் அனுப்பறேன். உங்க சைடு எத்தனை பேருக்கு தாணுமோ தந்திடுங்க.'' அவர்கள் ஒருசேர எழுந்து கரம் குவித்தனர்.

பதிலுக்கு மரியாதை செய்யவும் விஜய்க்கு சந்தோஷம் பிடிபடவில்லை. அவன் தாய் ஜானகி அவனை விடவும் திகைத்துப் போய் நின்றிருந்தாள்.

''என்னம்மா திகைச்சி போயிட்டீங்க?''

''என்னால ஒண்ணுமே பேச முடியலை தான் விஜய். இத்தனை பெரிய இடம் நமக்கு சரியா வருமா? பெரிய இடத்துப் பொண்ணு நமக்கு ஒத்து வருவாளா? பயமா இருக்குடா.''

''ஏம்மா அப்படிச் சொல்றீங்க?''

''பார்த்தா நல்ல மனுஷங்களாத்தான் தெரியுது.''

''அம்மா அவ ரொம்பத் தங்கமான பொண்ணு. நீ ஒரு தடவை பாரு. உனக்கே புரியும். தன் மகள் தன்னைவிட



ஏழ்மையில் உள்ள ஒருவனை நேசிக்கிறாள்னா யார் சம்மதிப்பாங்க? ஆனா அவர் எத்தனை மரியாதையாக பேசினார் பார்த்தியா. அதே பண்பு அவளிடம் உண்டும்மா.''

''அதெல்லாம் சரி, இப்பவே பொண்டாட்டிக்கு சப்போர்ட்டா? ஆமாம் நீயும், அந்த பொண்ணும்...'' அவர் இழுக்க.

''நானே உங்கிட்ட நேரம் வரும்போது சொல்லலாமின்னு இருந்தேன். அதுக்குள்ளே அவனே சொல்லிட்டா.''

''என்னமோப்பா பெரிய இடம். எனக்கு நீ நல்லாயிருக்கணும். ஆழம் தெரியாம காலை விட்டுட்டு பின்னாடி அவதிப்படக்கூடாது பாரு. அதான் இத்தனை பேசறேன். போ கை, கால் அலம்பிண்டு வா காபி தர்றேன்.''

அம்மா நகர்ந்துவிட்டாள். ஒரு பிள்ளையின் வாழ்வு நலம் பெற வேண்டுமென்று நினைக்கும் ஒவ்வொரு தாயும் அடையும் கவலை தான் இது.

## 5

எத்தனை மனக்கோட்டைகள் கட்டினாலும் அது காற்றில் கரையும் மண் துகள்களாய் ஆகிவிடுகிறதே. அதேபோல் தான் பலமில்லாத அஸ்திவாரத்தின் மேல் ஏற்பட்ட மதுரா - விஜய்யின் காதலுக்கு ஆயுள் குறைந்து கொண்டே போனது.

''என்ன மது டல்லாயிருக்கே?''

''நத்திங் வாசு ஐயம் ஆல்ரைட்.''

''நோ! நோ! கடந்த பத்து நாளாக உங்கிட்ட என்னமோ மிஸ்ஸிங். என்னாச்சு?'' வாசுவின் கேள்விக்கு மவுன மானாள் மதுரா.

மாடலிங் ஷோ எதிர்பார்த்ததை விடவும் விரைவாக முடிந்து விடவே மதுரா ஊருக்கு கிளம்ப ஆயத்தமாகி விட்டாள். அவள் அவசரப்பட்டுக் கிளம்ப விஜய்யும் ஒரு காரணம் தான். வந்த முதலில் அடிக்கடி தொலைபேசியில் அழைத்தான். ஆனால் இப்போது சில நாட்களாக அதுவும் தேய்ந்து போனது. இவள் முயன்றும் பயனில்லை.

அது ஒரு காரணம் என்றால் மற்றொன்று வாசு. ஷோ முடிந்து இரண்டாவது நாள் விருந்து ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தான். உற்பத்தியாளர்கள், மாடலிங் பெண்கள், விளம்பரதாரர்கள் என அனைவரும் விருந்திற்கு அழைக் கப்பட்டு இருந்தனர்.

மதுரா அன்றைய தினம் வாசு எடுத்துத் தந்த ராஜஸ் தானி உடையை அணிந்தாள். அரக்கும் மெருனும் கலந்த அந்த உடை அவளுக்கு வெகுவாய் பொருந்தியிருந்தது. வாசுவே ஒரு கணம் வியந்தான்.

இத்தனை அழகையும் ஒரு சுடிதாரினுள் இதுநாள் வரை மறைத்து இருந்தாளே என்று எண்ணினான்.

விருந்து முடிந்ததும் டேப்பில் வழிந்த மெல்லிய இசைக்கேற்ப எல்லோரும் நடனம் ஆடினார்கள். வாசுவும், மதுராவும் நடனம் ஆடியபோது அவன் வெகு இலாவக மாக ஆட, பழக்கமில்லாத மதுராவிற்கு வாசுவுக்கு ஈடு கொடுத்து ஆட இயலாமல் தடுமாறினாள்.

விழ இருந்தவளைத் தாங்கிப் பிடித்தவன் ஒரு முழு நிமிடம் விடவில்லை. முதன் முதலாய் ஆணின்



அணைப்பு. விஜய்யுடன் பழகிய இந்த ஒரு வருடத்தில் ஒரு முறை கூடத் தொட்டுப் பேசியதில்லை. ஆனால் வாசுவின் விரல்களும், அவனின் பெருமூச்சும் அவளுக்கு ஏதோ சேதி கூறின. சட்டென விரைகிறாள். திட்டமிட்ட தற்கு முன்னதாகவே கிளம்பி விட்டாள்.

''என்ன மது பேசு.'' வாசுவின் குரல் அவளை நிலைக்கு கொண்டு வந்தது.

''ஒண்ணுமில்லே வாசு.''

''நான் உன்னை டிஸ்டர்ப் செய்திட்டேன் இல்லை மதுரா.''

''ச்சே! உன் மேல எந்தத் தவறும் இல்லை வாசு. உண்மையைச் சொன்னால் யூ ஆர் எ நைஸ் ஜென்டில் மேன். உன் விருப்பத்தை நான் நிராகரித்தாலும் அதன் பிறகு என்னோடு இருந்த நாட்களில் ஒரு சின்ன முகச் சுளிப்பு கூட இல்லாமல் எத்தனை அன்பாய், கனிவாய் பழகினாய். அந்த கண்ணியம் நீ எனக்கு நண்பனாய் கிடைக்க நான் தான் கொடுத்து வைக்கணும்.''

அவளுடைய பெட்டியை எடுத்து கோச்சினுள் வைத் தான். சாப்பிட உணவுப் பொருட்கள், தண்ணீர், புக்ஸ், அதோடு ஒரு அழகிய தங்க செயினையும் அவளுக்கு தந்தான்.

''மது, இது என் தோழிக்கு நான் தரும் அன்புப் பரிசு.'' அவன் நீட்ட மறுப்பின்றி வாங்கிக் கொண்டாள்.

''பை வாசு டேக் கேர்.''

''எனக்கு என்ன குறை மது. சீக்கிரம் கல்யாணம் செய்து கொள். உன் லவ்வர் பாயை கேட்டேன் என்று சொல்.'' சிரிப்புடன் கூறினாலும் அதில் ஒரு சோகம் இழையோடிக் கொண்டிருந்தது. கண்களில் நீர் கசிய சட்டென சுதாரித்துக்

கொண்டான். வண்டி கிளம்பியது. வாசு ஒரு புள்ளியாய் மறையும் வரை கண் இமைக்காமல் மதுராவும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சென்னை

திருமணக் காரியங்கள் எல்லாம் மளமளவென்று நடந்தேறின. மதுரா வீடு வந்ததும் அக்காவின் திருமணம் என்ற சேதி கிடைச்சதும் தனக்கு இருந்த கவலையும், களைப்பையும் மீறி ஆதிராவை கட்டிக் கொஞ்சினாள். "என்னக்கா உண்மையா காதல் திருமணமாமே? யார் அவன்? பேரு என்ன? போட்டோ இருக்கா?"

"போட்டோ இல்லை மது. நீ தான் நிச்சயதார்த்தம் அன்று நேரிலேயே பார்க்கப் போகிறாயே. பிறகென்ன உன்னுடைய டிரெயினிங் எல்லாம் எப்படி?"

"பைனக்கா. வாசு இஸ் எ குட் கோச்சர். கூடிய விரைவில் சொந்தமா ஷோ நடத்தப்போறேன் நம்ம சாரீஸ் கடையை வைத்து. இதனால நமக்கு இன்னும் லாபம் அதிகமாக வாய்ப்பு இருக்கு."

"வெரிகுட் சரி ரொம்ப டல்லடிக்கிறே. போ, போய் குளிச்சிட்டு வா. பட்டுப்புடவைகள் கொண்டு வரச் சொல்லியிருக்கேன். செலக்ட் பண்ணணும்."

"ஓ எஸ். உன் டிரஸ், அத்தான் டிரஸ் எல்லாமே நான் தான் டிசைன் பண்ணப்போறேன்."

"சரி போ." மதுரா குளித்து முடித்து நைட்டிக்கு மாறி விஜய்யை தொடர்பு கொள்ள முயன்ற நேரம் கீழே இருந்து ஆதிராவின் குரல் அழைத்தது. யோசனையுடன் வந்தவள் வந்து இறங்கி புடவைகளை எடுப்பதில் ஆர்வம் காட்டினாள்.



"அக்கா நீ என்ன புடவை செலக்ட் பண்ணியிருக்கே?"

"எங்கே என் கல்யாணப் புடவை, நிச்சயப்புடவை? அவருக்கு உடை? எல்லாமே உன் செலக்சன்தான்."

மாம்பழ நிறத்தில் மெரூன் பார்டர் ஆங்காங்கே கண்ணாடி வேலைப்பாடுகள் கொண்ட பளபளப்பான கண்ணைப் பறிக்கும் அளவுக்கு ஒன்றும், மயில் கழுத்து நீளமும், பச்சையுமாய் இணைந்த நிறத்தில் ஒன்றும் தேர்வு செய்தாள்.

"அட்டகாசம் மது. நீ ரொம்ப அருமையா தேர்வு செய்யறே. சரி, உனக்கு எடுக்கலையா?"

அதே டிசைனில் ஆரஞ்சும், ரோஜா வண்ணமும் கொண்ட புடவையை தேர்ந்தெடுத்தாள். சந்தன நிறத்தில் மஞ்சள் நிற சரிகை கலந்த புடவையை எடுத்தாள்.

"என்ன மது இன்னும் கொஞ்சம் கிராண்டா எடுத்துக்கக்கூடாதா?"

"நீ தான் கதாநாயகி, கல்யாணப் பொண்ணு. ஜொலிக்கணும். எனக்கென்ன?"

இளசுகள் ஒன்றையொன்று சீண்டிக் கொள்ள பெரியவர்களின் முகத்தில் எல்லையில்லா ஆனந்தம்.

"அம்மா நீங்க எதுவும் எடுக்கலையா?"

"இனிமேல் தான் மது." பெரியவர்கள் புடவைகள் எடுப்பதில் முனைய மகள்கள் இருவரும் தந்தையிடம் சென்றார்கள்.

"அப்பா பங்ஷன் என்றைக்கு?"

"பத்தாம் தேதி நாள் நல்லாயிருக்கு."

இடையில் இன்னும் 4 நாட்கள் உண்டு. அதற்குள் விஜய்யை சந்தித்துப் பேசி விடவேண்டும். இந்த

நிகழ்ச்சியையே சாக்காக வைத்து விஜய்யை அப்பாவிற்கு அறிமுகப்படுத்தி விட வேண்டும். நடப்பதை அறியாமல் மனதிற்குள் முடிவு செய்து கொண்டாள் மதுரா.

இடைப்பட்ட நாட்களில் வீட்டில் ஒரே பரபரப்பு. இடையிடையே விஜய்க்கும் போன் செய்ய மறக்கவில்லை. ஆனால் பேசத்தான் முடியவில்லை. அப்பாவின் முகத்தில் எக்ஸ்ட்ரா சந்தோஷம்.

ஆனால் ஆதிரா எப்போதும் போல் தான் இருந்தாள். கல்யாணப் பொண்ணிற்கு உண்டான மகிழ்ச்சி அவளிடம் இல்லை. பங்ஷனை வீட்டிலேயே செய்ய முடிவெடுத்திருந்ததால் வீட்டை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். தேவையற்ற சிந்தனைகளை ஒதுக்கிவிட்டு வேலையில் மூழ்கினாள் மதுரா. வீடு முழுக்க பூத்தோரணங்கள், திரைச்சீலைகள் எல்லாம் புதியதாக மாற்றப்பட்டு தரையில் கம்பளங்கள் விழாவிற்கென சிறிய மேடையொன்றை தோட்டத்தில் அமைத்திருந்தனர்.

செடிகளோடு நடுவே விதவிதமான மஞ்சள் ஒளி வீசும் விளக்குகள் மேடையின் மீது வெல்வெட் குஷன் பதித்த நாற்காலிகளும் தேர்போன்ற அமைப்பில் முகப்பும் அமைத்து, வரவேற்பில் கண்ணாடி சுவர் அமைத்து அதனுள் சிறு சிறு பல்புகளின் மூலம் அவர்களின் பெயர்களை எழுதி மேலே மெல்லிய நீருற்று எழுமாறு ஏற்பாடு செய்தாள் மதுரா.

அதில் நீர் மேலெழும்பும் போது விளக்குகள் ஒளிரும்படி இருந்தது மிகவும் ரசனைக்குரியதாய் இருந்தது. ஆதிரா கூட சிலாகித்துப் பாராட்டினாள்.

ஆனால் மனதிற்குள் குமைந்தாள். பாவம் மதுரா நீ. இத்தனை அலங்காரமும் உன் வாழ்வையே சூறையாடி



விட்டதை உனக்கு உணர்த்தும் போது உன் முகத்தைப் பார்க்க வேண்டுமே என்று இப்போதே நினைத்துப் பூரிக்கிறாள். காலம் கண்ணாடியைப் போல் இருந்து நிகழ்வுகளைப் பிரதிபலிக்கிறது. பாவம் கடந்து போன நடப்புகளில் தனக்கு நேரப்போகும் வலி தெரியாமல் அந்த இளம் பெண் புன்னகையுடன் வலம் வந்தாள்.

இன்றைய தினம் அதுவும் தொலையப் போகிறது.

* * *

விஜய்யின் வீடு.

இரண்டு நாள் முன்னரே தங்கை குடும்பத்தினரோடு வந்து இறங்கி விட்டாள். "அம்மா எப்படி இத்தனை பெரிய இடம் அண்ணனுக்கு? எங்க வீட்டு மனுஷங்க மத்தியில எத்தனை பேர் தெரியுமா? இதனால அந்தவீட்டுல எனக்கு ஒரு படி மதிப்பு உயர்ந்திடுச்சு" அமுதா அங்கலாய்த்தாள்.

"ஏம்மா நீ அண்ணியைப் பார்த்தியா?" காபி எடுத்து வந்த தாயிடம் கேட்டாள்.

"இன்னும் இல்லை."

"ஏன்?"

"முதன் முதலா நான் மட்டும் எப்படிப் போவேன்? அதுக்கு ஏற்ற மாதிரி.

கடவுள் என்ன வைக்கலையே?"

"ஏம்மா இப்படி பேசுறே ஆயிரம் தான் இருந்தாலும் நீ என் அம்மா நாங்க உன்னை அபசகுணமா நினைப்போமோ?" அதற்குள் விஜய்யின் கண்களில் நீர்.

"அதில்லைப்பா நான் அந்தக் காலத்திலேயே இருந்திட்டேன் நீ போப்பா" மகன் அந்த பக்கம் சென்றதும் தாயின் கவலை தோய்ந்த முகத்தோடு இருந்த அம்மா

விடம் வந்தாள். ''என்னம்மா உம்முன்னு இருக்கே? உனக்கு இந்த சம்பந்தம் புடிக்கலையா?''

"இல்லே அம்மு இத்தனை பெரிய இடம் சந்தோஷமா இருந்தாலும் ஒரு பக்கம் மனசுக்குள்ளே கலக்கமாவே இருக்கு காரணம் புரியலை.''

''கவலைப்படாதேம்மா எல்லாம் நல்லபடியா நடக்கும் நேரமாகுது. சொந்த பந்தமெல்லாம் ஒவ்வொன்றா வர்றதுக்குள்ளே சுருக்கா கிளம்பு! அண்ணா வர்றான், முகத்தை இயல்பா வை அவன் சங்கடப்பட போறான்'' விஜய் உள்ளே வரவும் பேச்சு மாற்றினார்கள்.

''அது சரி பொண்ணு போட்டாதான் இல்லை, பேராவது சொல்லக்கூடாதா?''

''ஓ யெஸ் அதுக்கென்ன? அவ பேர்...''

வாசலில் வேன் சப்தம்... ''ஹை...''

''வேன் வந்தாச்சு'' பொடிசுகள் அவர்களைக் கடந்து ஓட, ''டேய் கிளம்புடா நேரமாகுது தங்கச்சிகிட்டே அப்புறம் வாயடிக்கலாம். போய் டிரஸ் மாத்திக்க'' அம்மா விரட்டவும், அவசரமாக நகர்ந்தான் விஜய்.

## 6

நட்சத்திரத்தை அள்ளித் தெளித்தாற் போல் ஜொலித்தது அவ்விடம். அழகு தேவதைகளென மதுராவும், ஆதிராவும் மிளிர்ந்தனர். ''என்ன குரு எல்லாம் ரெடியா இருக்கா'' இன்னும் கொஞ்ச நேரத்தில் மாப்பிள்ளை வீட்டில் எல்லோரும் வந்திடுவாங்க'' என்றார் சந்தான பாரதி பணியாளிடம்.



மதுரா தந்தையிடம் வந்தாள். ''அப்பா பெரிய பெரிய வி.ஐ.பிஸ் எல்லாம் வந்து இருக்காங்க? நீங்க போய் கவனியுங்க.''

''நல்ல நேரத்தில் வந்தே மது. வந்த ஆளுங்களுக்கு எல்லாம் ட்ரிங்ஸ் ஏற்பாடு செய்யம்மா.'' அவர் நகர்ந்தார்.

''மாப்பிள்ளை வந்தாச்சு'' யாரோ குரல் எழுப்ப, வந்தவர்களை குளிர்பானம் தந்து கவனித்துக் கொண்டிருந்த மதுரா விரைந்தோடினாள்.

கூட்டத்தின் நடுவில் க்ரே கலர் குர்தாவில் பாந்தமாய் நின்றிருந்த விஜய்யைக் கண்டதும் உற்சாகம் மேவிட 'விஜய்' என்று அழைக்கப் போனவளைத் தடுத்து தந்தையின் ''மாப்பிள்ளை'' என்னும் குரல். அவர் விஜய்யின் தோளில் கை போட்டபடி மதுராவை நோக்கி நடந்து வந்தார்.

''மதும்மா! என்னடா அப்படியே திகைச்சிப் போயிட்டே! இவர் தான் மாப்பிள்ளை. நீ பார்க்கணுமின்னு ஆவலோட கேட்டியே?'' என அவர் சொன்னதும், மதுராவிற்கு காலின் கீழ் பூமி நழுவுவது போல் இருந்தது.

''ஹலோ மிஸ்டர் பாரதி'' என்று எதிர் திசையில் குரல் வரவும், ''நீங்க பேசிட்டு இருங்க இப்ப வந்திடறேன்'' என யாரையோ வரவேற்க சென்றுவிட, நமுட்டுச் சிரிப்புடன், ''என்ன மதுரா! இத்தனை அவசரமா? என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டாயே?

''எனக்கு சஸ்பென்ஸ் தர வேண்டும் என்பதற்காகத் தானே? ஐ லவ் யூ ஸோ மச் மது இரு உன்னைக் கல்யாணத்திற்குப் பிறகு கவனிச்சுக்கிறேன்.''

மதுராவிற்கு விஜய் பேசியது எதுவும் காதில் விழவில்லை. இவர் தான் மாப்பிள்ளை என்ற நொடியே அவள் உறைந்து விட்டாள். ஆதிராவின் மனம் கவர்ந்தவன் இவனா? குழப்ப முடிச்சுகள் அவளை மலைப்பாம்பென சுற்றி இறுக்கியது.

''என்ன அண்ணா அங்கே மாப்பிள்ளையை மேடையில் தேடுறாங்க? இங்கே என்ன அரட்டை... வா'' அமுதா அவனை இழுக்கவும், மதுரா அங்கிருந்து அப்படியே ஓடினாள்.

விஜய்க்கு வியப்பாய் இருந்தது. என்னவாயிற்று இவளுக்கு? ஏன் அழுகிறாள்? உண்மையில் இன்பம் கரை புரண்டு ஓடும் தருணமல்லவா இது? விழா மேடைக்கு சென்றான். உறவினர்கள் குழுமியிருக்க, சந்தானபாரதி பேச ஆரம்பித்தார். ''மை டியர் ப்ரண்ட்ஸ் அண்ட் ரிலேட்டிவ்ஸ்! இது ஓர் இனிய நாள்.

''இதோ இந்த விஜயகுமாருக்கும், எனது மூத்த மகள் ஆதிராவிற்கும் இன்று இங்கு பெரியோர்கள் முன்னிலையில் திருமண நிச்சயதார்த்தம் நடைபெறும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என அவர் கூறி முடிக்கவும் தீயை மிதித்தவன் போல் விலுக்கென எழுந்தான் விஜயகுமார்.

''என்னண்ணா?'' அருகில் இருந்த தங்கை கேட்க...!

''பொண்ணு?''

''வரும் அண்ணா அவசரப் படாதே உங்க ஆளு ரொம்ப குப்பர். நான் பார்த்திட்டேன்'' அவன் மனது புரியாமல் அமுதா பேசினாள்.

''அமுதா, இப்ப நிச்சயதார்த்தம் எனக்கும் ஆதிராவுக்கும்தானா?''



''இதென்ன சின்னப்பிள்ளைத்தனமான கேள்வி! எல்லாரும் பார்க்கிறாங்க? உக்காருண்ணா, அதோ பொண்ணு வந்தாச்சு.''

தேவதையென பளீர் ஒப்பனையில் ஆதிரா ஒயிலாய் நடந்து வர அவளருகே முகத்தில் சுரத்தேயில்லாமல் மதுரா.

தாம்பூலத் தட்டுகளில் பழம், உடைகள் இனிப்பு வகையறாக்கள் தவிர, வெள்ளித் தட்டில் ரோஜா இதழ்களுக்கு நடுவில் இரண்டு தங்க மோதிரங்கள். ஒன்றையெடுத்து வெகு இயல்பாக விஜய்யின் விரலில் அணிவித்தாள் ஆதிரா.

''மதும்மா நீ அந்த மோதிரத்தை எடுத்து மாப்பிள்ளையிடம் கொடு'' என்றாள் நீலா. நடுங்கும் விரல்களால் அதை விஜய்யிடம் தந்த மதுரா ''போடுங்க'' என்றாள்.

''மது...''

'ப்ளீஸ்'' அவள் அடிக்குரலில் கூறவும், சாவி கொடுக்கப்பட்ட பொம்மையென அவன் ஆதிராவின் வெண்டை விரல்களில் வெகு தயக்கத்துடன் அணிவித்தான். மதுரா கண்ணீரையும், விம்மலையும் அடக்கத் தெரியாமல் தவித்தாள்.

வந்திருந்தவர்களின் வாழ்த்தினை இயந்திரமாய் ஏற்றன விஜய்யின் கண்கள். மற்றவர்களுக்கு தோட்டத்திலேயே விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இறுகிய முகத்தோடு மேடையில் அமர்ந்திருந்த மகனைக் கண்டதும் ஏதோ சொல்ல முடியாத பீதி எழுந்தது கமலாவிற்கு.

மாப்பிள்ளை வீட்டாருக்கென வீட்டின் மற்றொரு பகுதியில் விருந்து தயாராய் இருந்தது. இரு குடும்பங்கள்

மட்டும் கலந்து கொள்ளும் நிகழ்வு. மதுரா தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றாலும் ஆதிரா அவளைத் தனியே விடாமல் தன் வசமே பிடித்து வைத்து இருந்தாள்.

மனபாரம் உள்ளே அழுத்த அந்த வேதனையை கண்கள் பிரதிபலிக்க அதை வெளிக்காட்ட இயலாமல் அவள் துடித்த துடிப்பு, அப்பப்பா! நரக வேதனை என்ற வார்த்தையின் அர்த்தம் இது தானோ என்று இன்று தான் தோன்றியது மதுராவிற்கு!

விஜய்யின் நிலையோ அதைவிட மோசம். இருதலைக் கொள்ளி எறும்பெனத் தவித்தான். ஆசையோடு தன் மனங்கவர்ந்த காதலியை இன்று அடையப் போகிறோம் என்ற நினைப்பில் திளைத்திருந்தவனுக்கு, ஆதிராதான் மணமகள் என்றதுமே தலை சுற்றியது.

ச்சே! மதுரா என்னைப் பற்றி எத்தனை தவறாக எண்ணியிருப்பாள் காதல் என் கண்ணை மறைத்து விட்டதா? தீர விசாரிக்காமல் நான் தவறு செய்துவிட் டேனா? சரி இனியென்ன கண்ணீரைத் துடைக்கும் மதுராவைப் பார்ப்பதா? அல்லது சபையின் முன் அரை மனைவியாய் நிற்கும் ஆதிராவை ஏற்பதா?

இறுதியில் எப்படியாவது மதுராவைச் சந்தித்து தன் மனக் குமுறல்களை கொட்டி விட வேண்டும் என்ற நினைப்பு கடைசி வரை முடியாமலே போயிற்று.

நிலவு காயும் இரவு நேரம் பௌர்ணமி நிலவு பட்டப் பகல் போல் ஒளிர்ந்து பூத்திருந்தது. ஆனால், அதைக் கண்ட மதுராவின் மனதில்தான் அமாவாசையென இருள் மண்டிக்கிடந்தது.எப்படி நிகழ்ந்தது? இந்த தவறு?

நான் விரும்பும் ஒருவன் தன்னையே ஆதிராவும் நேசித்து இருக்கிறாளா? எனில் நான் இனி என்ன செய்யப்



போகிறேன்? காதலைக் காப்பாற்றப் போகிறேனா? இல்லை சகோதரியின் பாசத்தை போற்றப் போகிறேனா?

விழா முடிந்ததும் ஒப்பனையைக் கலைக்க இருவரும் அறைக்குத் திரும்ப முயல, நீலாம்மா வந்து இரு பெண் களுக்கும் திருஷ்டி கழித்து அறைக்கு அனுப்பினாள்.

தன் ஒப்பனையைக் கலைத்தவாறு தான் விஜய்யின் மேல் கொண்ட காதலை ஆதிரா விளக்கினாள்.

''அவரை முதன் முதலில் நம்ம கடையில் தான் பார்த்தேன். பார்த்தவுடன் மனதில் ஒட்டிக் கொண்ட முகம் இவர் தான். எனக்கென முடிவு செய்து அப்பாவிடம் பேசினேன். திருமணமே வேண்டாமென்று இருந்த நான் காதல் என்று போய் நின்னதும் அப்பா ஒரு விநாடி தான் யோசித்தார்.

''பின்னர் பரிசு பெற்றதற்கு விருந்து என அழைத்து பேசினோம். அந்த இரண்டரை மணி நேரங்களில் அப்பாவுக்கும் திருப்தி.''

''இத்தனை பெரிய நிர்வாகத்தையே திறம்பட நடத்தும் என் மகளின் தேர்வு தப்பாது என்று கூறி அவரும் ஒப்புக் கொண்டு மறுநாளே சம்பந்தம் பேசவும் சென்று விட்டார். ஆனால் இன்னமும் என்னால் நம்பவே முடியலே மது அவரும் என்னை நேசித்தார் என்று?''

''ஏன்க்கா உனக்கென்ன குறைச்சல் குருடன் கூட உன்னை வேண்டாமென்று சொல்லமாட்டானே?''

''என்னவோ என் மனம் போல வாழ்வு அமைந்து விட் டது'' ஆதிரா சொல்லச் சொல்ல மதுராவின் மனதில் யாரோ கத்தியை செருகியது போல ஒருவலி.

''நீ ஓய்வெடு அக்கா. நான் ரூமுக்கு போறேன். ஒரே அலுப்பா இருக்கு'' என்றாள் சோர்ந்த முகத்துடன்.

ஆதிராவுக்கும் அவளின் சோகம், ஏமாற்றமும், அழுகை எல்லாம் புரிந்தது. அதை ரசிக்கத்தானே அவளை வம்படியாக நிறுத்தி இத்தனையும் கூறிக் கொண்டு இருந்தாள். ஒரு கட்டத்தில் மதுரா விலகவும் பாவப்பட்டு விட்டு விட்டாள்.

அதுவும் எப்படி? தன்னால் இனி ஒவ்வொரு நொடியும் அவள் வேதனை அடையத்தானே போகிறாள். பாவம் இந்த இரவாவது இவளின் நிம்மதியைக் கெடுக்க இத்தனை போதும் என்ற நினைப்பில்.

மதுரா கட்டிலில் விழுந்து கண்ணீர் தீரும் வரை அழுது தீர்த்தாள். பின் தீர்க்கமான ஒரு முடிவுடன் எழுந்தாள். இத்தனை தூரம் ஆனபிறகு இந்த திருமணம் நடைபடக் கூடாது.

திருமணத்தையே வெறுத்தவள் காதல் வயப்பட்டு இருக்கிறாள், மகளின் வாழ்வு செழிக்கும் என்ற கற்பனையில் இருக்கும் தந்தை, பெற்ற மகளை விடத் தன்னைப் பெரிதாய் வளர்த்த நீலாம்மா, என தன்னைச் சுற்றி உள்ள உறவுகளை நோகடித்து விட்டு என் காதல் பூஜிப்பதா அத்தனை சுயநலவாதியா நான்? குழம்பினாள்.

ஒரு குடும்பம் செழிக்க ஒருவர் தியாகம் செய்ய வேண்டும். ஒரு ஊர் செழிக்க ஒரு குடும்பத்தை தியாகம் செய்யலாம் என்ற விவேகானந்தரின் கூற்று நினைவிலாடியது. அதேபோல்தான் தன் காதலுக்கும் கல்லறை கட்டத் தயாராகி விட்டாள் மதுரா. ஆம் இது பற்றி விஜய்யிடம் பேசி விட வேண்டும். அதற்கான நேரம் வாய்க்க வேண்டுமே என யோசித்தாள். கண்கள் நெருப்பில் விழுந்தது போல் பற்றி எரிந்தது.



# 7

உயர்ந்த மலைப்பாதை விஜய்யும், மதுராவும் அங்கு இன்பமாய் உலாவிக் கொண்டிருக்க திடீரென அவர்களின் முன் ஒரு மலைப்பாம்பு அவர்கள் முன் தோன்றி நர்த்தனமாடியது. பின்பு அது விஜய்யை மட்டும் விழுங்கி விட மதுரா துடித்துக் கதறினாள். தலைவிரி கோலமாக இலக்கின்றி ஓடினாள்.

ஆ... யென்னும் அலறல் ஒலி மதுராதான் அலறியது. உடல் முழுக்க தொப்பலாய் நனைந்து முகத்தைக் கூடத் துடைக்கத் தோன்றாமல் எழுந்து கதவைத் திறந்தாள்.

குடும்பம் மொத்தமும் அங்கு சூழ்ந்திருந்தது. ஆளாளுக்கு கேள்வி கேட்டார்கள். கவலை தோய்ந்த குரலில் "என்னம்மா ஆச்சு?" நீலா மெல்ல தலையை தடவி, புடவைத் தலைப்பில் முகத்தை துடைத்து விட்டாள். "ஏன் உன் ரூமில் மட்டும் பவர் கட்டாகி இருக்கு? இருட்டில் பயந்திட்டியா?" பார்வதி தண்ணீர் கொண்டு வந்து தந்தாள்.

"ஏதோ பயங்கரமான கனவு!"

"ச்சே இவ்வளவு தானா நான் ரொம்ப பயந்திட்டேன்" என்றார் சந்தானபாரதி புன்னகையுடன்.

"என்ன மது இது? சின்னக் குழந்தை மாதிரி கனவு கண்டேன் அலறிட்டேன்னு" ஆதிராவின் குரலில் சீண்டல் தொனித்தது. "சரி நான் வேணுமின்னா உன்கூட இருக்கவா? கொஞ்ச நேரம் பேசிக்கிட்டு இருப்போம்?"

ஆதிரா கேட்கவும், வேகமாய் தலையசைத்து மறுத்தாள் இளையவள்.

பேச்சு என்ற பெயரில் அவள் மறுபடியும் விஜய்யைப் பற்றி பேசுவாள் அதைத் தாங்கும் அளவிற்கு மனதிற்குத் தெம்பில்லை. ''வேண்டாம் அக்கா.''

''அதற்குள் நீ போ ஆதிம்மா நான் மதுவோட இருக் கேன்'' என்றாள் நீலா. சொன்னதோடு இன்றி அலை பாய்ந்த அவள் கூந்தலை ஹேர் பேண்ட் மூலம் ஒழுங்கு படுத்தி, தலையணையை சீராக்கி மதுவை படுக்க வைத்துப் போர்வையை மூடினாள்.

சந்தானபாரதியும், பார்வதியும் வெளியேறினர்.

''என் மேலும் மதுவின் மேலும் அக்காவிற்கு எத்தனை அன்பு கணவரின் மனதறிந்து நடக்கும் குணம் நீலாக்கா கிடைக்க நீங்க கொடுத்து வைச்சிருக்கணுங்க.''

''ம்...'' அவர் சுரத்தில்லாமல் பதில் கூறினார். மனதில் அந்நாளைய சம்பவம் காட்சியாய் விரிந்தது.

மதுவிடமும், பார்வதியிடமும் அன்பாய் நீலா பேசியது அவருக்கு வியப்பைத் தந்தது. அந்த பதிமூன்று வருடத் தாம்பத்தியத்தில் எதிலும் பிடிவாதமாய், தான் எண்ணி யதைச் சாதிக்கும் குணம் கொண்டவள் நீலா. ஆனால் இதை ஒப்பக் கொண்டது ஆச்சரியம்தானே.

குறைந்த பட்சம் சண்டையாவது போடுவாள் என்று நினைத்தார். ஆனால் அன்றிரவே பேரிடியை தலையில் இறக்குவாள் என்று எதிர்பார்க்கவில்லை. எல்லோரும் உறங்கியதும் எதிர்பார்த்துக் காத்திருந்த கணவரின் முன் நின்றவளைக் கூர்ந்து பார்த்த சந்தானபாரதி ''என்ன நீலா ஏதும் பேச மாட்டேங்கிறே?''



''உங்களிடம் பேசுற அளவுக்கு நீங்க ஒண்ணும் நல்ல காரியம் செய்திடலையே? தன் புருஷனோட துரோகத்தை எந்த மனைவியும் மனசால கூட வரவேற்க மாட்டா...''

''ஆனா நான் கல்யாணத்திற்கு முன்பே என் நிலையை உன்னிடம் கூறிடத் துடித்தேன் நீலா. சூழ்நிலைகள் என் கையைக் கட்டிப் போட்டுவிட்டன.''

''இருங்க நான் பேசி முடிச்சிடறேன். பார்வதியும், மதுரா வும் தாராளமா இந்த வீட்டுல உங்க மனைவி, மகள்ங்கிற அந்தஸ்தில் இருக்கலாம். இது உங்க அப்பா சொத்து! இதை யார் பேரில் எழுதவும் உங்களுக்கு உரிமையுண்டு. ஆனா என் மகள் ஆதிராவிற்கு கிடைக்க வேண்டிய மரியாதையும், அன்பும் உங்ககிட்டே இருந்து முழுமையா கிடைக்கணும்.''

''ஆதி என் மூத்த மகள்! அவள் மேல் கொண்ட அன்பு என்றுமே மாறாது.''

''இது உறுதிதானே.''

''சத்தியம்!''

''சரி இதேபோல் நீங்க எனக்கு இன்னொரு உறுதியும் தரணும்'' என்ன என்பது போல் கலக்கமாய் பார்த்தவரிடம், ''இந்த விநாடியில் இருந்து நம்முடைய உறவு மனதள வில் மட்டும் தொடர்ந்தாலே போதுமானது.''

''நீலா?''

''எனக்கும் சுயமரியாதை இருக்குங்க. ஒரு பொண் ணுக்கு பெரிய அவமானமே அவள் கணவன் இன்னொருத் தியை தேடி போறது தான்! இது ஒண்ணும் பெரிய விஷய மில்லைன்னு ஊர் பேசலாம். ஆனா என்னைப் பொறுத்த வரையில் அப்படியில்லை. தவிரவும், நானும் சராசரி

பெண்மாதிரி எல்லார் முன்னாடியும் உங்களை அசிங்கப் படுத்திட முடியும். ஆனால் எனக்கு என் மகளின் வாழ்வு முக்கியம். இளமைப் பருவத்தில் அவளுடைய மனம் விசனப் படக்கூடாது. வேதனையடையவும் கூடாது. நமக்குள்ளே நடக்கும் இந்த மவுனப் போராட்டம் என் மகள் ஆதிராவுக்கோ, வேறு யாருக்கோ தெரியவே கூடாது.''

அன்று ஏதோ கோபத்தில் அப்படிப் பேசுகிறாள் என்று நினைத்தார் சந்தானபாரதி. ஆனால் இந்த விநாடி வரை அந்த முடிவில் உறுதியாய் இருக்கிறாள் நீலா.

அவரும் இது வேறுயாருக்கும், முக்கியமாய் பார்வ திக்குத் தெரியக்கூடாது என்பதில் தீவிரமாய் இருந்தார். அடுத்தவர்கள் மனம் சங்கடப்படக்கூடாது என நினைக் கும் அவளுக்கு இது தெரிந்தால், அவள் ஏதேனும் விபரீத முடிவெடுக்கக்கூடும் என்று அவர் பயந்தார்.

ஆனால் ஒருமுறை ஆதிரா கேட்ட கேள்வி அவரை பயங்கொள்ள வைத்தது.

''ஏம்ப்பா பார்வதி சித்தியை நீங்க இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களாப்பா? அவங்க என்னை யும், அம்மாவையும் உங்க கிட்டே இருந்து பிரிச்சிடு வாங்களா?''

கண்களை உருட்டியபடி மிரட்டியும், பயமும் கலந்த குரலில், அவள் கேட்கவும், அவர் திகைத்து தான் போனார்.

அதன் பின்னணியாய் நீலாவின் தாய் தன் குழந்தை யின் மனதை கலைத்துவிட்டதை உணர்ந்தார். மனைவி யிடம் அதையே பேசவும் செய்ய அவளும் ஒப்புக் கொண்டாள்.



''நீலா மகளை தாய் வீட்டிற்கு அழைத்து சென்றபோது. ''ஏய் ஆதி அந்த மேனாமினிக்கி எப்படியிருக்கு?'' என்பாள் தட்டில் சாப்பாட்டை வைத்துக் கொண்டு,

''யாரு பாட்டி?''

''எல்லாம் உங்கப்பன் என் மகளுக்கு வினையாகக் கொண்டு வந்து இருக்கானே அந்தக் கடன்காரியைத்தான் கேக்குறேன். பேரப்பாரு பார்வதியாம் பார்வதி?'' ஒரு வாய் சோறு உள்ளே போகும்?

''சித்தியா! நல்லாயிருக்காங்க?''

''வாயைப் பிச்சுடுவேன்! அவளைப் போய் சித்தி, கித்தின்னா கடன்காரி, என் மக வாழ்வையே சீரழிச்சிட் டாளே'' புலம்பியபடியே மேலும் ஒரு வாய் சோற்றைத் திணிப்பாள்.

''என்னம்மா இது, சின்னப் பொண்ணுகிட்டே போய் எதைப் பேசுறே?'' தாயை அதட்டினாள்.

''உனக்கு புருஷனைக் குறை சொன்னா, பொறுக்காதே! இப்படியொரு பிள்ளையை கட்டி காப்பாத்த துப்பில்லாம எவளோ மேனாமினுக்கியைத் தாங்குறானே'' பாட்டி கண்ணீரோடு அங்கலாய்ப்பாள்.

நீலா அத்தோடு பேச்சை நிப்பாட்டி விடுவாள். பெற்ற வயிறு பாவம் ஆற்றாமையால் பேசுகிறாள். அவளை குறை சொல்லவும் முடியாது. ஆனால் இதே பேச்சுகள் மகளின் மனதில் வேற்றுமையைத் தோற்றுவிக்குமே? எனவே அடுத்து வந்த நாட்களில் அவளை தன் தாய் வீட்டிற்கு கூடுமானவரை அனுப்பாமல் பார்த்துக் கொண்டாள். இருப்பினும் மகள் இப்படியொரு கேள்வியைக் கேட்டாள் என்று அவளும் எதிர்பார்க்கவில்லை தான்.

# 8

வானம் முழுவதும் கருநீலமாய் இருந்ததால் சூரியன் தன் மஞ்சள் நிறத்தை பூசிக் கொண்டு இருந்தான் தன் செங்கதிரான தூரிகையை வைத்து!

காலையில் இருந்து விஜய்யை சந்திக்க வேண்டும் என்று மனம் துடித்தது மதுராவுக்கு! குளித்து முடித்து அவசரமாய் கிளம்பியபடி இறங்கியவளை எதிர் கொண்டாள் ஆதிரா.

''வா, மதுரா, உன்னைத்தான் எதிர்பார்த்துகிட்டு இருந்தேன்'' ஆதிரா கூறியபடியே புன்னகைத்தாள்.

''என்னக்கா'' பதிலுக்கு புன்முறுவல் செய்ய முயன்று தோற்றுப் போயின அவளின் இதழ்கள், ''நீ எங்கேயோ கிளம்பிட்டே போலயிருக்கே?''

''ஆமா நம்ம கோயமுத்தூர் காட்டன் மில்லில் சில மெஷினரிஸ் வாங்கணும் அதுக்காக சில ஆபீஸர்ஸ் வர்றாங்க! அதனால நீ எனக்கு ஒரு உதவி செய்யணும்.''

''என்னது?''

''இன்னைக்கு அவர் வீட்டுக்குப் போய் ஜுவல்ஸ் வாங்கப் போறதா பிளான் போட்டு இருந்தேன். ஆனா திடீர்னு இந்த புரோகிராம் பிக்ஸ் ஆயிடுச்சு. எனக்காக நீ போய் அவரைப் பிக்கப் பண்ணிட்டு வந்திடறீயா? நான் ஒன் அவர்ல கடைக்கு வந்திடறேன்'' என்றாள்.

ஒரு நொடி ரணமானாலும் பின் சுதாரித்தவள் தானே விஜய்யைப் பார்த்து பேச நினைத்துக் கொண்டிருந்த



நேரம் தானாகவே வந்தமைகிறதே என்ற நினைப்பில் ''சரிக்கா!'' என்றாள்.

ஆதிராவிடம் முகவரியைப் பெற்றுக் கொண்டு ஸ்கூட்டியை நோக்கிச் சென்றவள் விநாடி நேரத்தில் தன் நினைப்பை மாற்றிக் கொண்டு சென்னில் ஏறினாள். எத்தனை நாட்கள் அந்த ஸ்கூட்டியில் விஜய்யுடன் பயணித்து இருப்பாள்.

''ஏன் விஜய் நீங்க ஓட்டி நான் பின்னால் வரணும்! ஏன் என் பின்னால் உக்கார்ந்து வர்றீங்க?''

''மது இதிலேயும் ஒரு சுகம் இருக்கு தெரியுமா?''

''எல்லாம் கல்யாணம் வரையில்தான். அப்புறம் உங்க ஆண் வர்க்கம் எப்படி தடம் மாறும் தெரியுமா?''

''எப்படி?''

''காதலியாய் இனித்தவள், மனைவியாய் கசப்பேன், நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டு அசட்டுத்தனமாய் சிரிக்கும் காதலியைப் பிடிக்கும். ஆனால், எதற்கெடுத்தாலும் ஏன்? எதற்கு என்று கேட்கும் மனைவியை பிடிக்காது? இது தெரிந்தது தானே.''

''ஏன் அப்படி?''

''எதிரெதிர் துருவங்கள் தான் ஒன்றையொன்று ஈர்க்கும். அதுபோல் கையில் வைரமே இருந்தாலும் அதனின் மதிப்பு நமக்கு தெரிவதில்லை. ஆனால் எதிரே இருக்கும் பித்தளையின் பொய் ஜொலிப்பு மட்டும் கண்ணுக்குத் தென்படும். இது உங்களுக்கு மட்டுமல்ல உலக இயல்பு.''

''நான் அப்படியில்லை மது, நீ எனக்கு கிடைத்த பொக்கிஷம்! உன்னை எப்போதும் பூஜிப்பேனே தவிர என்றும் துன்புறுத்த மாட்டேன்.''

"சூழ்நிலைக் கைதி தான் விஜய்! மனிதர்கள். ஆயிரமே மனக்கோட்டைகள் கட்டியபோதும் சூழ்நிலை ஒரு மனிதனை அவன் சிந்தனையை நிமிட நேரத்தில் புரட்டிப் போட்டுவிடும். அதனால் நாளை நடப்பதை யாரறிவார்? எதுக்கும் முன்பே வாக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு பின்பு அவதிப்படாதே."

கார் சரேலென பிரேக் போட்டு நின்றது. அந்த குலுக்கலில் மதுரா கலைந்தாள். விஜய் வீடு சுற்றியிருந்த இயற்கையை ரசிக்கத் தோன்றாமல் நடந்து வாசற்படியில் காலைப் பதித்தாள் மனம் கனத்தது.

இந்த இடத்தில் மணமகளாய் வர வேண்டும் என்ற ஆசையும் கற்பனையும் பொடிப் பொடியானதையெண்ணி மனம் குமைந்தாள். மெல்ல சுதாரித்தபடி அழைப் பொலியைத் தொட கதவைத் திறந்தது விஜய்யின் தாய்.

"அடடே வாம்மா மதுரா எங்கே? அப்பா,அம்மாவைக் காணோம்?"

"இல்லே அத்தே" அந்த வார்த்தையின் உச்சரிப்பே அவளை அடித்துப் போட்டது.

"அத்தான் இல்லையா?"

"இருக்காம்மா! படுத்து இருக்கான் உட்காரு கூப்பிட றேன்" அவர் உள்ளே போய் மகனை எழுப்புவது கேட்டது.

கலைந்த கேசமும், சிரிப்பில்லாத முகமுமாய் வந்த விஜய்யைப் பார்க்கவே சங்கடமாய் இருந்தது. மதுராவைப் பார்த்ததும் சற்றே முகம் மலர்ந்து பின் சுருங்கினான்.

"நீங்க பேசிட்டு இருங்க, நான் காபி தர்றேன்" உள்ளே போக முயன்றவரை தடுத்தாள் மதுரா.



"எல்லாரும் நகைக்கடையில் காத்திருக்காங்க, அத் தானை..."

"அழைக்க வந்தியாக்கும்? கூட்டிட்டுப் போம்மா அக்கா, அம்மாவெல்லாம் சுகம் தானே?"

"ம்..."

"என்னடா விஜய்! அந்த பொண்ணு சொல்லிட்டு இருக்கா, நீ மரம்போல நிக்குற? போ போய் உடையை மாத்திக்கோ" மகனை விரட்டி விட்டு மதுராவிடம் திரும் பினாள்.

"என்னவோ தெரியலம்மா! காதல் கல்யாணம் பண் ணப் போறவன் நிச்சயம் முன்னாடி வரை சந்தோஷத்தில் மிதந்தவன் இப்ப என்னடான்னா எதையோ பறிகொடுத் தவன் போல இருக்கான்?"

மதுரா ஒன்றும் பேசாமல் அமைதி காத்தாள். விஜய் வெளியே வரவும், "சரி அத்தை! நான் போயிட்டு வர் றேன்" என்று கிளம்ப ஒரு நிமிடம் என்றவர் பூஜையறை யில் இருந்து குங்குமத்தை எடுத்து வந்து மதுராவுக்கு வைத்து "மனம் போல மாங்கல்யம் அமையட்டும்" என்று கூறிவிட்டு வாழ்த்தினார் அவர்.

மதுராவிற்கு மளுக்கென கண்ணீர் திரண்டது. தலை குனிந்தவாறே அவரை நமஸ்கரித்து விட்டு, காரில் அமர்ந்து கொண்டாள். அருகில் விஜய் அமர்ந்தான்.

வண்டி புறப்பட்டது. சூழ்நிலை இறுக்கம். யாருக்கு முதலில் பேசுவது என்னும் தயக்கம். மதுரா வண்டியை பீச்சில் நிறுத்தினாள்.

நேரம், வெயிலை அள்ளித் தெளித்திருந்ததால் காதல் ஜோடிகளைத் தவிர வேறு யாரையும் காணவில்லை.

காரை விட்டு இறங்க மனமில்லாமல் அமர்ந்தனர். மவுனம் அவர்களைக் கட்டிப் போட்டது.

''என்ன விஜயன், ஏன் பேசாம இருக்கீங்க?''

''உம்... முகத்தைப் பார்த்துப் பேசுற நிலையில் நான் இல்லை மதுரா.''

''நடந்ததில் உங்க தவறு எதுவும் இல்லை விஜய்! அக்கா எதிர்பாராத விதமாக உங்களைப்பார்த்து விரும்பி யிருக்கா. எல்லா விஷயமும் நேத்து என்னிடம் அவளே சொன்ன விஷயம் விஜய்.''

''வேற என்ன சொன்னா?''

''உங்களை எந்தளவு நேசிக்கிறேன்னு நான் முடிவு செய்திட்டேன். நிச்சயம் செய்த திருமணம் கட்டாயம் நடக்கணும்.''

''மது நீ என்ன பேசுறே! நான் உன்னை மட்டும்தான் நேசிச்சேன். ஒரு விநாடி கூட ஆதிராவை நான்...''

''புரியுது விஜய். ஆனா விவாதம் செய்ய இது வழக்கு இல்லை - வாழ்க்கை.''

''என்னால என் காதலைத் தியாகம் செய்ய முடியாது.''

''இதை ஊரறிய ஆதி கையில் மோதிரம் போடறதுக்கு முன்னாடி சொல்லி இருக்கணும், சரி. அதை விடுங்க. இந்தத் திருமணத்தைப் பற்றி என்னிடம் ஏன் சொல்லலை?''

''அது என் தவறு இல்லை மது, அன்னைக்கு உங்க விஷயம் அத்தனையும் எனக்குத் தெரியும். மதுரா கூட ஊரிலிருந்து கூடிய விரைவில் வந்திடுவான்னும், இது அவளுக்கு சர்ப்பரைஸா இருக்குமின்னு உங்க அக்கா சொன்னா, உங்கம்மா பார்வதி கூட எங்க வீட்டுக்கு



வந்தப்ப என் மகளைத் தான் திருமணம் செய்யப் போறதா ஊர்ஜிதம் செய்தாங்களே.''

''இதெல்லாம் நம்பித்தான் நான் ஏமாந்து போனேன்.'' அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

மதுரா அமைதியாய் இருந்தாள். விதி அவள் வாழ்வில் எத்தனை விளையாடி இருக்கிறது. கண்ணாமூச்சி ஆட்டம் கண்ணைக் கட்டி சாதுர்யமாய் யாரை நொந்து கொள்வது?

''மது இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகலை! நீ ஒரு வார்த்தை சொல்லு நாம் இப்பவே எங்காவது ஓடிப் போயிடலாம்.''

''நீங்க இவ்வளவு தானா விஜய். எத்தனை துன்பங்கள் வந்தாலும் எதிர்த்து நிற்பவன் தான் ஆம்பிள்ளை. நீங்க இத்தனை கோழையா?''

''காதல் என்னைக் கோழையாக்கிடுச்சு மது. முடிவா என்ன சொல்றே?''

''பெற்ற தாயை விட மேலா என்னை பாதுகாக்கிற நீலாம்மாவுக்கும், ஆதிராவுக்கும் என்னால துரோகம் செய்ய முடியாது.

''நீங்க அக்காவைத் தான் கல்யாணம் செய்துக்கணும்.''

''என்னால முடியாது.''

''சொன்னதையே கிளிப்பிள்ளை மாதிரி சொல்லாதீங்க விஜய்? இப்ப நம்ம காதலை மறந்தா அதனால பாதிக்கப் படப் போறது நம்ம இரண்டு பேர் மட்டும்தான். ஆனா, இந்தக் கல்யாணம் நின்னா நம்ம இரண்டு குடும்பத்திற்கும் எத்தனை அவமானம், அசிங்கம், வருத்தம்! ப்ளீஸ் ஆதிராகிட்டே அப்படியென்ன குறை கண்டீங்க?''

"அவளிடம் எந்தக் குறையும் இல்லை. குருடன் கூட அவளைத் தாங்குவான். ஆனா அது என் மதுரா இல்லையே?"

அவனின் இந்த பதிலில் உடைந்தே போனாள் மதுரா. அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. ஐந்தே நிமிடங்களில் தன் உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.

"விஜய்! என் சகோதரிக்காக காதலை உங்களை விட்டுத் தர்றதா நான் முடிவு பண்ணிட்டேன்."

"உன் சகோதரப் பாசத்திற்கு நான் பலியாக முடியாது. இப்பவே போய் நடந்ததை உங்கப்பாகிட்டே சொல்லிடலாம் மதுரா."

"அப்படி ஏதாவது நடந்தா அடுத்த நொடி நான் உங்களுக்கு உயிரோடு கிடைக்கவே மாட்டேன். விஜய் கடைசியாச் சொல்றேன். இந்தக் கல்யாணத்திற்கு நீங்க ஒப்புக்கிட்டே ஆகணும். அப்பத்தான் நம்ம காதல் உண்மைன்னு நான் நம்புவேன்."

"மது...!"

"இது சத்தியம் விஜய். நீங்க என் மேல கொண்ட காதல் உண்மைன்னா என் மனசிலே எழுந்த நினைவுக்கு மதிப்பு கொடுங்க. இப்போ நாம் ஆதிராவை பார்க்கப் போறோம். அங்கே நீங்க..."

"இனி நீ எதுவும் பேச வேண்டாம். இனிமே நான் என் உணர்வுகளை மறந்து, உனக்காக ஒரு போலி வாழ்க்கையை வாழத் தயாராயிட்டேன்."

அவன் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டாற் போல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.



மதுரா ஏதும் பேசாமல் காரைக் கிளப்பினாள். ஆனால் மனதை ஆயிரமாயிரம் நண்டுகள் கொத்தின.

# 9

திருமணம் முடிந்தது. மங்கலம் கொஞ்சும் திருமணம். இருமனங்கள் இணைந்து இன்ப உலகிற்குள் நுழைய வாசற்படியில் இருக்கும் ஆதிரா அலங்காரத்தில் பளிங்கு சிலையென ஜொலித்தாள். ஆனால் அவள் விழிகளில் வெறி வழிந்தது. கண்ணாடியின் முன் தன்னை முழுமையாய் பார்த்த அவளிற்கு பெருமை பிடிபடவில்லை.

பெரியவர்கள் இருவரும் கடவுளை வணங்கிவிட்டு, பால் செம்புடன் அவளை அந்த அறைக்குள் அனுப்பினர். கதவைத் தாளிட்டாள் ஆதிரா. அதைக்கூட உணராமல் அலங்கரிக்கப்பட்ட கட்டிலில் வீற்றிருந்தான் விஜய்.

பட்டு வேட்டி சட்டையில் அவன் ஆண்மை சற்று கூடித்தான் தெரிந்தது. அறை ரசனையோடு அலங்கரிக்கப் பட்டு இருக்க, வாசனைக்காக தெளிக்கப்பட்ட ரூம் ஸ்ப்ரே கமகமத்தது. தொண்டையை செருமினாள் ஆதிரா.

விஜய் கட்டிலில் இருந்து எழுந்தான். பால் செம்பை டீப்பாயின் மீது வைத்துவிட்டு கணவனிடம் சென்றாள்.

"என்ன விஜய் ஆழ்ந்த யோசனையா? யாரைப் பற்றி?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை."

"நான் சொல்ல வா உங்க யோசனை யாரைப் பற்றியென்று" அவள் இலாவகமாய் அருகிலிருந்த சோபாவில் அமர்ந்தாள்.

''உங்க ஆசைக் காதலி மதுரா மேல்! கரெக்டா.''

மின்சாரம் தாக்கியதைப் போல் உணர்ந்தான் விஜய்,

''இது உனக்கு...

எப்படித் தெரியுமின்னு யோசிக்கிறீங்க? உங்க காதல் விவகாரம் எனக்கு முன்பே தெரியும்?''

''முன்பேயென்றால் கல்யாணத்திற்கு முன்பாகவா?''

''இல்லை உங்களுக்கு விருந்து தந்தேனே அதற்கு முன்பு.''

''தெரிஞ்சுமா இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிச்சே?''

''எஸ்! தெரிந்துதான் சம்மதித்தேன்'' என்றாள் அழுத்தமாய்.''

''என்ன காரணம்?''

''காதல்!''

''நீ என் மேல் கொண்ட காதலா?''

''நோ நோ மதுரா உங்கள் மேல் கொண்ட காதல்.''

''வாட்?''

''எஸ் எஸ் மிஸ்டர். விஜய்! இது உண்மை. டபுள் டிகிரி படிச்ச பொண்ணு ஒரு. திறமையான நிர்வாகி சமூகத்தில் அந்தஸ்து உடைய நான் எனக்கு கொஞ்சமும் சமமில்லாத உங்களைத் திருமணம் செய்ய முன் வந்தது ஏன்? யோசிங்க, பாவம் உங்களுக்கு பழைய காதலி பத்தின நினைப்பே விடலை.''

''ஆதிரா! நானும் மதுராவும் நேசித்தது உண்மைதான். ஆனால் எப்ப உன் விரலில் மோதிரம் போட்டேனோ, அந்த நிமிடமே உன்னை மட்டும்தான் என் மனதில் நினைத்து இருக்கிறேன்.''



''டயலாக் எல்லாம் நல்லாத்தான் இருக்கு! பேசற ஆள்தான் சரியில்லை.''

''அப்படின்னா நீயென்னை நம்பலை இல்லையா?''

''நம்பறதும் நம்பாததும் அப்புறம் அதாவது இரண்டாம் பட்சம்! இப்ப என்னுடைய முடிவெல்லாமே மதுராவை எப்படி அழவைப்பது என்றுதான்.''

''நீ சொல்வது ஒன்றுமே எனக்குப் புரியவில்லை ஆதிரா.''

''புரியும் விஜய் புரியும்! என்னைக் கண்ணுக்குள்ளே வைச்சு தாங்கின என் தாயைக் கஷ்டப்படுத்தினாங்களே, என் தந்தை என் மேல் கொண்ட அன்பைப் பங்கு போட்டாங்களே? தாலி கட்டிய கணவனை இன்னொருத்திக்கு தாரை வார்த்துட்டு தினமும் ரத்தக் கண்ணீர் வடிக்கிற என் தாய் படற வேதனையை, அவங்க பட வேண்டாம்? அதுக்காகத்தான் இந்தத் திருமண பந்தம்.

''முறைப்படி திருமணமாகி வந்த எங்கம்மாவிற்கு கிடைக்கும் அத்தனை உரிமையும் பார்வதியம்மாவுக்கும் எப்படி கிடைக்கலாம்? அவங்க முகத்தில் குடிகொண்டு இருக்கிற நிம்மதியையும், சந்தோசத்தையும் அழிக்கனுமின்னு திட்டம் போட்டேன். அதுக்கு வழி இது தான்னு பட்டது. தன் காதல் பறிபோனதையெண்ணி மகளும் பெண்ணுடைய கண்ணீரைக் கண்டு தாயும் இரண்டு பேரும் அழனும்.''

''ஆதிரா உன் கணிப்புத் தவறானது! மது உன்னை ரொம்பவும் நேசிக்கிறா. உண்மையைச் சொல்லப் போனா நான் இத்திருமணத்தையே நிறுத்திடலாமின்னு நினைச்சேன் ஆனா?''

''ஆனாயென்ன ஆனா? இங்க பாருங்க விஜய்! ஆயிரம்தான் நீங்க கன்வின்ஸ் பண்ணினாலும் என் மனசு ஆறாது. இது பல வருட ஆதங்கம்.''

அவள் கண்களிலும் முகத்திலும் கோபம் கொப்பளித்தது. இனி அவளிடம் எது பேசினாலும் எடுபடாது. விட்டுத்தான் பிடிக்க வேண்டும் என்ற நினைப்பில் "பழையதையெல்லாம் மறந்திடு ஆதிரா" என்று அவள் தோளைத் தொட்டான்.

"விஜய் உங்களைக் கணவராக ஏற்றுக் கொள்ள எனக்குத் தடையில்லை. ஆனால் மதுராவை மறந்து புது மனிதராகத்தான் நீங்கள் எனக்கு வேண்டும்."

"மதுரா என் மனதில் காதலியாக இனி என்றுமே இருக்கப் போவதில்லை. ஆனால் நல்ல தோழியாக இருப்பாள்."

"ஸாரி விஜய்! என்னைச் சார்ந்த யாரும் மதுவிடம் நட்புப் பாராட்டுவது எனக்குப் பிடிக்காது."

மீறினால்..."

ஆதிரா சிரித்தாள். "என் வழிக்கு உங்களை நிச்சயம் இழுப்பேன்" அவள் கட்டிலில் அவனுக்கு முதுகு காட்டிப் படுத்துவிட்டாள்.

அறையில் நிற்க மனமின்றி வெளியே வந்தான். மற்றவர்கள் இந்நேரம் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பார்கள். மனிதனின் வாழ்வில் மறக்க முடியாத இரவு முதலிரவு. ஆனால் அது எல்லோருக்கும் நலமானதாய் அமைவது இல்லையே.

இதோ இங்கே ஆதிரா என்னும் ஒரு பெண்ணின் பழியுணர்விற்கு ஒரு உண்மையான காதல், இரண்டு இதயங்கள் ரணமாகி இருக்கிறதே. இந்த பழியுணர்வால் இவள் மட்டும் என்ன சுகம் அடைந்தாள்?

ச்சே என்ஜாண் உடல் போகும் போதும், வரும் போதும் என்ன கொண்டு வந்தோம்.



இடைப்பட்ட இந்த சில நாட்களில் எத்தனை கோபம், வெறுப்பு நிலையில்லா வாழ்வில் எத்தனை தொல்லைகள்! மனம் ஏனோ மதுராவின் நினைவிலே சுழன்றது. ஆனால் அது பெரும் தவறு என்பதை உணர்ந்தான் விஜய். என்னதான் பிடிக்காத மனைவியாய் இருந்தாலும் மனைவி எனும் பந்தத்திற்குள் வந்த பின் இனி அவளை விடுத்து இன்னொரு பெண்ணை மனதார கூட நினைப்பது என் தாம்பத்திய வாழ்விற்கு செய்யும் துரோகம்.

தவிரவும் ஒரு பண்பான ஆண்மகனுக்கு அது அழகல்ல. ஆதிராவும் நல்லவள் தான். ஏதோ தேவையில்லாத மனக்கசப்பு. அவளை இந்த அளவிற்குத் தள்ளியிருக்க வேண்டும். போகட்டும், இனி அவளை சீர் செய்வது தான் என் வேலையாய் இருக்க வேண்டும். மனதில் எண்ணியபடி படியேறினான். ஆனால் அது அத்தனை சுலபமானது அல்ல என்பதை விஜய் உணரவில்லை. [illegible]வம் நடப்பதை முன்பே அறிந்து விட்டால், வாழ்வின் சுவாரஸ்யம் பறி போய் விடுமே.

ஏதோ ஒரு நிழல் உருவம் அங்கே நின்றிருந்ததை அறிந்து வியந்தான். நடுநிசியில் யார் இங்கு நிற்பது? யோசனையில் திகைத்த அவனின் விழிகள் மீண்டும் விரிந்தன. அது மதுராதான். விரைந்தான்.

உறக்கம் வராமல் புரண்டு படுக்கையை நனைக்க பிடிக்காமல் இரவின் தனிமையை பங்கு போட மாடியேறினாள்.

வானில் நிலா அவளைப் போலவே தனியாய் நின்றது.

"மதுரா?"

"விஜய்...! நீங்க எங்கே இந்நேரத்தில் அக்காவைத் தனியா விட்டுட்டு? தப்பு விஜய்! என்னதான் மனசில

ஆயிரம் கவலை இருந்தாலும், அதையெல்லாம் ஒதுக்கி வைச்சிட்டு அக்காவை நல்ல படியா கவனிச்சிக்கோங்க விஜய் ப்ளீஸ்.''

விஜய்க்கு வியப்பாய் இருந்தது. இவளை எதிரியாய் கருதும் ஒரு பெண்ணிற்கு எத்தனை அன்பாய் உதவும் குணம் கொண்டு இருக்கிறாள்.

''நீ எத்தனை நல்ல பெண்! நிச்சயமாய் உன் சகோதரி கெட்டவளாய் இருக்க முடியாது.

சூழ்நிலைதான் உன் மேல் குரோதத்தை அள்ளித் தெளித்து இருக்க வேண்டும்.''

அவன் பேசாமல் அவளையே பார்த்தான். ''ப்ளீஸ் விஜய் என்னையே நினைச்சிகிட்டு இப்படி உங்க வாழ்வை அழிச்சிடாதீங்க, விஜய் நான் உங்க காலில் விழ றேன்'' என்று விழப் போனவளைத் தூக்கினான் விஜய்.

''மது என்னை மன்னிச்சிடும்மா. இனி உன் சொல் படியே நான் நடக்கிறேன். நீ ஒரு மாணிக்கம். உன் அருமை எனக்கு மட்டும் தான் தெரியும்.''

உணர்வு பொங்க பேசிவிட்டு இருந்த நேரம் மருமகன் இந்நேரம் தனியே எங்கு செல்கிறார் என்று பின்னாலேயே சென்ற நீலாவிற்கு மதுராவும், விஜய்யும் ஒன்றாக பேசிக் கொண்டு இருந்தது வியப்பைத் தந்தது.

நடு நிசி நேரம் திருமணமான ஆண் அதுவும் முத விரவில் தாலி கட்டிய மனைவியை விடுத்து இன்னொரு பெண்ணிடம்? பேச என்ன காரணம் இருக்கும்? நீலாவின் மனம் பலவாறு கணக்கு போட்டுக் கொண்ட நேரத்தில் தான் விஜய் தன் காலில் விழுந்த மதுராவை தொட்டு தூக்கியதைக் கண்டதும் நீலாவின் பார்வை வேறு கோணத்தில் சென்றது.



இது பற்றி பேசி ஆதிராவை எச்சரிக்க வேண்டும் இதை இப்படியே வளர விடுவது அத்தனை நல்லதாய் பட வில்லை அவளுக்கு.

## 10

மறுநாள் மறுவீடு அழைப்பு சம்பிரதாய சடங்குகளில் எல்லாம் சற்றும் முகம் சுளிக்காமல் வளைய வந்தாள் ஆதிரா. ஆனால் ஏக்கம் வழிந்த விழிகளோடு தவித்தாள் மதுரா. வெளியே சொல்லவும் முடியாமல் தொண்டை யில் முள் சிக்கியது அவன் துடித்த வேதனை விஜய்யை சங்கடப்படத்தான் வைத்தது.

அடிக்கொருதரம் அவளையே கவனித்துக் கொண் டிருந்த விஜய் தன்னை நீலா நோட்டம் விட்டுக் கொண் டிருப்பதை கவனியாமல் இருந்து விட்டான். கட்டிய புது மனைவி அருகில் இருக்கும் போது மதுராவையே இவன் நோக்கக் காரணம் என்ன? என்று நீலாவின் மூளை யோசித்தது. அதனால் கூடுமான வரையில் மதுராவை அவன் கண் முன்பு நிற்க விடாதபடி வேலை ஏவிக் கொண்டே இருந்தாள்.

உறவுகள் சூழ்ந்து இருக்க மணமக்கள் ஹாலில் அமர்ந்து இருந்தனர்.

''சம்பந்திம்மா! எல்லாம் திருப்திகரமாக இருந்ததா?'' சந்தானபாரதி கமலத்துடன் பேசினார்.

''திருப்திதாங்க இந்த சந்தோஷம் கடைசி வரை நிலைக்கணுமின்னு கடவுளை வேண்டிக்கிறேன்'' கமலம் கை எடுத்து கும்பிட்டார்.

''அம்மா மாப்பிள்ளைக்கும், ஆதிராவுக்கும் தனிவீடு எடுத்திருக்கோம் நீங்களும் அங்கேயே வந்திருங்கம்மா, இன்னும் ஒரு வாரம் பொறுத்திருந்து அவங்க ஹனிமூன் போயிட்டு வந்திடட்டும். அதுக்குப் பிறகு நம்ம கடையில் பொறுப்பா இருக்கட்டும். இந்த சொத்தெல்லாம் என் மகள்களுக்குத் தானேம்மா.''

''அண்ணா! எம்மக உண்டாயிருக்கா இன்னும் கொஞ்ச நாளைக்கு அவளுக்கு ஒத்தாசைக்கு ஆள் தேவைப்படும் அதுவரையில் நான் அவகூட இருக்கப் பிரியப்படறேன். இதுங்களும் சின்னஞ்சிறுசுங்க, தனியா இருக்க ஆசைப் படுங்க! என்னம்மா மருமகளே நான் சொல்றது சரிதானே.''

''உங்க விருப்பம் அத்தை. நீங்க எப்ப வேண்டு மானாலும் எங்களுடன் வரலாம்.''

''சரி விருந்து தயாராயிருச்சி எல்லோரும் வாங்க'' பார்வதி அழைக்கவும் உணவருந்திட எழுந்தனர். விஜய் யின் கண்கள் மட்டும் நாலாபுறமும் சுழன்றன.

''இங்கு பாரு விஜய், குத்தமோ குறையுயோ நீயா ஆசைப்பட்டு செய்த கல்யாணம் இது. இதன் நிறை குறை களை நீதான் அனுசரித்து நடக்கணும். இதை நான் ஏன் சொல்றேன்னா கொஞ்ச நாளாவே நீ சரியில்லை. கல்யாண பேச்சின் போது இருந்த உற்சாகம் இப்ப உன் முகத்தில் இல்லை, களையிழந்து போய் இருக்கே? என்னப்பா ஏதும் பிரச்சனையா?''

''அதெல்லாம் இல்லைம்மா! நான் நல்லா இருக்கேன். நீங்க என்னைப் பற்றி எந்த கவலையும் படாமல் தங் கையை கவனிங்க!''

''என்னமோ விஜய்! நீ நல்லா இருந்தா சரிதான் வர்றேன்.''



தாய் போகும் முன்பு உரைத்துவிட்டு சென்றார். அமுதா கிளம்பும் நேரம் ஒருதாம்பூலத் தட்டில் பட்டுப்புடவை பூ, பழங்கள் கூடவே 1001 ரூபாயும் வைத்து நீட்டினாள் ஆதிரா.

''இது உன் பிறந்த வீட்டு சீர் அமுதா'' என்றாள்.

புது அண்ணியின் இந்த கவனிப்பில் அம்மாவும், அமுதாவும் ரொம்பவே குளிர்ந்து தான் போனார்கள்.

கணக்கு வழக்குகளை கவனித்துக் கொண்டிருந்தனர் தந்தையும் மகளும், ''அப்பா, போன வருடத்தை விட இந்த வருடம் நம்ம கடையில் நல்ல இலாபம்தான்.''

''என்னங்க?''

''என்ன நீலா?''

''எல்லோரும் ஒண்ணா இருக்கீங்க பரவாயில்லை நானும் நல்ல நேரம் பார்த்துத்தான் பேச வந்து இருக்கேன்.''

''என்ன பீடிகை எல்லாம் பலமா இருக்கு?''

''ஒண்ணுமில்லை ஆதிராவோட கல்யாணம் நல்ல படியா முடிச்சாச்சு. அதேபோல மதுவோட கல்யாணத் தையும் சீக்கிரமா முடிச்சிடலாமே'' நீலா அவ்வாறு சொன்னதும் சட்டென திகைத்தாள் மதுரா.ஆதிரா ''ஏம்மா மதுக்கு அப்படியென்ன வயசாயிருச்சு 20 தானே ஆகுது? இப்பயென்ன அவசரம்? தவிரவும் அவளுடைய டிசைன்ஸ் எல்லாம் பார்த்தேன். ரொம்ப பிரமாதம்.

''அவ அதையெல்லாம் வெளியில கொண்டு வர வேண்டாமா?''

''நீ சும்மாயிரு ஆதி! பெண்கள் தனக்குன்னு ஒரு வாழ்வை விரைவிலேயே அமைச்சிக்கணும். அப்பதான் மனசு அலைபாயாது.''

சந்தானபாரதி சரக்கென நிமிர்ந்தார். ''என்ன பேசுற நீலா?''

''நான் நாலையும் புரிஞ்சு நல்லதுக்குத்தான் சொல்றேன்'' அவள் உள்ளே போய்விட்டாள்.

# 11

மதுரா கடலையே வெறித்து பார்த்தபடி இருந்தாள். அள்ள முடியாத நீர், தொட முடியாத வானம், திரும்பப் பெற இயலாத நிமிடங்கள் இவை போல காதலும் அடைய முடியாத பொக்கிஷம் தான். அதை தொலைத்து விட்டுத் தான் தவித்துக் கொண்டு இருக்கிறாள் மதுராவும்.

அலையின் வேகத்தை விட மனபாரத்தின் சோகம் அழுத்தியது. தனியாய் அழுது நான்கு பேர் முன்பு சிரித்து அப்பப்பா எத்தனை வேதனைகள், குமுறல்கள்.

கரையில் நுரைகளை விட்டுவிட்டு கடலில் சேரும் அலைகளைப் போல மதுராவும் அலைமோதினாள். யோசனையில் மூழ்கி இருந்தவளை கண்களைப் பொத்திய அந்த மென் கரங்கள் ஈர்த்தன. அது சர்வ நிச்சயமாய் ஒரு ஆணின் கரம்தான்.

''யாரது?'' அவள் பதறும் போதே அவன் சடாரென மதுவை முன்புறம் திரும்பினான்.

''வாசு நீங்களா?'' வியப்பில் அவள் விழிகள் விரிந்தன.

''அப்பாடி பெயரையாவது நினைவு வைத்திருக்கிறாயே நன்றிம்மா.''



''ஏன்? அப்படிச் சொல்றீங்க வாசு?''

''பின்னயென்ன மது வந்து 20 நாள் ஆச்சு நல்லபடியா வந்து சேர்ந்திட்டேன்னு ஒரு தகவல் கூட இல்லையே உன்னிடம்.''

''ஸாரி வாசு நான். நல்ல மூடில் இல்லை.''

''அது சரி உனக்கு ஆயிரம் டென்ஷன் இருக்கும் இந்த மடையனை எங்கே நினைவு வைத்துக் கொள்ளப் போகிறாய்?''

''அய்யோ ஸாரி ஸாரி.''

''ஏய் ஏய் நிறுத்து இதென்ன ஸ்கூல் பொண்ணு மாதிரி ஸாரி சொல்லிகிட்டு'' அமைதியாய் இருந்த அவளை கவனித்தான்.

''என்னாச்சு மது? அன்று நான் பார்த்த உற்சாகம் ததும்பும் முகம் இல்லையே இது என்னம்மா?''

''சொல்லு மது என்னிடம் நீ எதையும் மறைக்க வேண்டாம் ஒரு வேளை நான் உன்னை தொந்தரவு செய்வதாய்...''

''ச்சே! உண்மையைச் சொல்லப் போனால் உங்களை கண்டது எனக்கு மிகப் பெரிய ஆறுதல் வாசு.''

''பிறகென்ன தயக்கம்?''

மனதின் வலியை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று தான் மதுராவும் எண்ணினாள். வாசுவின் கனிவான பேச்சு அவளை வழிக்குக் கொண்டு வந்தது. சகலமும் கொட்டித் தீர்த்தாள்.

''யூ ஆர் ரியலி கிரேட் மது'' வாசு மனம் திறந்து பாராட்டினான். ''தன் காதலை துறக்கும் ஜீவனின் மனம் எத்தனை சங்கடப்படும் என்று நீ சொல்ல வேண்டியது

இல்லை எனக்கு. தெரியாமல் இழப்பு இயல்பு. ஆனால் தெரிந்தே தன் உடமையை இழப்பது எத்தனை துயரம்.''

''இல்லை வாசு விஜய்யை என் மனதில் காதலன்ங்கிற நினைப்பில் இருந்து நான் எப்பவோ விலக்கிட்டேன். ஆனால் சில நேரம் என் மனம் கேட்கிற கேள்விக்கு என்னால பதில் சொல்லத் தெரியலை.''

''மது எல்லா மனிதனுக்குள்ளும் பொது நலத்தை மீறிய சுயநலம் ஒளிந்து இருக்கும். ஆனால் நீ சுயநலத்தை அழித்து பொது நலத்தை வியாபித்து இருக்கிறாய். அந்த தியாகத்தை விமர்சிப்பது கூட உன் அன்பு உள்ளத்திற்குப் பழுதுதான்.''

''சரி என்னைப் பற்றி இருக்கட்டும் நீங்கள் என்ன திடீர் விஜயம்?''

''மக்கு நான் தான் முன்பே சொல்லி இருந்தேனே கூடிய விரைவில் இங்கு வருவேன் என்று. நீ ஊரிலிருந்து வந்த பின்பு எந்தத் தகவலும் இல்லையா எங்கே அந்த கடைசி நாள் நினைவை எண்ணி நீ கவலைப்படுகிறாயோ என்று நான் எண்ணினேன்.''

''உன்னைத் தொடர்பு கொள்ளவும் தயக்கமாய் இருந்தது. நேற்று மாலை தான் வந்தேன். டைம் பாஸிற்கு பீச் வந்தேன். துள்ளி வரும் அலைகளை கண்ட போது உன் ஞாபகம்தான் வந்தது மதுரா! அதான் உன் மொபை லுக்கு ட்ரை பண்ணினேன். எனக்கு வெகு சமீபத்தி லேயே ரிங்டோன்! திரும்பினால் நீ அலையை முறைத்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாய்.

''உன் கையில் உள்ள போன் கூட அடித்து அடித்து ஓய்ந்து விட்டது. நீ நினைவில்லாமல் கடல் அருகில் செதுக்கிய மண் சிற்பம் போல் பிரமை பிடித்து இருந்தாய்.''



''மனிதனை செயல்படுத்துவது மூளையாய் இருக்க லாம். ஆனால் அந்த மூளைக்கு கட்டளை கூட மனம் தான் இருக்கிறது.''

''அப்படியானால் மனதை மூளையின் காதலி என் கிறாயா?'' அவன் பேசியதை ரசித்தாள்.

''வாசு எனக்கொரு உதவி செய்வீர்களா?''

''சொல் காத்திருக்கிறேன்.''

''என் மனதை இந்த சிந்தனையில் இருந்து வேறு நிலைக்கு மாற்ற வேண்டும். அதற்கு ஏதாவது வேலை தாருங்களேன்.''

''நல்லாயிருக்கு! பெரிய பணக்கார வீட்டுப் பொண்ணு கைகட்டி சேவகம் புரிகிறாள் என்றால் யாரும் சிரிக்க மாட்டார்கள்.''

''பிறர் எண்ணுவதை நினைத்தால் உண்பது, உறங்கு வது கூடக் கடினமாச்சே.''

''ம்... உண்மைதான் பெங்களூர் பிராஞ்சை நேரடியா கவனிக்கச் சொல்லி அப்பாவும் ரொம்ப வற்புறுத்துறார். நீ அங்கே போய் மேனேஜ் பண்ணிக்கிறியா மது.''

''தேங்க்யூ வாசு இது நிச்சயம் என் மனதிற்கு ஆறுதல் தரும்.''

''ஆனா இதுக்கு வீட்ல எப்படி பர்மிஷன் வாங்குவே மது.''

''கஷ்டம்தான் ஆனா வேற வழியில்லை வாசு. நான் விஜய்யோட கண்ணெதிரே நடமாடிக்கிட்டு இருந்தா அவரால நிச்சயம் அக்காவோட மனசொத்து வாழ முடி யாது. குற்ற உணர்வோடு தவிப்பார். அந்த வேதனையை தினம் தினம் அனுபவிப்பதை தவிர இது தேவலை.''

''சரி அப்பாவை விட்டு நான் அங்கிள் கிட்டே இது பத்திப் பேசச் சொல்றேன்.''

பேச்சினிடையே மதுராவின் செல்போன் சிணுங்கியது.''

''ஹலோ.''

''சரிக்கா.''

''நான் போறேன்'' இணைப்பைத் துண்டித்தாள்.

''என்ன மது?''

''விஜய்யும், அக்காவும் சினிமா போறதா இருந்ததாம். அக்காவால் வரமுடியலையாம். விஜய் தியேட்டரில் வெயிட் பண்ணிட்டு இருப்பார். பிக்கப்பண்ணிக்கச் சொன்னாள்.''

''ஏன்? அவருடைய செல்லுக்கு ஆதியே போன் செய்து இருக்கலாமே?''

''தெரியலையே!'' இவள் தலையைச் சொறிந்தாள்.

''ஓ.கே. மது நீ போ நான் உனக்கு அப்புறமா கால் பண்றேன்'' வாசு விலகி நடந்தான்.

ஆதிரா சோர்ந்து போன முகமாய் வருவது கண்டு பார்வதி கவலையுடன் வினவினாள்.

''என்ன ஆதி கல்யாணமான புதுப்பொண்ணு நல்லா பொலிவாக அழகா இருப்பேன்னு பார்த்தா இப்படி ரொம்பவும் சோர்ந்து போய் தெரியுறயே? ஏன்மா?''

''வேலை கொஞ்சம் அதிகம், அம்மா எங்கே?''

''பூஜையறையில்!'' பார்வதி சொல்லி முடிக்கும் போதே, நீலா நெற்றியில் குங்குமத் தீற்றலுடன் வெளிப் பட்டாள்.



''என்ன ஆதிரா?''

''அம்மா உன் மாப்பிள்ளை எங்கே?''

''என்னடி கேள்வி இது நீயும் அவரும் தானே ஒண்ணா போனீங்க. திடீர்னு வந்து அவர் எங்கேன்னு கேட்குறே?''

''இல்லேம்மா கடைக்குப் போயிட்டு இரண்டு பேரும் ஒண்ணா சினிமாவுக்குப் போறதா பிளான். அவர் முன்னாடியே போயிட்டார். என்னால போக முடியலை. போன் பண்ணினேன். எதுவும் ரெஸ்பான்ஸ் இல்லை, மதுவுக்கு போன் பண்ணி பிக்கப் பண்ணிக்க சொன்னேனே.''

''மணி ஏழரை ஆகுது. இந்நேரம் வந்திருக்கணுமே?'' அவள் யோசித்தபடி பேசிய நேரம் மெயின் கேட்டைத் தாண்டி விஜய்யும், மதுவும் ஸ்கூட்டியில் வரும் காட்சி கண்ணில் பட்டது.

நீலாவின் முகத்தில் இனம் புரியாத பயரேகைகள். அதை கவனித்த ஆதிராவுக்கோ ஆனந்தம் தாங்கவில்லை. இதைத்தானே அவள் எதிர்பார்த்தாள். மதுராவின் மேல் சில சந்தேக விதைகளை விதைத்தாயிற்று. அதே பின்னால் மரமாக மாற தண்ணீர் தெளிக்க வேண்டும் என்ற நினைவோடு கணவனை நோக்கிக் கரிசனமாய் சென்றாள்.

''என்ன விஜய் நான் மதுவுக்கு பேசிய நேரத்திற்கு இந்நேரம் நீங்க வீட்டுக்கே வந்து இருக்கலாமே? ஏன் இத்தனை தாமதம்?''

அவள் தூண்டில் போடுகிறாள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் விஜய்யும் ''மதுவோட ஸ்கூட்டி பாதியிலேயே ரிப்பேர் சரி பண்ணிக் கொண்டு வரத்தான் இத்தனை தாமதம்.''

மதுரா ஏதும் பேசாமல் தன் அறையை நோக்கிச் செல்ல, ஈரம் காய்ந்த உடையில் இருந்த மணல்கள் சிதறி ஓடின.

நீலாவின் கண்கள் அதை கவனித்து மதுராவின் முகம் நோக்கினாள்.

ஊரில் இருந்து வந்த அன்று கலகலப்பாய் இருந்த மது இந்த சில நாட்களாக அவள் முகத்தில் பழைய உற்சாகத்தையே காணோமே என்ன காரணமா இருக்கும் என்று யோசிப்பில் கரைந்தவளுக்கு மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது.

## 12

சோம்பலான ஞாயிறு. மேகத்தின் முதுகிற்குப் பின்னால், சூரியன் மெல்ல தலை நீட்டினான். தன் கிரணப் போர் வீரர்களோடு வானத்தை சிறைபடுத்தி விட்டு வெளிச்சக்கொடியை பறக்க விட்டான்.

ஓய்வாக அமர்ந்து பத்திரிகைகளை படித்துக் கொண்டு இருந்த சந்தானபாரதியின் முன்பு, கை நிறைய கோப்புகளோடு வந்து வட்டமாய் குவிந்திருந்த நாற்காலியில் ஒன்றைப் பிய்த்து தன் உடலைத் தந்தாள் ஆதிரா.

"என்னம்மா இதெல்லாம்?"

"அப்பா சீசன் நெருங்கிட்டு வருது. இப்போ பிப்டி தௌஸன் கலர்ஸ், ரிவர்ஸிபிள் ஸாரின்னு என்னென்னவோ வருது புதுசு, புதுசா நிறைய பரபரப்பை கொண்டு வர்றாங்க. நம்ம தொழிலில் போட்டி அதிகம். தெருவுக்கு தெரு குறைஞ்சது பதினைந்து கடைகளேனும் வந்தாச்சு!"

"பட்டு ஸாரீசை பொறுத்த மட்டில் நோ ப்ராப்ளம் ஆனா ஸின்தட்டிக் போன முறை வந்த மழையில் சூரத்திலும், நிறைய மில்ஸ் நஷ்டப்பட்டு போயிருக்கு. ஸோ இப்போ இருக்கிற போட்டியை சமாளிக்க நாமளே ஏன் கோயமுத்தூர் மில்லில் சின்தட்டிக் ஸாரிஸ் ரெடி பண்ணக்கூடாது. தவிரவும் மதுவோட ரெயின்போ கலர்ஸ்ங்கிற டிசைன் பிரமாதம்."

"ரெயின்போ கலர்ஸ்?"

"யெஸ், ரெயின்போவில் மொத்தம் ஏழு கலர், ஒவ்வொரு கலருக்கும் ஏதாவது பிரபலமான உதாரணமா கோயில்கள், பறவைகள், பூக்கள், சம்திங் எக்ஸ்ட்ராடினரியா டிசைன்ஸ் இருக்கு. ரியல்லி சூப்பர்பா..."

"செய்யலாம் ஆதிம்மா. நல்ல யோசனைதான். ஆனா அதுக்கு இந்த தறி மிஷனரீஸ் மட்டும் போதாதே நல்ல கலர் டையிங் மிஷினரீஸ் வேணுமே."

"அதுக்காகத்தான் ஜப்பானிஸ் தொழில் நுட்பத்தோட இரண்டு மிஷினரீஸ் வாங்க ஏற்பாடு செய்யலாமின்னு இருக்கேன்."

"ஈஸிட்?"

"எஸ்... கொல்கத்தாவில் இப்போ வீடிங் கம்பெனியில் தான் இந்த கலர் டையிங் மிஷின்ஸ் இருக்கு. அதோட கொட்டேஷன் தான் இந்த பைலில் இருக்கு."

"இதில் அந்த கம்பெனியோட முழு விவரமும் எத்தனை வருடமா அது ரன்னிங்கில் இருக்குங்கிற விவரமும்."

"வெரிகுட் ஆதி! யூ ஹாவ் ஏ குட் ஜாப்! சரி இதில் நான் என்ன செய்யணும்?"

"கொல்கத்தாவில் அந்தக் கம்பெனிக்குப் போய் அந்த மிஸினரீஸின் தரம் உழைப்பு பற்றி செக் பண்ணணும்.

அதன் பிறகு தான் ஆர்டர் தரணும். இதற்கு நம்ம இரண்டு பேரில் யாராவது ஒருத்தர் ஊருக்குப் போகணும்."

"நீ கடை வேலையைப் பாரு ஆதிம்மா, நான் போயிட்டு வரேன்."

"நல்லாயிருக்கு நீங்க பேசறது." என்றபடியே அதுவரை பேசாது இருந்த நீலா ஆட்சேபித்தாள். "கல்யாணமான சின்னஞ்சிறுசுங்க அவங்களுக்குத் தனிமைதான் முக்கியம். ஒரு பத்து நாளுக்கு எங்காவது வெளியூர் அனுப்பி வைப்பீங்களா? அதை விட்டுட்டு பிஸினஸ் பத்தி பேசிகிட்டு இருக்கீங்களே?"

"அய்யோ அம்மா எல்லா பொண்ணுங்க மாதிரியும் கட்டிலில் படுத்து கனவு காண்கிற ரகமில்லை. உன் பொண்ணு. எனக்கு லைப்பில் பெரிசா சாதிக்கணும்ங்கிற வெறி இருக்கு."

"அதுக்கு?"

"ஏம்மா எம் புருஷனை என்ன யாராவது கொத்திகிட்டா போகப் போறாங்க?" அவள் சிரித்துக் கொண்டே கேட்கவும், அதுதானே என் பயமும் என்று மனதிலே கூறிக் கொண்டாள் நீலா.

"சரி கொல்கத்தாவிற்காவது நீயும் மாப்பிள்ளையும் சேர்ந்து போங்க," ஒரு கணம் யோசித்த ஆதிரா வேகமாய் தலையசைத்து மறுத்தாள். "அம்மா இந்த ஸீசன் முடியட்டும் அதுக்குப் பிறகு, நான் கடைப்பக்கம் போகலை உன் சொல்படி நடப்பேன் சரியா!" என்றாள்.

"ஆதிம்மா அம்மா சொல்வதும் நியாயம் தான் இருந்த வேலையையும், விட்டுட்டு மாப்பிள்ளை ரொம்பவும் கில்ட்டியா பீல் பண்ணுவாரே. இப்போ இந்த ட்ரிப் போயிட்டு வந்திடுங்க, பிறகு இந்த கடையோட மேனேஜ்மெண்ட் எல்லாம் ஒப்படைச்சிடலாம் இல்லையா."

ஆதிராவிற்கு சலிப்பு வந்தது. வாழ்வின் லட்சியமே மதுராவையும், பார்வதியையும் வீட்டை விட்டு வெளியேற்றி, அவர்கள் மனம் முழுக்க ரணப்படுத்துவது தானே நான் வெளியூர் போய்விட்டால், இதையெப்படி சமாளிப்பது?

"அப்பா நான் ஒரு நல்ல ஐடியா சொல்லவா நீங்களும், அவரும் ஏன் இந்த ட்ரிப்பை அட்டெண்ட் பண்ணக் கூடாது? இதனால அவரும் இந்த விஷயம் பத்தியெல்லாம் தெரிஞ்சு கொள்வாரே."

"அது சரிம்மா ஆனா கல்யாணம் ஆன புதுமணத் தம்பதிகள் நீங்க வெளியே போறதை விட்டுட்டு நாங்க இரண்டு பேருமா?"

"அப்பா எனக்கு தொழில்தான் முக்கியம். நம்ம வியாபாரம் ஒண்ணும் பலசரக்கு இல்லை. இரண்டு பொட்டலம் கட்டி போட்டு பணம் பார்க்க. ரகவாரியா குவிக்கணும். அலுக்காமல் எடுத்துப் போடணும். பத்து புடவை விக்கிறதுக்குள்ளே பத்து லட்சம் வார்த்தைகள் பேசணும். சம்பாரிக்கிறதே இந்த ஸீசனில்தான். அதைப்போய் விடச் சொல்றீங்களே?"

"என்னங்க இவ இப்படிப் பேசுறா?" என்று தொய்வாய் அமர்ந்த நீலாவைக் கண்டு, "அவள் முடிவு செய்தால் மாற்ற மாட்டா என்பது தெரிந்தது தானே. ஆனால் ஒண்ணு நீலா, பிடிவாதத்தில் அவள் முழுக்க முழுக்க உன்னைத்தான் கொண்டு இருக்கிறாள்."

"உண்மைதான் மதுரா உங்களைப் போல் உங்கள் குணம் உரித்திருக்கிறாள்" என்று கூறிவிட்டு மகளையும்

அழைத்தபடி வேகமாய் சென்றுவிட, சந்தானபாரதி பிரமை பிடித்தாற்போல் நின்று விட்டார். இதுநாள் வரையில் கணவர் என்ற உரிமையை தனக்கு மனதளவில் மட்டுமே கொடுத்து வந்தாலும், மதுவை அவள் ஒரு போதும் பிரித்துப் பேசியது இல்லை இது எதைக் குறிக்கிறது?

விளையாட்டாக இதைப் பேசினாளா இல்லை. ஏதேனும் உள் அர்த்தம் இதற்கு இருக்குமா, புரிந்து கொள்ள இயலாமல் குழம்பினார் அவர்.

சொன்னாற் போலவே சந்தானபாரதியும், விஜய்யும் கொல்கத்தாவிற்கு அடுத்த வந்த நாட்களில் சென்றனர். புது மனைவியைப் பிரிந்து செல்லும் ஏக்கம் விஜய்க்கும் இல்லை. கணவனைப் பிரிகிறோமே என்ற எண்ணம் ஆதிராவுக்கும் இல்லை. மாறாக அவனை விரட்டுவது போல் தான் அவள் நடந்து கொண்டாள்.

வாழ்விற்கு என்றுமே இரண்டு பக்கம் உண்டு. உண்மை, பொய், ஆம், இல்லை. இன்பம், துன்பம் இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம்; ஆனால் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல் ஆயிரம் பொன் மொழிகள், அடுக்கினாலும் அதை உணர்ந்து நடப்பவர் யார்?

மதுராவினால் முடிந்து போன அத்தியாயம் என்று தள்ளி வைக்கப்பட்ட விஜய்யை இணைத்து முற்றுப் புள்ளிக்குப் பதிலாக கமா இட்டுப் பிரச்சினையைத் தொடங்கி வைக்கத்தானே இந்த வெளியூர் நாடகம்.

முதலில் தந்தையை மட்டும்தான் அனுப்புவது என்று முடிவு செய்து இருந்தாள் ஆதிரா, ஆனால் முதல்நாள் விஜய் அவளிடம் கூறியவை.



"ஆதிரா நீ நடந்துக்கிறது எதுவுமே எனக்குப் புரியலை நீ தானே மதுராவை என்னை அழைத்து வரச் சொன்னாய் பிறகு ஏன்?"

"ஏன் கேள்வி கேட்டேன் என்கிறீர்களா? என்னுடைய முதல் எண்ணமே மதுராவை இங்கிருந்து அனுப்புவது தானே?"

"அது நான் இருக்கும் வரை நடக்காது புரிந்து கொள் ஆதிரா! மது உன்னை மிகவும் மதிக்கிறாள். நீ அவளுக்குக் கெடுதல் செய்வதை அறிந்தால் அவள் மனம் மிகவும் கவலை கொள்வாள். நீ நன்றாக இருக்க வேண்டும் என்று தானே அவள் தன் காதலையே தியாகம் செய்தாள், அவளின் நல்ல உள்ளத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்."

"உங்க அட்வைஸுக்கு ரொம்ப நன்றி" அவள் விலகி நடந்தாள். விஜய் இங்கு இருந்தால் நிச்சயம் நான் நினைத்ததை நடக்க விடமாட்டான். என்ன செய்வது என எண்ணியவள் தந்தையுடன் விஜய்யையும் ஊருக்கு அனுப்புவது தான் சிறந்தது என முடிவெடுத்த படியே அதை செயல்படுத்தவும் ஆரம்பித்து விட்டாள் ஆதிரா.

## 13

ஆயிரம் வாசல் இதயம் அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம் யாரோ வருவார் யாரோ போவார் வருவதும், போவதும் தெரியாது...?

காற்றில் மிதந்து வந்த கானத்தின் வரிகள் நீலாவிற்கு சில அர்த்தங்களை உணர்த்தின.

''அம்மா'' வேலைக்காரனின் அழைப்பு.

''என்ன முத்து?''

''அம்மா சின்னய்யாவோட பிரண்டுன்னு யாரோ ஒருத்தர் வந்திருக்கார் உள்ளே அனுப்பட்டுமா?''

''வரச்சொல்லு...''

நீலமும், மஞ்சளும் கலந்த கோடு போட்ட சட்டையணிந்து இருந்தான். அவன் தன்னை மதன் என்றும் விஜய்யின் நண்பன் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டு சோபாவில் அமர்ந்தான்.

கையில் ஒரு பிரவுன் நிற கவர் இருந்தது.

பார்வதி எடுத்து வந்த காபியை உறிஞ்சியபடியே, ''கல்யாணத்தின் போது நான் ஊரில் இல்லை. அதனால வரமுடியாமல் போய் விட்டது. அதான் இப்ப பார்த்து விஷ் பண்ணிட்டு இந்த கிப்ட்டைக் கொடுத்திட்டுப் போகலாம் என்று வந்தேன். எங்கேம்மா விஜய்யும், மதுராவும்?''

அதுவரை புன்னகையுடன் அமர்ந்திருந்த நீலா தீயை மிதித்தவள் போல் திகைத்து, ''நீ என்னப்பா சொல்றே?'' என்றாள் பார்வதியின் முகமோ பேய் அறைந்தது போல் இருந்தது.

''ஆமாம் அவர்கள் தானே மூன்று வருடங்களாக உயிருக்கு உயிராக காதலித்து வந்தார்கள். இவ்வளவு ஏன் நேற்று கூட இருவரையும் பீச்சில் பார்த்தேனே. எங்கே அவர்கள் இல்லையா?''

''வெளியே போயிருக்காங்க.''



''சரிம்மா நான் இன்னொரு நாள் வந்து பார்க்கிறேன். அவர்கள் சேர்ந்து எடுத்த படங்கள் இது தான். என் மேரேஜ் கிப்ட்டை தந்து விடுங்கள்'' என்று அந்த பழுப்பு நிறக் கவரை தந்தவன் அத்துடன் தன் வேலை முடிந்ததென கிளம்பினான்.

அப்போதே உள்ளே மதுராவும், ஆதிராவும் ஒன்றன் பின் ஒன்றாக நுழைந்தார்கள். அவனைக் கண்டதும் ''மதன்'' என்று அவளையும் அறியாமலே மதுவின் இதழ்கள் முனகின.

''ஹாய் மது? கல்யாணத்திற்கு வரலைன்னாலும் கரெக்டா வந்திட்டேன் பார்த்தியா விஜய் எங்கே அவனுக்கும், என்னோட வாழ்த்துக்களைச் சொல்லிவிடு'' வருகிறேன் என்று விரைந்தான் அவன். மதுரா சிலையாய் நின்று விட்டாள்.

ஒருபுறம் தன்னைப் பெற்றவள், மற்றொருபுறம் பெற்றவளை விட அன்பு காட்டி வளர்த்தவள்.

எந்த உண்மை யார் அறிந்தால் அவளுடைய வாழ்வு பாதிக்கப்படும் என்று எண்ணி அஞ்சினாளோ அத்தனை பேரின் மத்தியில் தான் ஒரு குற்றவாளியாய் பிடிபடுவோம் என்று மதுரா சற்றும் எதிர்பார்க்கவில்லை. மற்றவரின் துளைக்கும் பார்வையைத் தாங்க இயலாமல் தரையைப் பார்த்தபடி தலை குனிந்த வண்ணம் நின்றாள்.

கையிலிருந்த கவரைப் பிரித்து புகைப்படங்களைப் பார்த்த நீலா கண்களில் தீச்சுவாலையோடு.

''மதுரா என்ன பேசாம நிக்கிறே? இப்ப வந்திட்டு போனவரை உனக்குத் தெரியுமா?''

''தெ... தெரியும்?''

"எப்படி?" மதுவின் உடல் வெட வெடவென நடுங்கியது. "சொல்லு" அதட்டலாய் வெளிவந்தது நீலாவின் குரல். அதட்டல் கேட்டு பார்வதி திகைத்துப் போய் நின்றாள். இங்கு இருக்கும் இத்தனை நாட்கள் இதுவரை நீலா அப்படி குரல் உயர்த்திப் பேசியதே இல்லை.

"அது வந்து..."

"சுத்தி வளைத்துப் பேச வேண்டாம் மதுரா உண்மையைச் சொல்லு."

"என்னம்மா இது யாரோ ஒரு ஆள் சொல்லிட்டு போனதற்காக மதுவை இத்தனை கேள்வி கேட்கணுமா?"

"உலகம் தெரியாத பொண்ணா இருக்காதே ஆதிரா! யாரோ ஒரு ஆள் சொன்னதை* மட்டும் நம்பி நான் பேசலை. இந்த போட்டோவைப் பார். புரியும்."

"அது மட்டுமில்லை, முதலிரவு அன்று மதுராவும், விஜய்யும் மொட்டை மாடியில் நின்று தனியா பேசிகிட்டு இருந்ததை நான் பார்த்தேன். வண்டி ரிப்பேர்னு சொல்லி நீங்க எங்கே போனீங்கறதுக்கும் இதோ ஆதாரம் இருக்கு."

"என்னக்கா என்னென்னவோ சொல்றீங்களே?"

"ஆமாம் பார்வதி உன் பொண்ணு பண்ணின காரியம் உனக்குத் தெரிய வேண்டாம். ஆதிக்கும், விஜய்க்கும் கல்யாணம் ஆகிறதுக்கு முன்னாடியே உம் பொண்ணு விஜய்யை விரும்பி இருக்கா. ஆனா இதை வெளியில் சொல்லாம மறைச்சு கல்யாணமும் முடிஞ்சிடுச்சி. சரி அத்தோடு விட வேண்டியதுதானே. பிறகு ஏன் என் மகளின் வாழ்வில் குறுக்கே வரணும்."

"இல்லேக்கா இதுல ஏதோ தப்பு நடந்திருக்கு மதுரா அப்படிப்பட்டவ இல்லேக்கா."



"போதும் பார்வதி உம் பொண்ணுக்கு சப்பைக் கட்டு கட்டினது! இப்ப சொல்லச் சொன்னா ஏன் வாய் மூடி நிக்கிறா? பேச வேண்டியதுதானே."

"என்ன மதும்மா இது... இப்படி ஒரு அவப்பெயர் உனக்குத் தேவையா? இதை பொய்யுன்னு சொல்லு மதும்மா, தாயின் கதறலைக் கேட்டு தலை குனிந்து இருந்த மதுரா அழுகையை அடக்க வெகு சிரமப்பட்டு அழுந்த உதடுகளைக் கடித்தாள்.

"எப்படி பேசுவா? அதான் அவளுடைய குட்டு எல்லாம் வெளிப்பட்டு விட்டதே இந்த புகைப்படங்களைப் பாருங்க" டீபாயின்மேல் அவற்றை வீசினாள். அதில் மதுவும், விஜய்யும் கைகோர்த்தபடி, சிரித்தபடி, ஒன்றாய் உணவருந்தியபடி, என விதவிதமான படங்கள்.

பார்வதி முற்றிலும் உடைந்து போனாள். மகளின் மேல் எந்த தவறும் இல்லாமல் இருக்கும் என எண்ணினாள். ஆனால் இந்த புகைப்படம் உண்மை என்று தானே எடுத்து உரைக்கிறது.

"அடிப்பாவி மகளே என் வயித்துல நெருப்பை அள்ளிக் கொட்டிட்டியேடி உனக்கு எங்கேயிருந்து இப்படியொரு புத்தி வந்தது" மகளைப் பிடித்து உலுக்கினாள் பார்வதி.

"வேறு எங்கேயிருந்து எல்லாம் உங்ககிட்டே இருந்து தான் நீங்களும் அப்படி வந்தவங்கதானே, தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலைங்கிறது சரியாத்தான் இருக்கு." ஆதிராவின் இந்த நேரடித் தாக்குதல் பார்வதியை மட்டுமல்ல நீலாவையுமே சற்று அசைத்து தான் விட்டிருந்தது.

"ஆதி நீ என்ன பேசுறே?"

"உண்மையைப் பேசுறேன் அன்று உங்களால என் அம்மாவினுடைய வாழ்க்கை பாழாச்சு. இன்று உங்க பொண்ணு என் வாழ்வுக்கு உலை வைக்க வந்திட்டா. இந்த விஷயத்திலே அம்மாக்கும் பொண்ணுக்கும் நல்ல ஒத்துமையிருக்கு."

"ஆதிரா! உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன். வார்த்தைகளால் என்னைக் கொல்லாதே மனசறிஞ்சு நான் உங்களுக்கு எந்த துரோகமும் செய்யலை."

"உங்க பசப்பு வார்த்தைகளை எண்ணி ஏமாற நான் தயாரா இல்லை."

"அக்கா..."

"நீ பேசாதே விட்டுக் கொடுக்கிற மாதிரி நாடகமாடி விட்டு இப்போ ச்சீ, தாலி கட்டிக்க மட்டும் தான் நாங்களா? புருஷனோட அன்பை அனுபவிக்க முடியாம எத்தனை நாள் வேதனைப்பட்டு போயிருப்பாங்க. ஏன் இங்கு வேறு ஆண் மகனே உனக்கு கிடைக்கவில்லையா மதுரா."

"அக்கா..."

"நிறுத்து. மனமொத்து வந்த கணவன் இன்று வரை பெயரளவில் மட்டும் தான் நடந்து கொள்கிறாரே ஏன் என்று எண்ணித் தவித்தேன். இப்போது தானே தெரிகிறது. அவரை என்னிடம் வரவிடாமல் தடுத்தது எது என்று." மகளின் பேச்சைக் கேட்டதும் சுனாமியைப் போல் கொதித்த நீலா மகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு பார்வதியின் முன் நின்றார்.

"இப்ப உனக்கு நிம்மதியா? நீ நினைச்சதை நடத்திட்டேயில்லே?



"கட்டின புருஷன் செய்த துரோகத்தை கூட மகளுக்காக மறந்து, வேதனையை விழுங்கிவிட்டு, இன்று வரை மனதளவில் மட்டுமே அவருக்கு மனைவியா வாழ்ந்தேன். ஆனா எந்த பொண்ணுக்காக உன்னை ஏற்றுக் கொண்டேனோ அவளுடைய வாழ்விற்கே எமனாய் வந்து இருக்கிறாளே உம் பொண்ணு."

பார்வதி பேசவும் மறந்தாள்.

"நீலாம்மா இது எதுவுமே தெரிஞ்சு நடந்தது இல்லை."

"ஏற்கனவே ஒரு நம்பிக்கைத் துரோகியை வீட்லே வைச்சுட்டு நான் பட்ட வேதனை போதும். என் மக வாழ்வையும் கேள்விக் குறியாக்க நான் தயாரா இல்லை. இனிமே என்ன ஆனாலும் சரி. நீங்க ரெண்டு பேருமே இந்த வீட்டில் இருக்கக் கூடாது."

"அக்கா..."

"ஆதி இவகிட்டே பேசவே எனக்குப் பிடிக்கலை. நீ போகச் சொல்லிடு" நீலா உள்ளே புகுந்து கொள்ள.

இந்தச் சந்தர்ப்பத்திற்காகத்தான் ஆதிரா காத்துக் கொண்டு இருந்தாள். "இப்ப நீங்களா வெளியே போறீங்களா? இல்லை வெளியே தள்ளட்டுமா" எகத்தாளமாய் வெளி வந்தது அவள் குரல்.

"கூடிய விரைவில் நீ உண்மையைப் புரிஞ்சுக்குவே அக்கா." தாயைக் கைத்தாங்கலாக பற்றியபடி, சில அவசியமான உடைமைகளை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியேற "தாயும் மகளும் வேறு யாரையாவது பிடிக்க முயற்சி பண்ணுங்க ஆல் த பெஸ்ட்!" என்ற ஆதிராவின் குரல் கத்தியாய் பாய்ந்தது.

# 14

வாசுவின் வீடு! ஆளுக்கு ஒரு மூலையில் அமர்ந்து இருந்தனர் மதுராவும், பார்வதியும். அவர்கள் முகத்தில் கொஞ்சம் கூட உணர்வேயில்லை. அன்றைய தினம், திக்கில்லாத இடத்தில் விட்டாற்போல், கவலையுடன் நின்றிருந்த இருவரையும் கண்டு தன் வீட்டினுள் அழைத்து வந்தான் வாசு.

இறுக்கம் உணர்ந்து நடந்த எதையும் அவன் கேட்க வில்லை.

*

அவர்களாகவே கூறட்டும் என்று அமைதி காத்தான். ஆனால் இரண்டு நாட்களுக்கு மேலாகியும், அவர்கள் நிலையில் எந்த மாற்றமும் இல்லாமல் போகவே, மெல்ல மதுராவிடம் பேச்சுக் கொடுத்து விஷயத்தைப் புரிந்து கொண்டான்.

அறையில் பார்வதியும், மதுவும் கவலையோடு அமர்ந் திருப்பதைக் கண்டு, "என்ன மது இது? ஆன்ட்டி தான் அடுத்து என்னன்னு கவலையோட இருக்காங்க, நீயில்லே, அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும். அதை விட்டுட்டு நீயும் இப்படியொரு மூலையில் விழுந்து கிடந்தா என்ன அர்த்தம்?"

"முடியலை வாசு! ஆதி நல்லா இருக்கணும்கிறதுக்காக என் காதலையே துறந்தேன். என்னை மறக்க முடியாம தவித்த விஜய்க்காக இந்த ஊரைவிட்டே போறதா முடிவு பண்ணினேன்! எந்த உறவுகளுக்காக நான் என் சுகத் தையெல்லாம் இழந்தேனோ அந்த உறவுகளே என்னைப் புரிந்து கொள்ளவில்லை."



"நடந்து முடிந்ததைப் பற்றிப் பேசி எந்தப் பயனும் இல்லை. மனசு தான் ரணமாகும்."

"ஆயிரம் தான் அன்பு பாராட்டினாலும் அவர்கள் அன்னியம் தான். ஆனால் அம்மா கூட இதை உண்மை யென்று எண்ணிக் கொண்டு என்னை இரண்டு நாட்களாக வதைக்கிறார்களே என எண்ணும் போதுதான்..."

"மது கண்ட்ரோல் யுவர் செல்ப்" அவர்களின் சம் பாஷணைகளை அதே அறையில் இருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்த பார்வதி முகத்தில் எந்தவிதமான சலனமும் காட்டாமல் இருந்தார்.

"என்ன ஆன்ட்டி! மது இவ்வளவு தூரம் சொல்றாளே இன்னுமா நீங்க அவளை நம்பலை. அவள் கூறிய அத் தனைக்கும் நானும் சாட்சி."

"தம்பி ஊமையின் கனவைப் போல் உண்மையும் வெளிவர இயலாமல் தவிக்கிறது. ஆனால் இதே நிலைமை நீடிக்காது. மதுராவை எனக்குத் தெரியும். என் கவலை அவளை நம்பாமல் இல்லை. இப்படியொரு அவப்பெயர் அவளுக்கு வந்துவிட்டதே நடந்த விஷயத்தை என் னிடம் சொல்லி இருந்தால் அப்பவே நாம் இருவரும் தனியே வந்து இருக்கலாமே."

"அம்மா அப்போ உனக்கு என்மேல் கோபம் இல்லை யாம்மா? நிஜமாக என்னை நம்புகிறாயா?" ஓடிவந்து தாயின் மடியில் முகம் புதைத்து கண்ணீரோடு கேட்டாள்.

"மது நீ விஜய்யை காதலிச்சு இருக்கலாம். ஆனா கல்யாணமான ஒரு ஆண் மகனை விரும்புகிற அளவுக்கு மோசமான பெண் இல்லை நீ. நான் அப்படி உன்னை வளர்க்கலை."

''அம்மா நீ நேற்றிலிருந்து என்னிடம் பேசாம இருந்ததைப் பார்த்ததும் பயந்திட்டேன் அம்மா.''

''விடு! மது பழையதைப் பற்றிப் பேச வேண்டாம். இனி உனக்கு நானிருக்கேன்'' தாயின் மென் கரத்தில் புதைந்து கிடந்தாள். இனி எந்த புயலும் தன்னைத் தாக்காது என்ற அமைதி, அவள் முகத்தில் அப்பட்டமாய் தெரிந்தது.

''ஆன்ட்டி நான் வேண்டுமானால் அங்கிளிடம் போன் பண்ணிப் பேசட்டுமா?''

''வேண்டாம் தம்பி இப்போ நான் சாதாரணமாய் பேசினால் கூட அது பிரச்சனையாகிவிடும். தவிரவும் அவரின் நிம்மதியும் கெடும். என் சிக்கல் என்னோட போகட்டும். மதுவிற்கு ஒரு நல்ல வாழ்வை அமைத்துக் கொடுத்து விட்டால் அந்த பாரமும் நீங்கிவிடும்.'' மகளின் முதுகை வாஞ்சையோடு நீவி விட, மேலும் தாயிடம் ஒண்டினாள் மதுரா.

அதை ஏக்கத்தோடு உணர்ந்தான் வாசு. அவனும் அனுபவித்திராத தாய்மை உணர்வல்லவா அங்கு அரங் கேறிக் கொண்டு இருந்தது. என்ன நினைத்தானோ தானே வலியச் சென்று பார்வதியின் மடியில் புதைந்தான்.

சற்றே ஓரளவிற்கு சகஜநிலைக்கு தாயும், மகளும் திரும்பி விட்டிருந்தனர். மது புத்தக அறையில் புத்தகங் களை அடுக்கிக் கொண்டு இருந்தாள். பார்வதி பூஜை யறையில் இருக்க வாசு நேராய் அங்கு போய் நின்றான். ஊதுபத்தி புகையுடன் சாம்பிராணி புத்தம் புது மலர்களின் நறுமணமும் அந்த வீட்டையே தெய்வகரமாய் மாற்றி வைத்து இருந்தன.

வாசலில் நிழலாடுவது கண்ட பார்வதி அங்கே வாசு வும், அவன் தந்தையும், சந்தானபாரதியின் குடும்ப



நண்பரான கனகராஜும் இருப்பதை கண்டு எழுந்து வந்தாள். கற்பூர ஆரத்தியை கண்களில் ஒற்றியபடியே ஒரு விநாடி மவுனமாய் நின்றார். தாம்பூலத் தட்டை பூஜையறையில் வைத்து விட்டு வெளியே வந்த பார்வதி யிடம் ''நடந்ததெல்லாம் கேள்விப்பட்டேன்ம்மா'' அவர் குரலில் வருத்தம் தெரிந்தது.

''ஏம்மா சந்தானத்திற்கு ஏதும் தெரிவிக்கலை. நான் பேசவா?''

''வேண்டாம் அண்ணா! என் பொருட்டு அவரிடம் யாரும் பேச வேண்டாம். இப்போது என் பக்க நியாயத்தை யாராலும் உணர முடியாது. அதைச் சொல்வதானால் தேவையற்ற குழப்பங்கள் தான் உண்டாகும். தயவு செய்து நானறியாமல் நீங்கள் எதுவும்...''

''பிறத்தியாரின் மனம் நோகக் கூடாது என்பதில் நீ தீவிரமானவள் என்று பாரதி என்னிடம் அடிக்கடி கூறு வான். அது உண்மையென்று இன்று நான் உணர்கிறேன். சரி மதுரா எங்கேம்மா?''

''மேலே அறையில் இருக்கிறாள்.''

''பார்வதி எனக்கு எதையுமே சுத்தி வளைச்சு பேசிப் பழக்கமில்லை. மதுவிற்கும், வாசுவிற்கும் திருமணம் செய்ய வேண்டும் என்ற நினைப்பில் இருந்தோம். நடுவில் இந்த சிக்கல் எழாமல் இருந்திருந்தால்... அத னால் தான் இருவரையும் ஒரே வீட்டில் தங்கச் செய்தோம். இதனால் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவு மென்று தான் இந்த ஏற்பாடு...'' பார்வதியின் முகத்தை ஒரு முறைப் பார்த்துவிட்டு, ''இப்போதும் எனக்குள் அந்த எண்ணம் இருந்தது. இருக்கிறது'' என்றார்.

''அண்ணா... என்நிலை உங்களுக்கு நன்றாகத் தெரியும். கணவரைப் பிரிந்து பழிசுமந்து இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேன். என் மகளுக்கு சீதனமாய்த் தர என் உயிரைத் தவிர வேறு எதுவும் இல்லை. தவிரவும், மதுரா ஏற்கனவே விஜய்யை நேசித்து இருக்கிறாள்.''

''ஆன்ட்டி அந்த வட்டத்தில் இருந்து உங்க மதுரா எப்பவோ வெளியே வந்திட்டா அது எனக்கு சர்வ நிச்சயமாய் தெரியும்.''

''என்ன தம்பி சொல்றே?''

''ஆன்ட்டி நான் மதுவை உயிருக்குயிராய் நேசித்தது உண்மை. ஆனா...'' நடந்த அதீதனையும் கூறினான். மதுவுடன் கடற்கரையில் பேசியது வரை... பார்வதியின் முகத்தில் சொல்லவொண்ணா மலர்ச்சி பிறந்தது.

''தம்பி...''

''ஆன்ட்டி மதுவை இப்போதும் நான் விரும்புகிறேன். அவளுடைய ரணத்திற்கு நான் மருந்தாய் இருப்பேன். தவிரவும், உங்க தாய்மையும், அன்பும் அதே உருவாய் உள்ள மதுவும் எனக்கு வேண்டும்.''

''ஆனால் மதுராவின் மனம் இன்னொரு வாழ்வை ஏற்குமா?'' தாயின் கேள்வியை கேட்டவாறே படியிறங்கி வந்தாள் மதுரா.

''தோளுக்கு மேல் வளர்ந்தவன் தோழன் என்பார்கள். சிறு வயதிலேயே தாயை இழந்தவன் வாசு. அவனுக்கு தொழிலைத் தவிர வேறெதுவும் தெரியாது. அப்படிப் பட்டவன் மதுராவை தான் நேசிப்பதாக முதலில் என்னிடம் தான் கூறினான்.



''இடையில் என்னென்னவோ நடந்துவிட்டது. சரி அதெல்லாம் போகட்டும். மதுவைக் கூப்பிடு நானே அவளிடம் பேசுகிறேன்.''

''வேண்டாம் மாமா'' கணபதியின் வார்த்தையை கேட்ட மதுரா மிரண்டாள். ''வாசு ரொம்ப நல்லவர் என்னை விட அவருக்கு இன்னும் நல்ல பெண் கிடைப்பாள்.''

''நீ எந்த விதத்தில் மதும்மா குறைந்து போய்விட்டாய்? மனித மனம் விசித்திரமானது. எளிதாய் கிடைப்பதை விட கிடைக்காததின் மேல் தான் மனம் ஓடும்.''

''உண்மை தான்! வாசுவின் அன்பு பரிசுத்தமானது அவருடைய அன்பினை ஏற்க எனக்குத் தகுதியில்லை.''

''யார் துன்பப்பட்டாலும் அது தன்னால் நடந்தது என்று நல்லவர்களின் மனம் ஏங்கும். அந்த வகையில் உன்னை விட பரிசுத்தமானவள் யாரம்மா. பிறர் வாழ்விற்கென உன் அன்பையே விட்டுத் தந்தவள் நீ. அது விலை மதிப் பில்லாதது அல்லவா. உன் மனதின் வெற்றிடம் நிரப்பப் பட வேண்டும் என்று உன் தாயின் மனம் விரும்பாதா?''

அந்தத் தாயின் வேதனையை நீ உணர வேண்டும் மது. கடைசி வரையில் இப்படி தனிமையில் காலம் தள்ளப் போகிறாயா?''

''அதெல்லாம் சரி அங்கிள். விஜய்யை விரும்பிட்டு வாசுவைத் திருமணம் செய்துகிட்டா ஆதிரா சொன்னது உண்மைன்னு ஆயிடாதா?''

''பிறர் நினைப்பதை எண்ணினால் நாம் வாழ்வே முடியாது என்று எண்ணிய மதுவா இப்படிப் பேசுறது? மது விஜய்யுடன் உன் காதல் உண்மையானது தான். அது எத்தனை உறுதியோ, அதேபோல் உன் மனதில் அந்த

எண்ணத்தை அடியோடு மறந்திட்டேன்னு சொல்றதும் உண்மை. உன்னை நான் மனப்பூர்வமா நம்புறேன். நீ இருந்தால் என் வாழ்வு பிரகாசிக்கும் என்று எண்ணு கிறேன்'' ஏக்கம் வழியும் பார்வையோடு பேசினான் வாசு.

''நீயே யோசித்து ஒரு நல்ல முடிவை எடு'' இருவரும் நகர்ந்தனர். தாயும் மகளும் தனிமையில் விடப்பட்டனர்.

## 15

முகப்பு விளக்கு சோகமாய் ஒளிர்ந்து கொண்டு இருக்க, தீவிரமான யோசனையில் மூழ்கி இருந்தாள். ஆதிரா பல நாள் ஏக்கம் தீர்ந்து விட்டது. நினைத்ததை நடத்திய பின்னும் ஏனோ மனதில் சொல்லவொண்ணா ஒரு வெறுமை பரவியது.

எத்தனை நாள் வெறி என் தாயின் கண்ணீருக்கும். கேள்விக்குறியான அவரின் வாழ்விற்கும் விடை கிடைத்து விட்டது. ஆனால் ஊரிலிருந்து திரும்பி வந்த பிறகு தந்தையும் கணவனும் கேட்டால், அதையெப்படி எதிர் கொள்வது என்று யோசனையில் இருந்தவளைத்தான்.

''குட் ஈவ்னிங் மேடம்'' என்ற குரல் கலைத்தது. எதிரே மதன் நின்றிருந்தான். ஆதிரா பதற்றமானாள். ''நீ ஏன் வீட்டுக்கு வந்தே?''

''ஆபீஸிலும் உங்களைப் பார்க்க முடிவதில்லை. நான் செய்த வேலையால் உங்கள் குடும்பத்தில் நடந்த மாற் றங்களையும் நான் அறிவேன் அதற்கு எனக்குப் பரிசு.''



''மதன்... மதன் நீ. ஒரு விஷயத்தை மறந்திட்டுப் பேசுறே மதுரா விஜய் பற்றிய உண்மையைத் தானே? சொன்னே அது ஒண்ணும் பொய் இல்லையே. தவிரவும் உனக்கு ஆயிரமோ, ஐநூறோ தூக்கி வீச என்னால் முடி யும். அதை விட்டுட்டு என் கம்பெனியில் நல்ல போஸ்டிங் எல்லாம் தர முடியாது.''

''மேடம் இது அநியாயம்.''

''எது அநியாயம்? உன் நண்பனின் வாழ்வை நீதான் மதன் கெடுத்து இருக்கிறாய். உன்னை கூடவே வைத் திருந்து நான் பலியாக விரும்பவில்லை.''

''உங்க செயலை விஜய்யிடம் சொன்னால்.''

''தாராளமா! ஒரு கணவனோட காதல் தெரிஞ்சா மனைவியானவள் எந்தளவிற்கு ஆதங்கப்படுவாளோ, அதைத் தான் நான் செய்தேன். இதனால் உங்களுக்குத் தான் மேலும் சங்கடம்'' மதன் விக்கித்துப் போனான்.

''இப்ப நீ செஞ்ச வேலைக்குக் கூலியாக இந்த இருபதா யிரத்தை எடுத்துகிட்டு பேசாம போயிடுங்க'' என்று இரண்டு நூறு ரூபாய் கட்டுகளை டேபிளின் மேல் வீசினாள் ஆதிரா. வேறு வழியின்றி கிடைத்தவரை மேல் என்பதுபோல் பணத்தை பொறுக்கிக் கொண்டு சென்றான் மதன். இதையெல்லாம் கோவிலுக்குச் சென்று வரும் போது கவனித்துவிட்ட நீலாவிற்குத் தலை சுற்றியது.

## 16

'கொல்கத்தா...'

அந்த பைவ் ஸ்டார் ஓட்டலின் ஏஸி அறையில் இருந்த மருமகனிடம், "என்ன விஜய் ஆதிம்மாக்கு போன் பண்ணி னீங்களா என்றார்" சந்தானபாரதி.

"பேசினேன் மாமா."

"ம்... இன்னும் எத்தனை நாளைக்கு புதுமணத் தம்பதிகளை பிரிக்கணுமோ வீட்டிற்குப் போனதும் நீலா என்னை உண்டு இல்லையென்று ஆக்கி விடுவாள் பாருங் களேன்."

அவன் பொதுவாய் சிரித்தபடியே, "அத்தைன்னா உங்களுக்கு அவ்வளவு பயமா மாமா?" என்றான்.

"பயமில்லை மரியாதை பெண்களுக்கு*மரியாதை தருவது என் பாலிசி இது பார்வதிக்கும் தான்."

மாமாவும், மருமகனும் வந்த சில நாட்களிலேயே நல்ல நண்பர்கள் போல் ஆயினர்.

சந்தானபாரதியின் எளிமையான குணமும், கனிவான பேச்சும், அவர்களுக்கு இடையில் நூல் இழை போல ஓடிக் கொண்டு இருந்த மவுன சங்கிலி கூட செயலற்று அறுந்து போய் விட்டது. இருவரும் பலதையும் விமர்சித் தார்கள். கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அந்த உரிமையில் விஜய் மெல்ல பேச்சை துவங்கினான்.

"இந்த மிஷினரிஸ் பத்தி உங்க அபிப்ராயம் என்ன மாமா?"

"ஆதி இரண்டு கம்பெனிஸோட கொட்டேஷன்ஸ் தந்தா. எல்.எம்.பி. ப்ராஜெக்டில் ஐ.எஸ்.ஐ. மார்க் இல்லை. ஜப்பான் தொழில் நுட்பம் இருந்தாலும் அசெம்பில்டு பீஸ் எந்நேரமும் காலை வாரலாம்."



"ஸ்வஸ்திக் மெஷின் ஐ.எஸ்.ஐ. தரமுள்ளது. இரண்டு கலர் டையின் யூனிட்ஸ் இருக்கு. நேத்து செய்த தர பரிசோதனையும் திருப்திதான். மோட்டரும் நல்ல கண்டிஷனில் இருக்கும். ஆனா விலை தான் சற்று அதிகப்படி."

"பொருளின் தரம் சிறப்பாக இருக்கும் நிலையில் விலையும் அதிகரிப்பது இயல்பு தானே."

"உண்மை தான் ஆனால் நமக்கு கட்டுப்படி ஆக வேண்டுமே. ஒரு வியாபாரி என்றுமே தன்னை ஏழை யாய், முன்னேற துடிப்பவனாய்த் தான் எண்ண வேண் டும். வசதி வந்தவுடன் பணம் இருக்கிறது என்று அகலக் கால் வைக்கக் கூடாது. அது தொழிலுக்கு ஏற்றது அல்ல."

"ஒரு வியாபாரியாய் தங்களிடம் நான் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் மாமா" அவர் புன்னகைத்தார். "மாமா இந்த சில நாட்களில் நாம் பல விஷயங்களைப் பற்றி ஆலோசித்து இருக்கிறோம். அதேபோல் ஒரு பர்சனல் விஷயத்தையும் பேச வேண்டுமென..."

"சொல்லுங்க விஜய்."

சிறிது நேர மவுனத்தை கேடயமாக்கிக் கொண்டு ஆரம்பம் முதல் ஊருக்கு கிளம்பும் நேரம் ஆதிரா பேசியது வரை அனைத்தையும் ஒன்று விடாமல் கூறினான்.

"உண்மையா?" என் தாயின் மேல் ஆணையா சொல் றேன், எந்த வினாடி நான் ஆதிராவை என் மனைவியா ஏற்றுக் கொண்டேனோ அப்போதே மதுவின் மேல் நான் கொண்ட காதலை அழித்து விட்டேன்.

இதை உணராத ஆதிரா தன்னையும் வதைத்து, பிறரை யும் வதைக்கிறாள். இதற்கு ஒரு நல்ல தீர்வு உங்களால்

மட்டும் தான் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். பேசி விட்டு பெரியவரின் முகம் நோக்கினான்.

அவர் அதிர்ச்சியின் விளிம்பில் இருந்தார். பூப்போல மென்மையான மனம் கொண்ட ஆதிராவிடமா இத்தனை பேரர் உணர்ச்சியா?

மனதின் வேதனைகளை வெளியில் கொட்ட அவரால் இயலவில்லை. முகம் பாறையென உணர்வுகளை முழுவதும் துடைத்த வண்ணம் இருந்தது.

''என்ன மாமா எதுவுமே பேசாமல் இருக்கிறீர்கள். மதுராவின் தியாகத்தில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. தாயை போலவே குணம். இதையெல்லாம் உணராமல் உங்களின் ஜோடி பொருத்தம் பற்றி பேசியிருக்கிறேனே. மதுவிடம் கடவுளே, இரண்டு பேரையும் நான் ஒன்றாகத் தானே பார்த்தேன். ஆதியின் மனம் மட்டும் ஏன் இப்படி கொடூரமாய் மாறியதுன்னு புரியலையே?''

''நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க மாப்ளே. நாம ஊருக்குப் போனதும் பேசி நல்ல முடிவா எடுப்போம்.''

''அது சீக்கிரம் நடக்கணும். மாமா தவிரவும், மதுவும் ஆதியும் ஒரே வீட்டில் இருந்தால் தேவையில்லாத சிக்கல்களும், சங்கடங்களும் வரும். அதனால் நானும் ஆதியும் தனியா போயிடுவோம்.''

அவன் பேசுவது சரியெனபட்டது. சந்தானபாரதிக்கு மேற்கொண்டு பேசும் முன் அவரது அறையில் மூலை யில் இருந்த இண்டர்காம் அலறியது. எடுத்தார்.

''ஹலோ, சார் மிஸ்டர் சந்தானபாரதியின் பெயருக்கு பேக்ஸ் வந்து இருக்கு.'' ரூம் பாய் கொண்டு வர்றார்.

''தாங்க் யூ.''



பேசி முடிக்கவும், அறை கதவு இரண்டு முறை தட் டப்பட்டது.

''யெஸ் கமின்.''

வெள்ளை கவர் ஒன்றை அவரிடம் பவ்யமாய் நீட்டி விட்டுச் சென்றான், பணியாள் ஒருவன்.

அதை படித்தவரின் மனமும் முகமும் சுணங்கியது. ''என்னாச்சு மாமா...?'' என்றான் பதற்றமாய்.

பார்வதிக்கும், மதுராவுக்கும் நடந்தவற்றை பற்றி மிகவும் தெளிவாய் எழுதி அனுப்பி இருந்தார் கணபதி.

''நான் எதுக்குப் பயந்தேனோ? அது நடந்திடுச்சு. மாமா கிடைத்த நேரத்தை சரியா பயன்படுத்திக்கிட்டா. ஆனா அத்தைகூட...''

''இல்லை விஜய். நீலாவின் பிடிவாதம் ஆதியை விட ஆயிரம் மடங்கு அதிகம். உடனே நாம ஊருக்குப் போக ணும். புறப்படுங்க'' என்றார் சந்தானபாரதி.

எதிர்கொண்டு வரப்போகும் புயலைப் பற்றி அறியாமல் காற்று புன்னகையோடு தன் வாசத்தை ஊரெங்கும் தூவியது.

பார்வதி, மகளின் தலை முடியை உலர வைத்துக் கொண்டு இருந்தாள். ''மதும்மா, வாசு விஷயமாய் நீ என்ன முடிவு பண்ணியிருக்க? தெரியலைம்மா. என்னால் தெளிவான எந்த ஒரு முடிவுக்கும் வர முடியல. உன் நிலைமை எனக்குப் புரியுதுடி தங்கம். நான் உன்னைக் கட் டாயப்படுத்தல. எனக்கு ஒரு விஷயம் உறுதியாச்சு சொல்லு. பழைய காதல் நினைவில் இருந்து நீ மொத்தமா வெளியே வந்துட்டேயில்லே.''

அவள் தலையை அசைத்தாள்.

மண வாழ்வில் மற்றதை விட நம்பிக்கை தான் பிரதானம்.

உன் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையை வாசு வச்சிருக்கான். உன் மன ஆறுதலுக்கு நல்ல மருந்தாய் இருப்பான்ம்மா.

இத்தனை ரணங்களுக்கு மத்தியில் உன் வாழ்வு மட்டும் தான் எனக்கு ஆறுதல். தாயை நினைத்தால் அவளுக்கும் கவலையாத்தான் இருந்தது.

என் சந்தோஷம் தான் கெட்டு விட்டது. அம்மாவின் மன நிம்மதியை ஏன் தடை போட வேண்டும்?

எல்லாம் அறிந்தவன் வாசு. என், அன்பைப் பெறத் தவிப்பவன், நான் விரும்பியதை விட இது ஒன்றும் தவறில்லை. என் மனம் மெல்ல மெல்ல மாறும் என்பதை வாசு கட்டாயம் புரிந்து கொள்வார்.

மகள் என்ன பதில் சொல்லப் போகிறாளோ, கவலையோட காத்து கிடந்த தாயிடம் உங்கள் விருப்பம் என்று கூறி விட்டு எழுந்தாள்.

## 17

வாசலில் இரண்டு கார்கள் சர்ரென்று வந்து நின்றன. சாக்லேட் நிற மாருதியில் இருந்து இறங்கினார்கள். சந்தானபாரதியும், விஜய்யும், அதன் பின்னிருந்து காண்டஸாவில் கணபதியும், வாசுவும் வந்தனர். கணவரின் முகம் கண்டதும் பார்வதியின் கண்களில் இருந்து தாரை தாரையாய் நீர் பெருகியது.



"இதென்ன முட்டாள் தனம் மதும்மா, ஆதிராவைப் போல் நீயும் எனக்கு மகள் தானே. உன் வாழ்வும் எனக்கு முக்கியம் தானே மது. அவள் தான் சின்னப் பெண். நீ கூட என்னிடம் ஏன் சொல்லவில்லை. பார்வதி உன்னைப் போலவே அவளையும் நிராதரவாய் விட்டு விடுவேன் என்ற எண்ணமா?" அவர் கண்ணீர் பெருகிய கலங்கிய விழிகளோடு கேட்கவும் கணவரின் கால்களில் பணிந்து விட்டார் பார்வதி.

"உங்களை நம்பாமல் நானிங்கு வரவில்லை. ஏனோ என் கஷ்டத்தைச் சொன்னால் நீங்களும் வருந்துவீர்களேயென்று தான்..."

"விடு. சந்தானம் எதுக்கு பழையதைப் பேசிகிட்டு. அம்மா காபி எடுத்திட்டு வா.".

"எனக்கு ஒன்றும் வேண்டாம், பார்வதி. நீ நம்ம வீட்டுக்கு இனி அங்கே உனக்கு எந்த கவுரவக் குறையும் ஏற்படாது நான் பொறுப்பு."

"நடந்ததை நான் அவமானமா நினைக்கலைங்க. தன் கணவரை எனக்காக விட்டுத் தந்தாங்க. நீலாக்கா தன் மகளுடைய வாழ்விற்காக அவங்க செய்தது அது. மதுவால ஆதியோட வாழ்வு எங்கே கெட்டுடுமோன்னு அவங்க பயப்படறதில் நியாயம் இருக்கு. இது நாள் வரையில் நடந்ததெல்லாம் போகட்டும். இனி மேல் நீலா அக்காவிற்கும், ஆதிக்கும் உங்க அன்பு முழுமையா கிடைக்கணும். எனக்காக ஏதாவது செய்யணுமின்னு நீங்க எண்ணினால் மதுவுடைய வாழ்வுக்கு ஒரு நல்ல வழி செய்யுங்க அது போதும்."

மனைவியின் பதிலைக் கேட்டு நெகிழ்ந்தார் சந்தானபாரதி. அதைவிட, இதை அனைத்தையும் வாசலி

லேயே நின்று கேட்டுக் கொண்டிருந்த நீலா நேராக வந்து பார்வதியின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

அங்கிருந்தவர்களின் முகத்தில் எல்லாம் ஆச்சரியம் அப்பட்டமாய் வழிந்தது. ''என்னை மன்னிச்சிடு பார்வதி'' நீலாவின் உதடுகள் மட்டும் நொடிக்கு ஒரு முறை முனகின.

அனைவரும் அந்த நிகழ்வை ஒருவித ஆர்வத் தோடும், வியப்போடும் பார்த்துக் கொண்டிருக்க பார்வதி தான் நீலாவை சமாதானப்படுத்தினார்.

''என்னக்கா. இது? சின்னக்குழந்தை மாதிரி அழாதீங்க'' நீலாவின் கண்களைத் துடைத்து விட்டாள்.

''இல்லே பார்வதி நீ ரொம்ப பெருந்தன்மையான ஆதியோட பேச்சை நம்பி நான் எத்தனை பெரிய தவறு செய்திட்டேன். இப்போ உண்மை தெரிஞ்சி இங்கே ஓடிவரும் போது கூட, நெஞ்சின் ஓரம் சிறு சந்தேகவிதை முளைக்கப் பார்த்தது. ஆனா இங்கே வந்து உன் பேச்சைக் கேட்டதும், என்னுள் இருந்த கொஞ்ச நஞ்ச அழுக்கும் வெளுத்திடுச்சி.''

''அக்கா நடந்ததை எப்பவோ மறந்திட்டேன்.''

''உன்னைப் போலவே தான் மதுவும், அவளை கூட காயப்படுத்திட்டேனே நான்.'' மது நீலாவின் வாயை தன் விரல்களால் பொத்தினாள். ''நான் எப்பவுமே உங்க பொண்ணும்மா. என்னைக் கண்டிக்க உங்களுக்கு உரிமையில்லையா என்ன?''

''எத்தனை நல்ல உள்ளங்களை நான் ரணப்படுத்திட்டேன். நினைச்சிப் பார்த்தா என் மேலேயே எனக்கு வெறுப்பா இருக்கு. அளவுக்கு அதிகமா ஆதிரா மேலே நான் வைத்த பாசம் தான் என் கண்ணை மறைச்சிடுச்சி.''



''இப்போ மட்டும் எப்படி? உண்மை விளங்கிச்சு. பார்வதியையும், மதுவையும் எத்தனை அவமானப்படுத்தியிருக்கே? இதுதான் இத்தனை நாளும் நீ அவங்க மேல் கொண்ட பாசமா? நீலா கடைசியில் ஆதியோட சேர்ந்து பழி தீர்த்துகிட்டே இல்லே?''

''என்னைத் தயவு செய்து தவறா நினைக்காதீங்க. சூழ்நிலை என் புத்தியை மாத்திடுச்சுங்க. தவறு தான். அன்றைக்கு மாப்பிள்ளையோட நண்பன். மதன் வந்து ஆதியிடம் பேசியதை எதேச்சையாய் கேட்க நேர்ந்தது.''

''ஆரம்பத்தில் எனக்கு ஒன்றுமே புரியலை. ஆனா யோசிக்க யோசிக்க ஆதி விரிச்ச வலையில் நானும் சிக்கிக்கிட்டேன்னு புரிந்தது. இரண்டு நாள் கழிச்சு மறுபடியும் மதனை சந்திக்க நேர்ந்த போது அவன் சொன்ன விஷயங்கள் ஆதிராவுடைய இன்னொரு முகத்தை எனக்கு காட்டியது. இருந்தாலும், அவசரப்பட்டு ஏற்கனவே இரண்டு நல்ல உள்ளங்களை நோகடிச்சிட்டோம். அதனால இதில் ஆதியுடன் பேசி விட்டு முடிவு செய்வோம் என்று அவளிடம் பேசினேன்.''

''அத்தனையும் உண்மைன்னு அவள் சொன்னதும் அதிர்ந்தே போய் விட்டேன் நான்'' இன்று காலையில் மகளுக்கும், தாய்க்கும் நடந்த வாக்குவாதத்தை விளக்கினார் நீலா.

நீலாவின் கேள்விக்கு ஆதிரா வெறித்தனமாய் ஒரு முறை சிரித்து விட்டு ''மதுவும், விஜய்யும் விரும்புவது எனக்கு ஏற்கனவே தெரியும். பாவம் மது! எனக்காக தியாகம் செய்வதாய் நினைத்துக் கொண்டு காதலையும் துறந்து இப்போது பழியையும் சுமந்து கொண்டு தவிக்கிறாள். இனி மேல் மதுவின் வாழ்வில் நிம்மதி என்ற

சொல்லே இருக்காது. மகள் படும் வேதனையைக் கண்டு அந்த பார்வதியும் துடிப்பாளே?''

''அடிப்பாவி உனக்கு ஏன் இந்த வெறி? எதுக்காக இதையெல்லாம் செய்தே?''

''எல்லாம் உனக்காகத்தான். எத்தனை இரவுகளை நீ கண்ணீரிலே கழிச்சியிருப்பே. அதை எல்லாம் நீ வேணுன்னா மறந்து இருக்கலாம். ஆனால் என்னால மறக்க முடியாது. பதினாலு வருஷமா வனவாசம் மாதிரி தவக்கோலம் பூண்டு இருந்தியே? இளவரசியாய் உலா வர வேண்டிய என்னை பிறத்தியாருடைய கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாக்கியது யாரு? என் காதுபடவும், முதுகிற்கும் பின்னாடியும் ஈட்டியென மாறி எத்தனை சொற்கள். காயப்படுத்தி இருக்கும். அந்த வலிவேதனைக் கெல்லாம் காரணமானவங்க அவங்க தானே. அதை யெல்லாம் அவங்க அனுபவிக்க வேண்டாமா?'' ஆதிரா.

''இதுக்குப் பதிலாக நீ அவங்களுக்கு விஷம் தந்து இருக்கலாம்'' நீலா.

''அது ஒருநிமிட நேர வேதனை இது ஆயுசுக்கும் வலியல்லவா இது தான் எனக்கு வேண்டும்'' ஆதிரா.

''தப்பு ஆதி நீ செய்த தவறுக்கெல்லாம் என்னைக் காரணகர்த்தா ஆக்காதே. பார்வதி ரொம்ப நல்லவ. இத் தனை வருடத்திலே அவ மதுராவைக் காட்டிலும் உன்னைத் தான் பாசமா நடத்தியிருக்கா! நீ வாழ வேண்டிய பொண் ணும்மா நல்லவங்க வயித்தெரிச்சல் வேண்டாம்டி தங்கம். இப்போ அவங்க உங்கப்பாவுடைய நண்பர் கணபதி வீட்டில் தான் இருக்கிறாங்க! வா, போய் நடந்த தவறைச் சொல்லி மன்னிப்பு கேட்டு வருவோம்'' நீலா.



''மன்னிப்பா? அது என் சுயமரியாதை - கவுரவத்தை கெடுக்கிற விஷயம் நீ இத்தனை ஏமாளியா இருக்கிறதால் தானம்மா எல்லாரும் உன்னை இத்தனை நாளா ஏமாத்தி இருக்காங்க'' ஆதிரா.

''இதுதான் உன் முடிவா?'' நீலா.

''நான் அவர்கள் மேல் கொண்ட வெறுப்பை இனி மேல் எப்போதும் மாற்றிக் கொள்ளவே முடியாது.

விஜய்யைப் பற்றியும், அப்பாவைப் பற்றியும் நீ கவலைப்பட வேண்டாம்'' ஆதிரா தீர்மானமாய் சொல்லி விட்டு சென்றவளை மலைப்புடன் பார்த்த நீலா நேராக பார்வதியின் வீட்டிற்கு வந்து விட்டாள்.

# 18

''ஆதிராவோட மனதை மாற்ற முடியுங்கிற நம்பிக்கை எனக்கு இல்லை.'' அழுகையை துணைக்கு அழைத்தபடி கூறிய பார்வதி, ''கவலைப்படாதீங்க அக்கா காலச்சக்கரம் எப்போதும் ஒரே பக்கமா சுத்தறது இல்லை'' என்றாள்.

''எத்தனை நல்லவ நீ! உன்னைப் போய்...'' மேலே வார்த்தைகள் வெளிவராமல் திணறிய மனைவியின் தோளில் ஆதரவாய் கை வைத்தார் சந்தானபாரதி.

''விடு நீலா! நடந்ததில் உன் தவறு மட்டும் இல்லை. சூழ்நிலை தான் எல்லாரையும் குற்றவாளி ஆக்கிவிடு கிறது. எப்போது நீ உணர்ந்திட்டியோ இனிமே அதுவே போதும்.''

''அப்போ நீங்க என்னை...''

''மன்னிச்சிட்டேன் நீலா, என்னதான் இருந்தாலும் நீ என் மனைவி. என்னில் சரிபாதி. உன் மான அவமானங்களில் எனக்கும் பங்குண்டு! தவறுதல் மனித இயல்பு. ஒரு காலத்தில் இதே குற்ற உணர்வோடு தவித்தபடி நான் உன் முன்னால் நின்றபோது நீ என்னை ஏற்றுக் கொள்ளவில்லையா?'' அவரின் உருகிய பேச்சும் அதில் இருந்த ஆறுதலும் அரவணைப்பும் விஜய்யை அசைத்தன.

நீலா விஜய் முன் வந்தாள்.

''மாப்ளே! உங்களைக் கூடத் தவறா நினைச்சிட்டேன். ஆதியோட உங்க மணவாழ்வு சுகிக்கலைன்னு எனக்குத் தெரியும். எந்தவொரு கட்டாயத்திற்கும் நான் உங்களை ஆளாக்க விரும்பலை! பழி வாங்கும் எண்ணத்தோட மணமாலை சூடியவள் நல்ல படியா குடித்தனம் செய்வான்னு எனக்கு நம்பிக்கை இல்லை.''

''இல்லை அத்தை! ஆதிரா கெட்டவள் இல்லை. கோபம், தவறான தூண்டுதல், தேவையில்லா கசப்புகள் இவையெல்லாம் சேர்ந்துதான் அவள் மனச்சுவற்றை கரையான் போல் அரித்து புண்ணாக்கி விட்டது. அதற்கு மருந்திடாமல் அதை மேலும் அவளே ரணமாக்கி விட்டாள்.''

''அவ குழந்தை மாதிரி, குழந்தைகள் கூட, நாம கண்டித்தால் அதே தவறைத் திரும்பத் திரும்பத்தான் செய்யும். அதேபோல்தான் ஆதிராவும்.''

''என் மகளைப் புரிஞ்சுக்கிட்டதற்கு ரொம்ப சந்தோஷம் விஜய்! ஆனா இத்தனை வன்ம குணம் மாறுமா?''

''ஏன் இப்போ அத்தை மாறலையா மாமா? ஆதியின் காரணமாக தவறு செய்த அத்தை மாறியதற்கு எப்படி



பார்வதி அத்தையின் அன்பு காரணமோ, அதேபோல் நானும் என் அன்பாலேயே ஆதியை மாற்றுவேன். நான் தரும் திகட்ட திகட்ட அன்பு அவளை நிச்சயம் மாற்றும்.''

''விஜய் சொல்றதும் உண்மைதான் அக்கா. நல்லா யோசிச்சுப் பாருங்க ஆதிரா எதனால எங்களை வெறுக்கிறா? பெத்தவங்க அன்பை நானும் என் மதுவும் பங்கு போடப்போறாங்கிற எண்ணம் தானே? அந்தக் கோபத்தில் தானே இத்தனை கசப்புகளும்?''

''நீங்களும், அவரும் ஆதிரா கூடவே இருங்க, உங்களுடைய அன்பு முழுவதும் அவளிற்குத் தான்னு தோணுங்கிற அளவிற்கு நடந்து கொள்ளுங்கள். அன்பினால் முடியாத காரியமே இல்லை, இதை நான் சொல்லலை நம்ம மகாத்மாவே சொல்லி இருக்கிறார். அந்த நம்பிக்கை அவளைக் கூடிய விரைவில் மாத்திடும். அந்த வசந்த நாளை நாங்களும் எதிர்பார்க்கிறோம்.''

''அப்படின்னா மதுவுடைய வாழ்க்கை?'' சந்தான பாரதி...

''மதுவைப் பற்றி நீ வருந்தாதே பாரதி நாம ஏற்கனவே பேசியபடி அவளை என் மருமகள் ஆக்கிட நான் முடிவு பண்ணியாச்சு. அதற்கு இரண்டு பேரிடமும் இருந்து கிரீன் சிக்னலும் தந்தாச்சு.''

எல்லாருடைய முகத்திலும் ஒரு வித நிம்மதி பரவியது. விஜய் நேராக வந்து வாசுவின் கைகளைப் பற்றிக் கொண்டான். ''ரொம்ப நன்றி வாசு. மதுரா ரொம்ப நல்ல பொண்ணு, நானும் அவளும் மனசொத்து பழகினோமே தவிர, ஒரு முறை கூட வரம்புமீறிப் போனதில்லை.''

''நீங்க இத்தனை சொல்லணுங்கிற அவசியமே இல்லை விஜய்! மது என் உயிர், தேவதை! அவளை என்

கண்ணுக்குள் வைத்து நான் பார்த்துப்பேன்" விஜய்யின் கண்கள் கலங்கின.

அவன் வெளியேறவும், வாசு சந்தானபாரதியிடம் வந்து, "மாமா, ஆதிரா மட்டுமல்ல நான் கூடத் தாய்ப் பாசத்திற்கு பல காலம் ஏங்கியவன் தான். மதுவின் புண்ணியத்தில் அது எனக்கு கிடைத்து இருக்கிறது. அத்தையும் எங்க கூடவே இருக்கட்டும்."

"இறுதியில் பார்வதி உன் அன்பு வென்றுவிட்டது" அவள் கணவரைக் கண்டு மெல்ல முறுவல் செய்தாள். அவர்கள் கிளம்பவும் வழியனுப்பும் விதமாய் கணபதியும், பார்வதியும் பின்னாடி செல்ல, மதுரா அறைக்குள் சென்றாள்.

வாசுவும் அவள் பின்னாலேயே சென்றான். ஜன்னலில் திரைக்கம்பிகளுக்கு முகம் காட்டியபடி நின்றிருந்தவளிடம், "மது என் விருப்பத்தை கூறிவிட்டேன். உன்னை கேட்காமலே நீயாக ஒரு வார்த்தை சரி என்று ஒப்புக் கொண்டால்... மது... உன் மவுனம்தான் பெரும் கல்லைச் சுமப்பது போல் சுமையாய் இருக்கிறது. அதுவே குற்ற உணர்வாய் மாறி என்னை ஆட்டிப்படைக்கிறது. தயவு செய்து உன்மனதை வெளிப்படையாய் உடைத்துக் காட்டிவிடு."

ஒரு கம்பீரமான ஆண்மகனின் கெஞ்சல்.... மதுரா திரும்பினாள். வாசுவின் கண்களில் நீர் தளும்பியது. அவன் கண்கள் மிதப்பதைப் போல் பிரமை ஏற்படுத்தியது. அன்றைய தினம் அவள் காதலுக்கு மறுப்பு தெரிவித்தபோது பார்த்த கண்கள் அல்லவா, அது! விருந்தில் தன்னையும் மறந்து அவன் அணைத்த போது தனக்கு சொந்தமாகும் பொருள் இது இல்லை என்ற ஏக்கம் சுமந்து கலங்கிய கண்கள் அல்லவா! மதுரா அவனை நெருங்கி நடந்தாள், அவள் கையில் சிகப்பின் வர்ணங் குழைத்த பேழையொன்று முளைத்து இருந்தது. அதில் அவன் அளித்த தங்கச் சங்கிலி வாசுவைப் பார்த்து சிரித்தது.



மதுரா அதையெடுத்து கழுத்தில் அணிந்தாள். "இதை விடவும் என் மனதை தெரிவிக்க வேறு வழியில்லை வாசு, சில உண்மைகளை உரக்கப் பேசினால் சுகம் இருக்காது.

"உங்களுடன் நான் துவங்கிடப் போகும் வசந்தத்தை - அந்த இனிய நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்."

மதுவின் பேச்சில் தன்னையும் மறந்து புன்னகைத்தான் வாசு! அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டு, அவன் அணைப்பிலும் ஐக்கியமானாள் மதுரா.

அந்தச் சிரிப்பொலியைக் கேட்ட, பெற்ற இரு மனங்களும் வசந்தத்தின் ஓர் நாளை நோக்கி காத்திருக்கத் துவங்கின. நாமும் அவர்களுள் இணைவோமே!